www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

### இனி நமக்கென்ன?

எல்லாஞ் சரிதானே இனியென்ன சந்திரிகா
நல்லாள் வந்துவிட்டாள் நமையாள – பொல்லார்
போய்த்தொலைய பூமியெலாம் பூப்பூக்கும்: புளுகேறி
நாய்வாலும் நிமிர்ந்து எழும்

–ஈழமோகம்

## தேர்தல் வெற்றிக் களிப்பில்–

# தமிழர் மீது தாக்குதல்!

## கடைகள் தீக்கிரை! தொழிலாளி கொலை!

**வெற்றி பெற்ற பொ.ஐ.மு. ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் பதவியேற்பு வைபவத்தினை கொண்டாடுவதற்காக வெடி கொளுத்துமாறு தமிழ் வர்த்தகர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டும், அவர்களது கடைகள் தீக்கிரையாக்கப்பட்டும் தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டதுமான அதிர்ச்சிதரும் சம்பவம் ஒன்று மஹவுஸ்ஸ தோட்டப்பகுதியில் நடந்துள்ளது. இச்சம்பவத்தின் போது ஐ.தே.கவுக்கு வாக்களித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மஹவுஸ்ஸ கடைத்தெருவிலிருந்த தமிழ் வர்த்தகர்கட்கு சொந்தமான எட்டுக்கடைகள், பொ.ஐ.மு. ஆதரவாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும், இக்கடைகளுக்குள்ளேயே இவ்வர்த்தகர்களது குடும்பங்கள் வாழ்ந்து வந்ததால் மொத்தமாக 43 பேர் இன்று வீடுவாசலற்ற அகதிகள் ஆகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கடைகளுக்கு தீ வைத்த காடையர்கள் தமிழ் கடைகளைத் தேடி அவற்றுக்கு மட்டுமே தீ வைத்துள்ளனர். மஹவுஸ்ஸ தோட்டத்திற்கும் கெலேபொக்க தோட்டத்திற்கும் இடையில் அமைந்திருக்கும் இக்கடைத்தெருவில் நடந்த இச்சம்பவத்தின் போது பொன்னையா பொன்னன் (45) என்ற தொழிலாளி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின்போது மரணமானார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இச்சம்பவம் பற்றிய எமது மலையக நிருபர் தரும் தகவல்கள் வருமாறு:

### வெற்றியைக் கொண்டாட வெடி கொளுத்து

12ம் திகதி சனிக்கிழமை புதிய ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் பதவியேற்றுக் கொண்டிருந்த நேரம். மஹவுஸ்ஸவின் அயல் கிராமமான மகாபத்தனவை சேர்ந்த 8 அல்லது 9 பேர் அடங்கிய சிங்கள காடையர் கூட்டம் ஒன்று கடைத்தெருவுக்கு வந்தது. கடைத் தெருவிலுள்ள தமிழ் வர்த்தகர்களை, சந்திரிகாவின் வைபவத்தை கொண்டாடும் முகமாக வெடி கொழுத்துமாறு அதிகாரம் செய்தது. இந்த அதட்டலை ஏற்றுக் கொண்டு வர்த்தகர்கள் வெடி கொழுத்தினார்கள் என்ற போதும், இவ்வர்த்தகர்களை 'நீங்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களே' என்று கூறி அக்காடையர் கூட்டம் அவர்களுடன் வாய்ச்சண்டையில் இறங்கியது. அத்துடன் அக்கடைத்தெருவிலுள்ள எல்லாத் தமிழர்களும் ஐ.தே.கவின்ரே என்றும் அவர்கள் சத்தமிட்டனர்.

இச்சம்பவத்தின் பின் குடித்து விட்டு கெலபொக்க தோட்டத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் இளைஞருடன் கடைத்தெருவுக்கு வந்தனர். குமார் என்பவருக்குச் சொந்தமான கடைக்கு சென்று அவரை அழைத்து கிருஷ்ணன் என்ற இந்த இளைஞன் பற்றி ஏதேதோ விபரங்கள் கேட்டனர். குமார் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே இவ் இளைஞர் அவர்களால் தாக்கப்பட்டார். கிருஷ்ணனை காப்பாற்ற முனைந்த குமாரையும் அவர்கள் தாக்க முனைந்தனர். இதேவேளை பஸ்ஸொன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த கிருஷ்ணனின் தமையனார், இச்சம்பவத்தை கண்டு இறங்கி வந்து தம்பியாரை பாதுகாக்க முனைந்தார். ஆயினும் காடையர்கள் தமையனையும் பலமாக தாக்க தொடங்கினர். எப்படியோ கடைத்தெருவில் நின்றவர்களால் இவ்விருவரும் பாதுகாக்கப்பட்டு தோட்டத்துக்கு அனுப்பப்பட்டனர். இதன்பின், இச்சம்பவத்தை அறிந்த 100க்கு மேற்பட்ட இத்தோட்டத்தின் தொழிலாளர்கள் கடைத் தெருவுக்கு வந்த போது இவ்வாறு இவர்கள் வந்ததைத் கண்டு இக்காடையர் தலைமறைவாகி விட்டனர். இத்துடன் பிரச்சினை தீர்ந்தது என்ற நம்பிக்கையுடன் இத் தொழிலாளர்கள் தோட்டத்திற்கு திரும்பி விட்டனர்.

### பொலிஸாரின் 'பாதுகாப்பு'

ஆனால் சில நிமிடங்களுக்குப்பின் இந்தக் காடையர் கூட்டம் மீண்டும்

## பூனைக்கு விளையாட்டு!

அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளையடுத்தும், மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் சில தாக்குதல் சம்பவங்களையடுத்தும், மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் வாவி மீன்பிடியையே முழுவதுமாக நம்பியிருந்த குடும்பங்கள் இன்று பட்டினியால் வாடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக அண்மையில் புதிய அரசாங்க அதிபர் அ.கி.பத்மநாதனிடம் வினவிய போது, மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார். இதை மட்டக்களப்பின் இராணுவ அதிகாரியும் உறுதிப்படுத்தினார். ஆனால் மறுநாள் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் பொலிஸாரினால் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். விடயத்தை ஆராய்ந்த போது பொலிஸாருக்கு மீனவரை மீன்பிடிக்க அனுமதிக்கும் உத்தரவு வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் உண்மையில் மட்டக்களப்பில் பொலிஸ், இராணுவம் என்பவற்றுக்கிடையில் சரியான உறவு, தொடர்பு என்பன இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இதனால் ஒருவருக்கு எதிராக ஒருவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்களுடைய அதிகாரப் போட்டியில் நசுக்கப்படுபவர்கள் இங்குள்ள பொது மக்களே. இதே போன்றுதான் மற்றுமொரு சம்பவம்; படுவான்கரைக்கு 50 லீற்றர் டீசல் அனுமதிப் பத்திரம் பெறாமல் எடுத்துச் செல்லலாம் என இராணுவம் கூற சோதனை முகாமில் இருந்த பொலிசார் அதை அனுமதிக்கவில்லை.

பூனைக்கு விளையாட்டு. சுண்டெலிக்கு சீவன் போகிறது!

## கைத்தறி விநியோகத்தில் மோசடி!

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்களுக்குச் சமமான அளவில் சனத்தொகையைக் கொண்ட ஒரு பிரதேச செயலாளர் பிரிவு கல்முனை. இங்கு முஸ்லீம்களுக்கென ஒரு பிரதேச செயலாளர், தமிழ் மக்களுக்கு ஒரு பிரதேச செயலாளர் என இரு பிரிவுகள் உண்டு.


கல்முனைத் தமிழ்ப்பகுதியில் புடவைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கைத்தறிகளை வினியோகிக்கம் திட்டம் ஒன்று வட கிழக்கு மாகாணசதபயின சிறுகைத்தொழில் திணைக்களத்தினால் அமுல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு கல்முனை தமிழ்ப் பகுதி பிரதேச செயலாளர் அருள்ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 684 கைத்தறிகள் தயாரிக்கப்பட்டு உரியவர்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் பிரதேச செயலாளராக இருந்த அருள்ராஜாவினால் 164 தறிகள் மாத்திரமே செய்து ஒப்படைக்கப்பட்டன. ஆனால் மொத்தமாகக் கொடுக்கப்பட வேண்டிய 684ம் விநியோகிக்கப்பட்டு விட்டதாக அறிக்கை தயாரித்து திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு, 520 தறிக்குரிய சுமார் 6.5 இலட்ச ரூபாய் பணம் பிரதேச செயலாளர் அருள்ராஜாவினாலும், இக்கைத்தறி வினியோகத்துடன் தொடர்புள்ள ஏனைய மூன்று உத்தியோகத்தர்களினாலும் மோசடி செய்யப்பட்டுள்ளது.

பின்பு இவ்விடயம் வெளியில் தெரிய வந்ததையடுத்து தற்போது சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் உட்பட ஏனைய மூன்று உத்தியோகத்தர்களும் வேலையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பிரதம ஆசிரியர்: சேரன்

# வரலாற்றுச் சாதனை!

வரலாறு காணாத வெற்றியைப் பெற்று ஜனாதிபதி பதவி ஏற்றுள்ள திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் பதவியேற்பு வைபவம் முழுநாட்டிலும் பெருமகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் விதத்தில் அமைந்திருந்தது. 17வருட காட்டாட்சிக்கு முடிவு கட்டி, பெரும்பான்மையான மக்களின் மனநிம்மதிக்கு கட்டியம் கூறும் நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சி பலராலும் அவதானிக்கப்பட்டது.

வெற்றி பெற்ற ஜனாதிபதி தனது வெற்றிப் பெருமிதத்துடன் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய முக்கியத்துவம் வாய்ந்த உரையை அனைத்து தினசரிகளும் முன்பக்கச் செய்தியாக பிரசுரித்திருந்தன.

''இந்த வெற்றி தனிப்பட்ட என்னுடைய வெற்றி அல்ல, மாறாக இலங்கையின் ஒவ்வொரு சமுதாயத்தினதும், கடந்த காலத்தின் இருள்மண்டிய சகாப்தத்திலிருந்து விடுபடுவற்காகச் செய்யப்பட்ட கடும் உழைப்பிற்கும் தீர்மானத்திற்கும் கிடைத்த வெற்றியாகும்' என்று அவர் தனது பேச்சில் தெரிவித்திருந்தார்.

வழமையாக வெற்றி பெறுகின்ற ஒவ்வொரு வரும் இவ்வாறான தொரு பேச்சை நிகழ்த்துவது ஒரு சடங்காக நடந்து வருகின்ற போதும் புதிய ஜனாதிபதியின் பேச்சில் நிதானமும், சொற்களைத் தேர்தெடுத்து பாவிக்கும் பொறுப்புணர்வும் தெளிவாகத் தெரிந்தன.

தனது வெற்றிக்குக் காரணமான ஒவ்வொருவருக்கும் அவர் நன்றி கூறத் தவறவில்லை.

ஆனால், இவ்வுரையைக் கேட்டுக் கொண்டிருந்த போது நெருடிய முக்கியமான விடயமும் ஒன்று இருந்தது.

ஏற்கனவே பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட அதே கருத்தை அவர் திரும்பவும் கூறியது தான் - சிறுபான்மை தேசிய இனங்களைச் சார்ந்த மக்களின் அமோக ஆதரவின் பின்னும் அவர் இவ்வாறு கூறியதுதான் இந்த நெருடலுக்குக் காரணம்:

அவர் கூறினார்;

'சமாதானம் குறித்த எங்கள் அணுகுமுறை, சிங்கள மக்களைப் பாதுகாப்பது அவர்களது உரிமைகளை உறுதி செய்வது என்பதில் முக்கிய கவனம் செலுத்தும் அதேவேளை பிற சமுதாயத்தினரும் சமமாகவும் சுயமரியாதையுடன் நடத்தப்படுவதை அங்கீகரிப்பதாகவும் அமையும்'

ஜனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்டதும். நாட்டின் முழு மக்களாலும் தெரிவு செய்யப்பட்டவர் என்ற முறையில் அவரது இந்த அறிவிப்பு தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஒருவகை ஏமாற்றத்தையே தோற்றுவித்தன.

ஆம், தமிழ், முஸ்லீம் மலையக மக்களதும் மற்றுமுள்ள சமுதாயங்களதும் உரிமைகளைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்கள மக்களது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று திரும்பத் திரும்ப உறுதிமொழி வழங்குவது, ஒரு ஜனாதிபதி, அவர் சிங்கள மக்களின் ஜனாதிபதிதானா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது.

இத்தகைய பேச்சு, மற்றைய தேசிய இனங்களின் உரிமை, சிங்கள மக்களின் இறைமையையும் உரிமைகளையும் பறிப்பதனால் மட்டுமே வழங்கப்படலாம் என்ற எண்ணக்கருவிலிருந்தே வருகின்றது என்பது மிகவும் துர்ப்பாக்கியமானதாகும்.

இதுவரை கால ஜனாதிபதிகளில் எல்லோரையும் போலவேதான் புதிய ஜனாதிபதியும் -இவ்விடயத்தில் - இருக்கப் போகிறார் என்ற அச்சத்தையே இவை தருகின்றன.

தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகள்- மறுக்கப்பட்ட அவர்களது அரசியல், சமூக வாழ்வியல் உரிமைகள் வழங்கப்படுவது சிங்கள மக்களை எந்தவிதத்திலும் பாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்விடயத்தை இனங்களுக்கிடையேயான முரண்பாடாக மாற்றியதே அரசியலில் பிழைப்பு நடாத்தியவர்கள்தான். ஜனாதிபதி அவர்களின் தந்தை யார் இவர்களின் முக்கியமானவர்கள். உண்மையில் தமிழ் முஸ்லீம் மக்களின் உரிமைகளை பறிப்பதன் மூலம் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக காட்டிக் கொண்ட முன்னைய அரசியல்வாதிகளின் வரலாற்றிலிருந்து புதிய ஜனாதிபதி தனது வரலாற்றை மாற்றியமைக்க விரும்பினால், அவர் இத்தகைய பேச்சுக்களை நிறுத்த வேண்டும்.


ஒற்றை (unitary) ஆட்சிக்குப் பதில் கூட்டாட்சியை (unified) உச்சரிக்கும் அவர் இவ்விடயத்தில் கவனமாக இருக்காவிட்டால். எல்லாரையும் போலவே அவரும் தனது வரலாற்றில் வரலாறு காணா மக்கள் ஆதரவு என்ற பலத்தை வைத்துக் கொண்டே அரசியல் குற்றமிழைத் தவராவார்.

மக்கள் தமது கடமையை முடித்து விட்டார்கள். இனியுள்ள கடமை ஜனாதிபதியிடம்.

எதிர் காலத்தில் வரலாற்றுச் சாதனையாக குறிப்பிடப்படப்போகும் ஜனாதிபதி பதவியைத் துறப்பதில் அல்ல,இந்த விடயத்தில் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதில் தான் அவரது வரலாற்றுச் சாதனை தங்கியுள்ளது.

அவர் என்ன செய்யப் போகிறார்?

# அபத்தமான குற்றச்சாட்டு இது!



சரிநிகர் 57வது இதழில் பிரான்ஸ் சுதா என்பவரது கடிதத்தில் என்னைப் பற்றிய சில குறிப்புக்கள் வந்துள்ளன. கடந்த காலத்தைய எனது எழுத்துக்கள் நடவடிக்கைகள் பற்றித் திரிபு படுத்தியும், தவறாகவும் அவர் குறிப்புக்களை எழுதியுள்ளார். கருத்தாடல் பற்றிய விளக்கங்கள், விளக்கமின்மைகள் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. சனநாயக உலகில் எந்த எழுத்தாயினும் அதற்குக் கட்டுப்பட வேண்டியது தர்மம். ஆனால் அந்த நிலையில் தரம் பார்த்து வாதிக்க முடிவதில்லை. எனவே கடிதத்தின் அந்த அம்சங்களைப் பற்றிப் பேசாது, எனது பொது நிலை நடவடிக்கையொன்று பற்றிய அவரது குறிப்புக்குப் போதிய ஆதாரபூர்வமான விளக்கம் கோருவது அவசியமாகிறது.

அது அண்மையில் டென்மார்க்கில் ''அகதிக்கு எனச் சேர்த்த பணத்தைப் புலிகளிடம் ஒப்படைக்க மாட்டேன் என வாங்கிச் சென்று புலியிடம் ஒப்படைத்தது...'' என வரும் குறிப்பாகும்.

1992 டிசம்பரில் நான் டென்மார்க் சென்றிருந்தது உண்மை. ஈழத்தமிழ் அகதிகளின் நிலைமை பற்றி உரையாடியதும் உண்மை. ஆனால் நான் எவரிடத்திலிருந்தும் பணம் சேர்க்கவுமில்லை. பெறவுமில்லை.

சுதா என்பவர் தாம் எழுதியுள்ளதை நீருபிப்பதற்கு யாரிடமிருந்து பணம் சேர்க்கப்பட்டது, எதற்கென்று பெறப்பட்டது, தொகை எவ்வளவு, கொடுக்கப்பட்டதற்கான அத்தாட்சி யாது, பெறப்பட்டதாகக் கூறப்படும் பணம் கைமாறிக் கொடுக்கப்பட்டதற்கான சாட்சியங்கள் எவை என்பனவற்றைத் திட்ட வட்டமாகத் தெரிவிக்க வேண்டும்.

சனநாயக முறையிலான எந்தக் கருத்தாடலிலும் என் பெயர் குறிப்பிடப்படுவதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அகதிகள் பிரச்சினை போன்ற ஒரு விடயம் பற்றி இவ்வாறு பொறுப்பற்ற முறையில் எழுதுவது தவறு. தனிமனித சுதந்திரத்தைப் பேண விரும்பும் பத்திரிகைகள் இதுவிடயத்தில் மிகக்கவனமாக இருத்தல் வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாகத் தாங்கள் ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

கா.சிவத்தம்பி
கொழும்பு

# ஆறு மாதத்தில் சந்திரசேகரனும் அமைச்சர்?

இ.தொ.காவின் தலைவர் தொண்டமானுக்கு பொ.ஐ.மு. அரசு அமைச்சர் பதவியொன்றை வழங்கியதையடுத்து, தனக்கும் அமைச்சர் பதவியொன்று வழங்கப்பட வேண்டுமென்று மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் பொ.ஐ.மு. அரசிடம் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

செப்.,15ம் திகதியன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவைச் சந்தித்துப் பேசிய சந்திரசேகரன் தொண்டமானுக்கு வழங்கியதைப் போன்று அமைச்சர் பதவியியோன்று தனக்குத் தரப்படாதவிடத்து அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளுமாறு கட்சி தன்னிடம் கோரியுள்ளதாகக் கூறியுள்ளார்.

தொண்டமானை•அமைச்சராக்கியதன் மூலம் தன்னையும் தனது கட்சியையும் பொ.ஐ.மு. அரசு ஒதுக்கி விட்டது எனவும் சந்திரசேகரன் ஜனாதிபதியிடம் முறையிட்டிருக்கின்றார்.

கடந்த ஓகஸ்டில் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்காமல் அரசாங்கத்தை அமைக்க சந்திசேகரன் அளித்த ஆதரவைத் தான் மறக்க

→16

# தேர்தல்...

வந்து தமிழ் வர்த்தகர்களது கடைகளிலிருந்த பொருட்களை எடுத்து எறிந்து குழப்பம் விளைவிக்க தொடங்கியது. இவ்விடத்திற்கு தேர்தலையொட்டிய குழப்பங்களில் ஈடுபடவேண்டாம் என்று அறிவிக்கும் ஒலிபரப்பு பொலிஸ் வாகனம் இவ்விடத்திற்கு வந்தது. இந்த இடத்தில் ஒரு பொலிஸ்காரரை இறக்கி நிலைமையை கவனிக்கும்படி கூறிவிட்டு வாகனம் கெலபொக்க பக்கமாகப் போய்விட்டது. இந்தப் பொலிஸ்காரர் எவ்வளவோ முயன்றும் நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆயுதம் எதுவுமற்ற அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே காடையர்கள் கடைகளுக்குத் தீவைக்கத் தொடங்கினர். இதைக் கேள்விப்பட்டு கடைத்தெருவுக்குத் தயாரான கெலபொக்க தோட்டத்து தொழிலாளர்களை அங்கு வரவிடாமல், அவ்வாகனத்தில் சென்ற பொலிஸார் தடுத்து விட்டனர். இவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் தீர்த்துள்ளார்கள். ஆயினும் கடைத்தெருவில், கலகம் நடந்த இடத்தில் இறக்கிவிடப்பட்ட பொலிஸ்காரரிடம் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை.

## தமிழர் கடைகளுக்கு மட்டும் வைத்த தீ:

ஐ.தே.கவுக்கு வாக்களித்தது தான் இக்கடைத்தெருவிலுள்ள தமிழர்கள் செய்த குற்றம் என்று இக்காடையர்களால் கூறப்பட்டது. ஆனால் இத்தகவல் உண்மையானதல்ல. இக்கடைத்தெருவின் இரு தமிழ் வர்த்தகர்கள் பொ.ஐ.முவின் வெற்றிக்காக ஜனாதிபதி தேர்தலில் மிகவும் தீவிரமாக உழைத்தவர்கள். தவிரவும் அங்குள்ள பல சிங்கள கடைக்காரர்கள், ஐ.தே.கவுக்காக தீவிரமாக பாடுபட்டவர்கள். இக்காடையர்களால் எத்தகைய தாக்குதலுக்கும் இவர்கள் உள்ளாக்கப்படவில்லை. ஒரு தமிழருக்கு சொந்தமான கடை சிங்களவருக்கு சொந்தமான கடையுடன் இணைந்து இருந்ததால், சிங்களவரது கடைக்கு தீ பரவாமல் பாதுகாப்பதற்காக, தமிழரது கடையின் கூரை முன்னமேயே கழற்றப்பட்ட பின்னரே தீ வைக்கப்பட்டிருக்கின்றது. எனவே இச்சம்பவம் வெறும் தேர்தல் கலவரம் என்று கருத இடமில்லை என்றே தோன்றுகிறது. தேர்தலைச் சாட்டாக வைத்து தமிழர்மீது நடாத்தப்பட்ட தாக்குதலாகவே இது தோன்றுகிறது.

## ஒருவர் கொலை 43 பேர் அநாதரவு:

இச்சம்பவத்தின்போது தமிழருக்கு சொந்தமான 8 கடைகள் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இக்கடைகளின் சொந்தக்காரர்கள், இக்கடைகளிலேயே தங்கி இருந்தவர்கள் என்பதால் இப்போது கிட்டத்தட்ட 43 பேர் வீடுவாசல் அற்றவர்களாகியுள்ளனர்.

பொன்னன் பொன்னையா என்ற 45 வயதான கெலபொக்க தோட்டத்தினை சேர்ந்த தொழிலாளி ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சையின் போது மரணமானார். அவரது உடலில் இரண்டு கத்திக் காயங்கள் காணப்பட்டதாகவும் தப்பி ஓடிப் போகும் போது இரத்தப் பெருக்கால் மயங்கி வீழ்ந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகின்றது. இரவு 7 மணியளவிலேயே அவரை ஒரு பாதிரியார் கண்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

இந்தக்கடைத்தெரு 1983 கலவரத்தின் போதும் தாக்கப்பட்ட ஒன்றாகும். எப்படியோ தமிழர்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாப்பதில் பல சிங்களவர் தமது உயிரையும் பாதுகாப்பையும் பற்றிக் கூடப் பொருட்படுத்தாமல் ஈடுபட்டனர் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒரு பௌத்த குரு உட்பட ஒன்பது பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டு கண்டியில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசியவாதம் இனவாதமா?

சரிநிகர் ஆசிரிய பீடம்

'சரிநிகர் தமிழ் இனவாதத்தை தூண்டும் விதத்தில் எழுதுகிறதாமே, உண்மையா?'

அண்மையில் எமது அலுவலகத்திற்கு வருகை தந்த சிங்கள நண்பர் ஒருவர் இவ்வாறு எம்மிடம் கேட்டார். சரிநிகர் தொடர்பான இத்தகைய விமர்சனத்தை யார் மூலமாகவோ கேள்விப்பட்டிருந்த நண்பர் எம்மைத் தேடி வந்து இதைக் கேட்டபோது அதையிட்டு நாம் அவ்வளவாக அக்கறைப்படவில்லை. ஏனென்றால் இது ஒருவகையான, சரிநிகருக்கு எதிராக செய்யப்படுகின்ற, அதுவும் தமிழ் படிக்கத் தெரியாத சிங்கள உறுப்பினர்கள் மத்தியில் செய்யப்படுகின்ற ஒரு சிலரது விசமப்பிரச்சாரம் என்றே கருதினோம். அவருக்கு கிடைத்த தகவல் தவறானது என்று விளக்கினோம்.

ஆனால், வேறும் சில சிங்கள புத்திஜீவிகள், ஜனநாயக உரிமை வாதிகளுடன் பேசிய பின்னர்தான், இந்தக் கேள்வியின் பின்னாலுள்ள ஒரு முக்கியமான விடயம் எமக்குத் தெரியவந்தது. அதுதான் இனவாதம் - தேசியவாதம் என்ற இரண்டு பதங்களும் அவற்றின் அர்த்தங்கள் தெளிவுபடுத்தப்படாமலேயே குழப்பப்படுகின்றன என்பது. இதைவிடவும் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், தேசியவாதம் என்பதை 'இலங்கையர்' என்ற, இலங்கையை ஒரு தேசமாக கருதுகின்ற அர்த்தத்திலும் கூட சில தமிழ் புத்திஜீவிகளும் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதுதான்.

ஆங்கிலத்தில் Nationalism என்ற சொல்லும், தமிழில் தேசியவாதம் என்ற சொல்லும் சிங்களத்தில் 'ஜாதிக்கவாதய' என்ற சொல்லும் வெவ்வேறு அர்த்தங்களில் பாவனையில் உள்ளன என்பது அப்போது தான் எமக்குத் தெளிவாகப் புரிந்தது. சிங்கள இனவாதிகளைப் பற்றிப் பேசும்போது 'சிங்கள தேசியவாதம்' என்ற சொற்றொடரும் 'தமிழ் தேசியவாதம்' பற்றிப் பேசும் போது 'தமிழ் இனவாதம்' என்ற சொற்றொடரும் அவர்களின் பேச்சுக்களில் பேதாபேதமற்று வெளிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இத்தகைய சொற்கள் பற்றிய பிரக்ஞையற்ற பாவனை மொழி தெரியாதவர்கள் மத்தியில் மொழி பெயர்ப்பு பெற்று செல்லும் போது தப்பான, விபரீதமான அபிப்பிராயங்களை ஏற்படுத்துவது சாத்தியமே. தமிழ்த் தேசியவாதம் என்பது தமிழ் இனவாதமாக, சிங்கள மொழி மட்டும் தெரிந்தவர்களிடையே மொழி பெயர்க்கப்பட்டுப் போகும் போது, சரிநிகர் தமிழ் இனவாதத்தை பரப்புவதாக விளங்கிக் கொள்ளப்படுதல் சாத்தியமே என்ற உண்மை அப்போது தான் எமக்கு உறைத்தது.

இதைவிடவும் விபரீதம் என்னவென்றால், Nationalism (தேசியவாதம்) என்ற பதம் 'இலங்கையர்' என்ற இல்லாத ஒரு தேசியத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை இன்னமும் நினைவு வைத்துக் கொண்டே சிங்கள தேசியவாதம், தமிழ் தேசியவாதம் (Sinhala Nationalism, Thamil Nationalism) என்ற பதங்களைப் பயன்படுத்துவதாகும். இலங்கை என்கிற முழு நாட்டுக்கும் தனி உரிமை கொண்டாடும் சிங்கள இனவாதத்தை குறிக்க சிங்கள தேசியவாதம் Sinhala Nationalism என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் எழும் மிகப் பயங்கரமான எதிர் விளைவு என்னவென்றால், தமிழ்த் தேசியவாதம் (Thamil Nationalism) என்ற பதம் முழு இலங்கைக்கும் தமிழர்கள் ஏகபோக உரிமை கொண்டாடுகின்றனர் என்ற அர்த்தத்தில் விளங்கிக் கொள்ளப்படுகின்றது என்பதாகும்.

தேசிய இனப்பிரச்சினை நாட்டின் பிரதான பிரச்சினையாக இருக்கும் இன்றைய சூழலில், இனப்பிரச்சினை காரணமாக இரண்டு தசாப்தங்களாக ஆயுதமேந்திய போராட்டம் நடந்து கொண்டிருக்கும் ஒரு நிலையில் இந்தப் பதங்கள் அரசியலில் சரியான அர்த்தங்களில் பாவிக்கப்படாத பட்சத்தில் அவை பயங்கரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன. இனங்களுக்கிடையே ஐக்கியத்திற்காக கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் பல ஜனநாயகவாத புத்திஜீவிகள் மத்தியில் கூட இத்தகைய கருத்து மயக்கங்கள் இருக்கின்றன என்றால், எமது நாட்டின் நிலைமை எவ்வளவு துக்ககரமானது என்பது வெளிப்படை.

'சுதந்திரத்தை அண்மிய காலகட்டத்தில், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து தம் நாடுகளை விடுவித்தலுக்காக அனைத்து காலனிய நாடுகளிலும் எழுந்த ஏகாபத்திய எதிர்ப்பு உணர்வலை உருவாக்கிய 'தேசிய' உணர்வு, இன, மொழி, மதங்களை கடந்த ஒரு உணர்வாக நிலவியது ஒரு பொதுவான உண்மை. இந்த உண்மை நிலைக்கு இலங்கையும் விதிவிலக்காக அமையவில்லை. ஆனால், 'சுதந்திரத்தின்' பின்னான காலங்களில் தான் 'தேசிய' உணர்வு அதற்கேயுரிய அர்த்தத்தில் வெளிப்படையாக தோற்றம் கொள்கிறது. சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களை உள்ளடக்கிய ஒட்டு மொத்தமான ஏகாபத்திய எதிர்ப்பு 'தேசிய' உணர்வு, இலங்கை என்ற நாட்டை பிரித்தானியாவிடமிருந்து விடுவிப்பதனை அடிப்படையாகக் கொண்டமைந்தது. ஆனால், இந்த 'தேசியவாதம்' விரைவிலேயே 'சிங்கள தேசிய வாதமாக' குறுகிப் போயிற்று. அதாவது சிங்கள, தமிழ், முஸ்லீம் மற்றும் பறங்கியர் உள்ளிட்ட அனைத்து நாட்டு மக்களதும் தாய் நாடு இது என்ற உணர்வும், அத்தாய் நிலத்தை அந்நியரிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்ற துடிப்பும் வெளிப்படுத்தப்பட்ட இலங்கையர் தேசியவாத எழுச்சி, ஒரு தற்காலிக எழுச்சியாகவே அமைந்தது. பிரித்தானியரது பிடி தளர்த்தப்பட்டு, உள்ளூர் அரசியல் தலைமை அரசாங்கத்தை அமைத்ததும் இதற்கான இருப்பு நியாயம் அற்றுப் போயிற்று.

இதைத் தொடர்ந்து, இத்தேசியவாதம் சிங்கள தேசியவாதமாக உருமாறுகிறது. ஏற்கனவே இதற்கான

> **'உண்மையில் தேசியவாதம் தனது சொந்த தேசிய இனம் குறித்த பெருமையை, தனது சொந்த மொழி, கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள், தனது பாரம்பரிய பிரதேசங்கள் பாதுகாக்கப்படுவதில் அக்கறையை கொண்டிருக்கின்ற அதே வேளை, இனவாதம் பிற தேசிய இனங்களை ஒடுக்கி மேலாதிக்கம் செய்ய விரும்புகிறது. தேசிய வாதம் தனது சொந்த உரிமைபற்றி குரலெழுப்பினால், இனவாதமோ, பிறரை ஒடுக்குவதில் அல்லது தன்னுடைய தேசிய இனத்திற்கு சிறப்புரிமைகளை விசேட சலுகைகளைக் கோருகின்றது.**

அரசியல் மற்றும் தத்துவார்த்த தளங்கள் அநகாரிக தர்மபால காலம் முதற்கொண்டு உருவாக்கப்பட்டு வளர்ந்திருந்தன. சிங்கள தேசியவாதம் அடிப்படையில், இலங்கையர் தேசியவாதத்திலிருந்து வேறுபட்டமை தன் சிறகுக்குள் பிற தேசிய இனங்களை அடக்க முயன்றமையிலேயே தெளிவாகிறது. 'சிங்கள தேசியவாத' உணர்வு இனங்களிடையேயான சம அந்தஸ்து அடிப்படையிலான ஐக்கியத்தை உருவாக்க முயல்வதற்குப் பதில் அரசியல் அதிகாரத்தில் ஏகபோக உரிமை கொண்டாடியது. இந்தக் கணத்தில் அது தனது தேசியவாதத் தன்மையை இழந்து 'சிங்கள இனவாதத்தை தழுவிக் கொள்கிறது.

உண்மையில் இந்த மாற்றத்தை ஒருவரும் தர்க்கரீதியான ஒரு மாற்றமாக அன்றைய நாட்களில் புரிந்து கொள்ளவில்லை. இதனால், முழு இலங்கையினதும் வளங்களையும் சிங்கள இனத்துக்கே சொந்தமாக கருதும் 'சிங்கள இனவாதமாக' குறுகிப் போன சிங்கள தேசியவாதம், இதன் எதிர் விளைவான 'தமிழ் தேசியவாதம்' தோன்றக் காரணமாக அமைந்தது. தமிழ் தேசியவாதம், அது பல தவறுகளை தன்னகத்தே கொண்டிருந்த போதும், 'சிங்கள இனவாதத்தின் பிடியிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும் அடிப்படையிலிருந்து எழுந்ததாகவே அமைந்தது. சிங்கள தேசிய வாதம், சாரத்தில் சிங்கள இனவாதமாக உருமாறியுள்ளதை ஏற்றுக்கொள்ளாத அல்லது புரிந்து கொள்ளாத பலர், தமிழ் தேசியவாதத்தின் தவறுகளை தமிழ் இனவாதமாக முத்திரை குத்தவும் செய்தனர். இந்த 'வரலாற்றுப் பணியில்' இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளுக்கு முக்கிய பாத்திரம் உண்டு'

ஆனால், தமிழ் தேசியவாதம் முழு இலங்கையின் வளங்களுக்கும் சொந்தம் கொண்டாடியதாக ஒரு வரலாறு இல்லை என்பதை பலரும் வசதியாக மறந்து விடுகின்றார்கள். அது தனது பாரம்பரிய நிலப்பரப்பை, தனது மொழியை, தனது கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதற்காக உரிய அரசியல் உரிமைக்காக போராட வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக உருவாகிய ஒன்று என்பதையும் பார்ப்பதற்கு பல அரசியல் விமர்சகர்கள் தவறி விடுகின்றார்கள். தமிழ் தேசியவாதத்தின் மீதான, சிங்கள இனவாத தாக்குதல்களின் விளைவாக எழுந்த அதன் எதிர்ப்புக்கள் சில சில இடங்களில் இனவாத முகங்களை காட்டியது உண்மையாயினும் அவை ஒடுக்கப்படும் ஒரு இனத்தின் எதிர்ப்புப் போராட்டத்தின் தவறுகளாக இனங்காணப்படவில்லை. மாறாக, இனவாதமாக - தமிழ் இனவாதமாகவே இனங் காணப்பட்டன. இது மேலும் மேலும் மோசமான நிலைமையையே உருவாக்கியது. உண்மையில், அது அன்று முற்று முழுதான இனவாத'மாக உருப்பெற்று விடவில்லை. சிங்கள இனவாதத்திலிருந்து தமது அடையாளங்களை பாதுகாப்பதே அதன் மாபெரும் சவாலாக இருந்தது.

தமிழ் தேசியவாதம் இதேவேளை தமிழ் இனவாத கூறுகளைக் கொண்டிருக்கவும் செய்தது உண்மையே. ஆனால் அது சிங்கள (பேர்) இனவாதத்திற்கெதிரானதானது அல்ல, மாறாக முஸ்லீம் மக்களின் இன அடையாளத்தை மறுதலித்தலிலேயே எழுந்தது. ஆரம்பகால தமிழ் தேசிய வாதத்தின் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற பதம், முஸ்லீம் மக்களையும் அவர்களது தனித்துவங்களையும் பொருட்படுத்தாத, சரியாக சொல்வதானால் மறுதலிக்கின்றதாகவே அமைந்திருந்தது. அதன் தொடர்ச்சிதான் இன்றைய, முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்ட நிகழ்ச்சியாகும். இதன் எதிர்விளைவே 'முஸ்லீம் காங்கிரசின் தோற்றமும், ஜிகாத் போன்ற ஆயுதக் குழுக்களின் தோற்றமும், என்பது ஒரு முக்கியமான உண்மை. முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஒரு முன்னைநாள் தமிழ்த்தேசியவாதக் கட்சியான தமிழரசு கட்சியினர் என்பது இதற்கு ஒரு நல்ல உதாரணம். (வரலாற்றில் இதுமாதிரி நிகழ்ச்சியே அருணாசலம் அவர்கள் தமிழர் மகாசபையை தோற்றுவித்தபோதும் இருந்தது என்பதை ஒருவர் நுணுக்கமாக அவதானித்தால் புரிந்து கொள்ளலாம்!)

ஆக, தமிழ் இனவாதம் என்பது, தமிழ் தேசியவாதத்தின் பிற்போக்கான, முஸ்லீம் மக்களுக்கெதிரான ஒருமுகம். இத்தகைய ஒரு முகத்தை கொண்ட தேசியவாதம் தமிழ் தேசியவாதத்தின் அண்மைக் கால அரசியலில் முற்றாக நிராகரிக்கப்பட்டு விட்டது. புலிகள் கூட இதை வெளிப்படையாக உச்சரிக்கத் தயங்குகிறார்கள். த.வி.கூ. கூட முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு நீண்ட நாட்களாகி விட்டது.

ஆரம்பப் பள்ளியிலிருந்து பாடப் புத்தகங்களூடாகவும் மதபோதனைகளூடாகவும் தமிழ் எதிர்ப்பு உணர்வுகள் வளர்க்கப்படுவதால் உருப்பெற்ற சிங்கள இனவாதத்திற்கு எதிரான தமிழ் தேசியவாதம் தன் நியாயத்தன்மையை பலவீனமாக்கும் ஒரு அம்சமான தமிழ் இனவாதப் போக்கையும் கொண்டிருந்தது. ஆனால், 'தமிழ் தேசியவாதத்தின்', சிங்கள இனவாதத்திலிருந்து விடுபடத்துடிக்கும் அல்லது தன்னைப் பாதுகாக்கத் துடிக்கும் உணர்வு இதனால் பொய்மையாகி விடவில்லை. அல்லது 'தமிழ் இனவாதம்' தோன்றியிருப்பதால், தமிழ் தேசியவாதத்தின் இருப்புக்கான நியாயம் அற்றுப் போய்விடவும் இல்லை! எவ்வாறு சிங்கள இனவாதம் அரசியலில் தனி அதிகாரம் பெற்றிருப்பது எதிர்க்கப்படும் அதேவேளை சிங்கள தேசியவாதத்தின் இருப்புக்கு நியாயத் தன்மை இருப்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமோ அவ்வாறு. சிங்கள தேசியவாதம், சிங்களமொழியை, அதன் மதத்தை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க, பேணவென முயல்வதில் நியாயமிருக்கிறது; அதில் எத்தகைய தவறும் இல்லை. ஆனால் பிறதேசிய இனங்களை சமமாக மதிக்காமையும் இலங்கையின் மைய அரசு, தனது தேசிய இனத்துக்கு மட்டுமே சொந்தமானது என்று கருதுவதும் அதை இந்நியாயத்தன்மையிலிருந்து அகற்றி மேலாதிக்க மட்டத்துக்கு -சிங்கள இனவாத மட்டத்துக்கு - தள்ளிவிடுகிறது.

ஆனால் தமிழ் தேசியவாதத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் உரிமைக்குரல் நியாயமானது. அது தனது தேசிய இனத்தின் உரிமைகட்காக குரல் எழுப்புகிறது; தன்மீதான ஒடுக்குமுறையிலிருந்து தன்னை விடுவிக்க அது போராடுகிறது; பிற தேசிய இனங்களின் உரிமைகளில் அது தலையிடுவதில்லை. தனக்குரிய நியாயமான உரிமைகளையே அது கோருகின்றது.

'உண்மையில் தேசியவாதம் தனது சொந்த தேசிய இனம் குறித்த பெருமையை, தனது சொந்த மொழி, கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள், தனது பாரம்பரிய பிரதேசங்கள் பாதுகாக்கப்படுவதில் அக்கறையை கொண்டிருக்கின்ற அதே வேளை, இனவாதம் பிற தேசிய இனங்களை ஒடுக்கி மேலாதிக்கம் செய்ய விரும்புகிறது. தேசிய வாதம் தனது சொந்த உரிமைபற்றி குரலெழுப்பினால், இனவாதமோ, பிறரை ஒடுக்குவதில் அல்லது தன்னுடைய தேசிய இனத்திற்கு சிறப்பு

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம் ஆறுமுக நாவலரே அல்ல!

தமிழ்த் தேசியம் இன்று இலங்கையிலுள்ள அனைத்துத் தமிழரையும் இணைக்கின்ற, ஈர்க்கின்ற கருத்தியலாக இல்லை என்பது அண்மையில் நடந்த தேர்தல்களிலிருந்து தெரியவருகிறது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழர்கள் அரசியல் போராட்டங்களில் தாம் ஒரு இனம் என்கின்ற அடிப்படையில் ஈடுபட்டு வந்திருந்த போதும், தமிழினத்திற்கு ஒரு தனிநாடு வேண்டுமென்று ஆயுதமேந்திய தமிழிளைஞர்கள் 70களில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்ட பின்னரும், தமிழ்த் தேசியம் என்பது ஒரு பலம் பொருந்திய கருத்தியலாக இன்று தென்படாமைக்கு காரணம் யாது?

சைவவேளாள ஆதிக்கம் இலங்கைத் தமிழ்த் தேசியத்தினுள் ஆரம்பத்திலிருந்து இன்று வரை பல்வேறு அளவுகளில் இருந்து வருவதனாலேயே இலங்கைத் தமிழ்த் தேசியமானது இன்று வெகுஜன ஈர்ப்புத் தன்மையற்று காணப்படுகிறது என ஒரு சாரார் கூறுகின்றனர். இந்த கருத்தை முன் வைப்பவர்கள் இலங்கையில் தமிழ்த் தேசியமானது நாவலருடன் ஆரம்பிக்கிறது எனக் கொண்டே தமிழ்த் தேசியம் பற்றிய தம்முடைய ஆய்வுகளை முன்னெடுக்கின்றனர்.

இலங்கையில் தமிழ்த் தேசியத்தின் உள்ளார்ந்த பண்பையும், அதன் வரலாறையும், அதன் இன்றைய பலவீனத்தின் காரணங்களையும் சரியாக மதிப்பீடு செய்வதற்கு பிரதான முட்டுக்கட்டையாக இருப்பது நாவலரை இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் ஊற்றுமூலம் எனக் கருதும் இந்தப் போக்கேயாம்.

நாவலரால் முன்னெடுக்கப்பட்டது ஒரு மத மீளெழுச்சி இயக்கமே ஒழிய தேசியவாதம் அல்ல. இந்த மீளெழுச்சி இயக்கம் ஒரு குறிப்பிட்ட சாதியினுள் (யாழ் வேளாளர்) காலூன்றி தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு சைவ சமயத்தை நிலை நிறுத்தி, கிறிஸ்தவத்தின் பரம்பலைத் தடுக்க முற்பட்டது. இது எச்சந்தர்ப்பத்திலும் தமிழினத்தின் மீள் எழுச்சியைப் பற்றியோ அதன் வரலாற்றைப் பற்றியோ அவ்வரலாற்றில் காணப்பட்ட பொற்காலங்கள் பற்றியோ அப் பொற் காலங்களை மீட்கும் வகையில் இன எழுச்சி அவசியம் என்பதைப் பற்றியோ மற்றும் இன்னோரன்ன தேசியவாத நோக்கங்களையோ முதன்மைப்படுத்தி இயங்கவில்லை. இதன் காரணமாகவே நாவலரிலிருந்து உருவாகிய சைவமும் தமிழும் என்கின்ற கருத்தியல் அரசியற் தளத்தை எட்டவுமில்லை, அவாவுமில்லை. இதனால் தன் குறிக்கோளை முன்னெடுக்க இவ்வியக்கம் மேற்கொண்ட ஸ்தாபனரீதியான, பத்திரிகைரீதியான முயற்சிகள் மத மையப்பட்டவையாகவே இருந்தன.

1988இல் நாவலரின் மருமகன் என்.எஸ்.பொன்னம்பல பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்ட சைவசமய பரிபாலன சபையும், அச்சபையால் அதேவருடம் ஆரம்பிக்கப்பட்ட The Hindu Organ - இந்துசாதனம் என்ற இருமொழிப் பத்திரிகையும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

நாவலர் சைவமும், தமிழும் என்று கூறியிருந்தாலும் தமிழின் தனித்துவத்தை மட்டுமே முதன்மைப்படுத்தவில்லை. சமஸ்கிருதத்தையும் சைவத்தின் மொழியாக கருதியுள்ளார். இது கவனித்தற்குரிய ஒரு விடயம்.

ஏனெனில் நாவலர் மிகத் தீவிரமாக இயங்கிய கால கட்டங்களில் தமிழின் தனித்துவத்தைப் பற்றியும், திராவிட இன வரலாறு பற்றியும், இவையிரண்டையும் மையமாகக் கொண்ட ஆரிய-திராவிட (மொழி மட்டத்தில் தமிழ் - வடமொழி) முரண்பாடு பற்றியும், தமிழகத்தில் பலமான ஒரு கருத்தியல் சினைகொள்ளத் தொடங்கியிருந்தது. கால்டுவெல் பாதிரியாரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் 1856இல் வெளியாகி ஆங்கிலம் கற்ற தமிழர் மத்தியில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் இந்நூல் வெளியாகிய காலத்திலிருந்து தமிழகத்தில் எழுச்சியுற்று வந்த சைவவேளாள வகுப்பினர் இந்நூலின் மையக் கருத்தான திராவிட இன, மொழித் தனித்துவத்தினை தம் கருத்தியலாகப் பற்றிக் கொண்டிருந்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் மட்டும் நாவலரின் தளமான சைவவேளாள மரபு திராவிடக் கோட்பாட்டைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. நாவலரின் நோக்கங்களை தொடர்ந்து பேணிவந்த அமைப்புகளும் வெளியீடுகளும் கூட திராவிட கோட்பாட்டைப் பற்றி சட்டை செய்யவில்லை.

ஆனால் இதே வேளை தமிழகத்தின் சைவவேளாள எழுச்சியானது சைவசித்தாந்தத்தின் பரம்பலைக் கூட ஒரு தனித்துவமான திராவிட கலாசாரத்தின் வெளிப்பாடகவே சித்திரித்து வந்தது. உதாரணமாக சைவ சமயத்தை தமிழகத்தில் முதன்மைப்படுத்துவதற்கு முன்னின்று உழைத்தவர் ஜே.எம்.நல்ல சுவாமிப்பிள்ளை (1864-1920). அவர் நடாத்திய சித்தாந்த தீபிகா எனும் பத்திரிகை (1897) ''தென்னிந்தியாவின் மொழியையும் வரலாற்றையும் குறிப்பாக திராவிட மெய்யியலையும், மதத்தையும் திறம்பட விளக்கி திராவிட இனத்தை எழுச்சியுறச் செய்வதை'' நோக்கமாகக் கொண்டு வெளிவந்தது.


ஆனால் நாவலரின் வழிநின்றியங்கிய இந்து சாதனமோ மிக மிக அரிதாகவே தமிழ் மொழி பற்றி பேச்செடுத்தது. திராவிட இனத் தனித்துவம் எனும் தமிழகச் சைவ வேளாளரின் கோஷத்தைப் பற்றி அது பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

தமிழ் மொழி பற்றிப் பேசிய ஒரு சந்தர்ப்பத்தில் கூட சிங்களமும் தமிழும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று பொ.இராமநாதன் சட்ட நிரூபணசபையில் பேசிய ஒரு பேச்சை தன் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டு அதுவே தன் கருத்தெனக் கூறிற்று அப்பத்திரிகை (இந்து சாதனம் -17.08.1898).

'கீழைத்தேசப் பாஷாபிவிருத்தி' எனும் தலைப்பிலான ஆசிரிய தலையங்கத்தில் இந்து சாதனம் இதுபற்றி வருமாறு எழுதியது.

''லத்தீன் பாஷை எவ்வளவு வியக்கத்தக்கதாயினும் சுதேச பாஷைகள் இவ்விலங்காதீபம் எங்கும் பாராமுகம் பண்ணப்பட்டு தாழ்வுறுவது மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கின்றது. சிங்களம் ஓர் சிறந்த பாஷை. தமிழ்ப் பாஷையோ அதில் எழுதப்பட்டிருக்கும் தத்தவ சாஸ்திரங்களைக் கவனிக்கும் போது சமஸ்கிருதத்திற்கு ஒப்பான ஒரு பாஷையெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. எங்கள் மத்தியிற் சிறப்பு வாய்ந்த இவ்விரு பாஷைகளிலிருந்தும் எமது வாலிபர் அவைகளைக் கற்க வேண்டிய அளவுக்குக் கற்றுக் கொள்ள யாதும் பிரயாசை எடாதிருப்பது மிகவுந்துக்கத்துக் கிடனாயிருக்கிறது.''

இதே பொன்னம்பலம் இராமநாதன் : சட்ட நிரூபண சபைக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னின்றவர்களில் ஆறுமுகநாவலர் முக்கியமானவர் என்பது நாம் அறிந்த விடயம். (ஆனால் செ.யோகராஜா ஓரிடத்தில் கூறியுள்ளது போல நாவலரின் காலத்தில் இலங்கையில் பல அரசியல் பிரளயங்கள் நடை பெற்றிருந்தனவெனினும், -உதாரணமாக 1848 கண்டியர் கிளர்ச்சி, கோயிற் காணிகள் சட்டம் போன்றன- அவர் அவை எதனாலுமே பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.)



மொழி பற்றி நாவலர் வழிச் சைவ வேளாள மரபினர் பெரிதாகவும், தீவிரமாகவும் அக்கறை காட்டாமைக்கு நாவலரின் போக்கும் ஒரு காரணமெனலாம். நாவலர் தோன்றிய காலம் ''ஐந்தெழுத்தால் ஒரு பாஷை உண்டென அறையவும் நாணுவர் அறிவுடையோரே'' (தமிழுக்கேயுரிய எழுத்துகள் ஐந்து) என்று தமிழ் இழிவுபடுத்தப்பட்டு சமஸ்கிருதம் தமிழகத்தில் பலமாக ஊடுருவிக் கொண்டிருந்த காலம். இந்த சமஸ்கிருத மொழியாதிக்கத்

**சிவராம்**

தினை எதிர்த்து, தமிழின் தனித்துவத்தைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்கின்ற அளவிற்கு, திராவிடக் கோட்பாடு ஒரு விஞ்ஞான பூர்வமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருந்தது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை போன்றவர்கள் இவ்வடித்தளத்தில் நின்று கொண்டே போன நூற்றாண்டின் பிற்கூற்றில் தமிழின் தனித்துவத்தைப் பற்றி, தமிழினத்தின் எழுச்சியின் அவசியம் பற்றி தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தார்கள். (அவர் இயற்றிய தமிழ்த் 'தாய் வணக்கம் இன்னும் தமிழ் தேசிய அரசியலில் தேசிய கீதமாகக் கொள்ளப்படுகிறது.)

நாவலரோ கிறிஸ்தவ பாதிரிமார்களுடனும், குறிப்பாக அவர்களுள் தமிழ் மொழி பற்றி அக்கறை கொண்டிருந்தவர்களுடனும் (பேர்சிவல் பாதிரியார்) மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். அந்தத் தொடர்பு எவ்வாறு அவருடைய சிந்தனை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியது என்பது பற்றி ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர்.

நாவலர் தமிழகத்தின் பிராமணரல்லாத சைவ ஆதீனங்களுடனும், அங்கிருந்த தமிழ் சார்ந்த பலருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். பல தமிழ் நூல்களை அங்கு வெளியிட்டார். தமிழ் நூல்களை உயர்கல்விப் பாடத் திட்டங்களில் புகுத்த வேண்டுமென்பதில் முனைப்பாக இருந்தவர்கள் கிறிஸ்தவ பாதிரிமார்கள். இதன் காரணமாக பழந்தமிழ் நூல்களுக்கு எவ்வாறு ஒரு தேவை உருவானது என்றும், அத்தேவையே, பழந்தமிழ் நூல்களைத் தேடி நட்டப்படாமல் வெளியிட்டு விற்பனை செய்வதற்கு ஒரு உந்துதலாக அமைந்தது என்பது பற்றியும் உ.வே.சாமிநாதையர் 'என் சரித்திரத்தில்' கூறிச் செல்கின்றனர். இந்தச் சூழலில் நாவலருக்கு கால்டுவெல் பாதிரியாரின் கருத்துகளை அறியாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. கால்டுவெல் பாதிரியாரின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' 1856இல் வெளிவந்து தமிழகத்தின் அறிஞர்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அந்நூல் வெளிவந்து 23 வருடங்களின் பின்தான் நாவலர் இறந்தார். அவையோ நாவலர் அறிவுபூர்வமாக மிகத் தீவிரமாக இயங்கிய வருடங்கள்.

ஆனால், தமிழ்த் தேசியத்தின் மையக் கருத்தியலான திராவிட இன, மொழிக் கோட்பாட்டை நாவலர் ஏனோ கண்டு கொள்ளவில்லை. அத்துடன் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். தமிழகத்தில் இராமநாதபுரம் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவரான பொன்னுச்சாமித் தேவர் நாவலரின் போஷகர்களில் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தை ஒட்டியே இராமநாதபுரம் சமஸ்தானம் அமைந்திருந்து. கால்டுவெல் பாதிரியார் திருநெல்வேலியின் ஆயர். அவ்வகையில் இராமநாதபுரம் மன்னர் குடும்பத்தையும், அக்காலத்தில் தமிழ் அறிஞர்களுக்கு உதவி புரிந்து வந்த ஊற்றுமலை ஜமீன்தார் போன்றவர்களையும் கால்டுவெல் அறிந்து வைத்திருந்தார். அப்படியிருந்தும் பொன்னுச்சாமி தேவரால் போஷிக்கப்பட்ட நாவலர் தமிழ் தேசியத்திற்கு வித்திட்ட கால்டுவெல் பாதிரியாரின் கருத்துக்களைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

கால்டுவெல் பாதிரியாரின் கருத்துக்களை நாவலர் தம் கிறிஸ்தவ எதிர்ப்புக் காரணமாகவே கவனத்தில் கொள்ளவில்லை என்று நாம் எடுத்துக் கொண்டாலும் தமிழ்த் தேசியத்தின் இன்னொரு ஊற்றுமூலத்திற்கு வித்திட்டவர்களான இராமநாதபுரம் மன்னர் குடும்பத்துடன் (பொன்னுச்சாமித் தேவர்) இருந்த தொடர்பு கூட நாவலரை தமிழ்த் தேசியக் கருத்துக்களின் பால் ஈர்க்கவில்லை என்பது வெளிப்படை.

பொன்னுச்சாமித் தேவரின் மகன், பாண்டித்துரைத்தேவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தை 1901இல் நிறுவியவர். பொன்னுச்சாமித் தேவரால் வளர்த்தெடுக்கப்பட்டவர்களே தமிழறிஞர்களான ரா.இராகவையங்காரும், மு.இராகவையங்காரும். பின்னையவரே முதன் முதலாக தமிழர் தம் வீரயுகத்தை மீட்டு விடுதலை அடைந்திட வேண்டும். என எழுதியவர். (இதனைப் பற்றிப் பின்னர் பார்ப்போம்). ஆனால் பொன்னுச்சாமித் தேவரால் போஷிக்கப்பட்ட நாவலர் மட்டும் ஏனோ தமிழ் இன, மொழி மீளெழுச்சி பற்றி கூறாது போந்தார்.

எனினும் நாவலர் வழிவந்த சைவ வேளாள மரபினர் தமிழின் தனித்துவம் பற்றி தமிழகத்தில் ஏற்பட்டு வந்த மாற்றங்களால் அறவே பாதிப்புறாமல் இருந்தனர் எனக் கூறுவதற்கில்லை. உதாரணமாக மே4, 1898 இந்து சாதனத்தில் யாழ் தமிழ் வித்துவான்களின் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டதாக செய்தியொன்று காணப்படுகிறது. அது வருமாறு

''முதலிடை கடையெனப்பட்ட சங்கங்களிருந்த காலத்தில் தமிழ்க் கல்வி எவ்வளவு விருத்தியடைந்திருந்ததோ அவ்வளவு இப்போது குறைவடைந்திருக்கின்றதென்றும் தமிழ் வித்துவான்களுக்கு இக்காலத்தில் மரியாதையும் வரும்படியும் இல்லாமற் போகின்றதென்றும், தமிழ் பாஷையின் சுவையும் அருமையும் நம்மவர்களிலும் பார்க்க ஐரோப்பியர் முதலானவர்களுக்கே நன்றாகத் தெரிந்திருக்கின்றமையால் அவர்களே தமது பாஷையோடு சமப்படுத்தியும் பலவிடங்களில் அதனினும் உயர்த்தியும் கூறுகின்றார்களென்றும், இத்தமிழை அபிவிருத்தி செய்ய ஏற்ற சிறந்த வழி அதிற் பரீஷைகள் செய்து பட்டங்கள் கொடுக்கிறதேயென்றும் தாம் திருவாவடு துறை மகா சந்நிதானம் முதலியவிடங்களுக்கு சில வருஷங்களுக்கு முன் எழுதிய போது அவர்கள் அந்த முயற்சியை மெய்ச்சிக் கொண்டார்களென்றும் இதனைச் சென்னை கலாசாலையார் இப்பொழுது முயலுகினும் அது சில காலத்துக்கு முற்றுப்பெறுதல் அரிதென்றும், இங்குள்ள வித்துவான்கள் முயலுகில் நன்றாகுமென்றும் அதற்காக ஒரு சங்கமேற்படுத்தற்கு வேண்டிய ஆலோசனைகள் செய்வதற்காகவே இச்சபையைக் கூட்டலாயிற்று என்றும் தாம் இச்சபையைக் கூட்டிய உத்தேசத்தை ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள் வெளிப்படுத்தினர்''

இச்சபை பின்னர் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை என்பது தெரிகிறது. இந்துமத வளர்ச்சியைப் பற்றியும், எழுச்சியைப்பற்றியுமே யாழ் சைவ வேளாளத் தமிழறிஞர் குழாம் தொடர்ந்து கவலைப்பட்டு வந்தது.

(தொடரும்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஒஸி அபேகுணசேகரவுடனான இந்த நேர்காணல் தேர்தல் காலத்தின் போது நடைபெற்றிருந்தாலும், சரிநிகரின் தேர்தல் கால முக்கிய விடயங்களுள் இது உள்ளடங்காததால் உடனடியாகப் பிரசுரமாகவில்லை. ஒக்ரோபர் 23ம் திகதிய குண்டு வெடிப்பின் போது படுகாயமடைந்து பின்னர் மரணமானார் ஒஸி. ஒஸி அவர்கள் தமிழ்ப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த இறுதி நேர்காணல் இதுவாகத் தான் இருக்கும். இது இங்கே அப்படியே பிரசுரமாகிறது.**

**ஆ-ர்**



# "பிரபாகரன் பயங்கரவாதியா இல்லையா என்பதை கூறவேண்டியது மாத்தறையில் உள்ளவர்கள் அல்ல அவரது மக்களே!"

## ஒஸி அபேகுணசேகர

**தாங்கள் ஐ.தே.கவின் தேர்தல் தோல்விக்கான காரணமாக எதனைக் கருதுகிறீர்கள்?**

ஐ.தே.கவின் தோல்விக்கான காரணங்கள் பல உண்டு. குறிப்பாக நீண்டகாலம் ஆட்சிபுரியும் எந்தவொரு கட்சியும் மக்களின் சலிப்புக்கு உள்ளாவது இயற்கை. ஆனாலும் ஐ.தே.க. தோதல் காலத்தின் போது சில தவறுகளையும் இழைத்திருந்தது.

ஐ.தே.கவின் ஆட்சியில் குறிப்பாக பிரேசமதாசவின் மரணத்திற்குப் பின் சிறுபான்மை மக்கள் தொடர்பாக தற்போதைய ஜனாதிபதியின் பேச்சுக்கள் சிறுபான்மையோரை மிகவும் பாதித்திருந்தன. அவர்களைக் கையாள்வதில் பிரேமதாசவுக்குப் பின் வந்தவர்கள் பின்தங்கியிருந்தனர்.

அடுத்தது, பிரான்சிஸ் கூ சம்பவம். அதுவரை காலம் ஐ.தே.க. கட்டிக்காத்து வந்த அரசியல் நம்பிக்கையை இல்லாது செய்தது அச்சம்பவம்.

மேலும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோருக்கு எதிராக சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு சரியான பதிலை அவர்கள் கொடுக்கவில்லை. 'ஆதாரம் எங்கே' என திருப்பிக் கேட்டார்கள். இக்கேள்வி நீதிமனறத்துக்குப் பொருந்தும். மக்கள் மன்றத்துக்கு இது சரிவராது. மக்களுக்கு தேர்தற் காலங்களின் போது சிறிது சந்தேகம் ஏறபட்டாலும் வாக்களிக்க மாட்டார்கள். பிரேமதாசவுக்குப்பின் ஐ.தே.க. மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போனது. பொ.ஐ.மு. அந்த இடைவழியைக் கைப்பற்றிக் கொண்டது.

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் போட்டியிடப் போவதாக வெளிவந்த பத்திரிகை செய்தி உண்மையா?**

நான் போட்டியிடுவதாக இதுவரை யாருக்கும் தெரிவிக்கவில்லை. அப்படி லங்காதீப பத்திரிகை குறிப்பிட்ட செய்தி பிழையானது. ஐ.தே.க. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நாங்கள் கேள்விப்பட்டோம். போட்டியிடாமல் இருக்க சரியான காரணமொன்று இருக்க வேண்டும். அதனால் நாங்கள் தீர்மானித்தோம்.

**நாங்கள் எனறால் ஐ.தே.கவா?**

இல்லை. ஸ்ரீலங்கா மக்கள் கட்சி. ஐ.தே.கவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த முடியுமென்றால் எங்களுக்கும் அத்தேர்தலில் போட்டியிடுவது தொர்டபாக பேச்சுவார்த்தை நடத்த உரிமை உண்டு. எனவே ஐ.தே.க. போட்டியிடாவிட்டால் நிச்சயமாக நாங்கள் தேர்தலில் போட்டியிடுவோம்.

அடுத்ததாக கட்சி தேர்தலில் போட்டியிடுவதாக முடிவு செய்திருந்தால் அதற்கான வேட்பாளராக கட்சிக்குள்ளிருந்து பிரபல்யமான நபரை தெரிவு செய்ய வேண்டும்.

கடந்த பொதுத்தேர்தலில் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ரணில் அதற்குப் பொருத்தமானவர். அவர் ஐ.தே.கவுக்குள் பிரபல்யமானவராக இல்லாத போதும் மக்கள் மத்தியில் பிரபல்யமானவர். நாங்களும் இது தொர்டர்பாக முடிவெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஐ.தே.க. முன்நிறுத்தும் எந்தவொரு நபருக்கும் நாங்கள் ஆதரவு தெரிவிக்கத்தான் வேண்டும் என்றில்லையே. அப்படி எங்களால் செய்ய முடியாது. உதாரணத்திற்கு சுகயீனம் காரணமாக டி.பி.விஜேதுங்கவுக்குப் பதிலாக அவரது மனைவி போட்டியிடுகிறார் என்றால் அதற்கும் நாங்கள் ஒத்துழைக்க வேண்டுமா?

**இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் இரண்டினதும் வேட்பாளர்கள் இருவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக திடசங்கற்பம் கொண்டுள்ளனர். இந்த நிலைப்பாடு தொடர்பான தங்களின் கருத்தென்ன?**

நாங்கள் நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதி முறையை முன்னர் எதிர்த்திருந்தோம். ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தோம். ஆனால் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினாலேயே சிறுபான்மையோர் பாதுகாக்கப்படுகின்றனர். அன்று சேர் ஐவர். ஜெனிங்ஸ்ஸினால் அமைக்கப்பட்ட அரசியலமைப்பில் சிறுபான்மையோருக்கான காப்பீடாக 29வது சரத்து காணப்பட்டது. ஆனால் அதனை 1972இல் பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் இல்லாமல் செய்து விட்டது. அன்று அந்த 29வது சரத்து இருந்ததனாலேயே அரசாங்கத்துக்கெதிரான 'கோடீஸ்வரன் வழக்கை' வெல்ல முடிந்தது. இன்று சிறுபான்மையோர் ஆதரவன்றி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதியாக முடியாது. எனவே இனவாதத்தை நிராகரிக்கும் சக்தியுடைய ஒரு அம்சமே நிறைவேற்று அதிகாரமுறை.

இன்றைய அரசாங்கம் கூட சிறுபான்மையோரது துணையினாலேயே தாக்குப்பிடிக்க முடிந்துள்ளது. இன்று சிறுபான்மை மக்களின் பலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த முறையானது இல்லாமல் செய்யப்பட்டால் சிறுபான்மையோருக்கான உத்தரவாதம் என்ன? அப்படி உத்தரவாதமொன்று ஏற்படுத்தப்பட்டதன் பின் இந்த முறை இல்லாமல் செய்யப்பட்டால் நாங்கள் உடன்படுவோம். அதேவேளை தன்னாதிக்க அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நாங்கள் எதிர்க்கிறோம். ஜனாதிபதியானவர் நிச்சயமாக நீதிமன்றத்துக்கோ, பாராளுமன்றத்துக்கோ பொறுப்பு கூறக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**முன்னர் ஒருதடவை நீங்கள், விஜய குமாரதுங்க மற்றும் இன்றைய பிரதமர் சந்திரிகா ஆகியோருடன் யாழ்ப்பாணம் சென்று புலிகளோடு கதைத்திருந்தீர்களாமே. அந்த வகையில் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதாக கூறியிருக்கும் சந்திரிகாவின் இன்றைய முயற்சியைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

சந்திரிகா யாழ்ப்பாணம் வரவில்லை. ''நான் யாழ்ப்பாணம் வரமாட்டேன். தமிழ் மக்களை ஐந்து சதத்திற்கும் கணக்கெடுக்க மாட்டேன். அங்கு போய் எனனால் சாகமுடியாது'' எனக் கூறினார் சந்திரிகா.

எமது 'மக்கள் கட்சி'யின் அலுவலகப் பணியாள், அலுவலகம் கூட்டுபவர் தொடக்கம் மதகுருமார் வரை நாற்பது பேர் (கட்சிக்கு அப்போது தான் சேர்ந்திருந்த புதியவர்கள் உட்பட) யாழ்ப்பாணம் சென்றிருந்தோம். சந்திரிகா மட்டும் எங்களோடு வரவில்லை.

**இனப்பிரச்சினை தொடர்பாக அவர் எப்படி நடந்து கொள்வார் என எதிர்பார்க்கிறீர்கள்?**

சந்திரிகாவுக்கு மூன்று பாஷைகள் கதைக்கத் தெரியும். அது தமிழ், சிங்களம் போன்ற மொழிகள் அல்ல. சிறுபான்மையோர் சந்தித்தால் அவர் விஜயகுமாரதுங்கவின் மொழியில் கதைப்பார். தெற்கிலுள்ள சிங்கள பௌத்தர் சந்தித்தால் அவரது அம்மாவின் பாஷையில் கதைப்பார். இருசாராரும் சந்தித்தால் அவரது அப்பாவின் மொழியில் கதைப்பார். இவரது அப்பா செய்ததைப் போல் தான் இவரும் செய்கிறார். பதவிக்கு வருவதற்காக இவரது அப்பாவைப் போல் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்த இலங்கையர் எவரும் இல்லை. எல்லோருக்கும் எல்லா வாக்குறுதியும் அளித்தார். தமிழருக்கு, சிங்களவருக்கு, பௌத்தருக்கு, கத்தோலிக்கருக்கு, முதலாளிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு எல்லோருக்கும் வாக்குறுதி அளித்தார். ஒன்றைக்கூட அவரால் செயல்படுத்த முடியவில்லை.

இன்று சந்திரிகா கூட பாண் விலையை 3.50க்கு குறைப்பதாக கூறினார். செயல்படுத்தவும் செய்கிறார். ஆனால் என்ன நடக்கிறது? நாடு நாளொன்றுக்கு 4.5 பில்லியன் ரூபா இதனால் நஷ்டமடைகிறது. விவசாயிகளுக்கு உர உதவி கொடுப்பதாகக் கூறும் சந்திரிகா அவ்விவசாயிகளின் உற்பத்திக்கு சந்தை உத்தரவாதம் அளிக்கிறாரா? பாணின் விலையைக் குறைத்து அதன் கேள்வியைக் கூட்டினால் விவசாயிகளின் உற்பத்தியை எப்படிச் சந்தைப்படுத்துவது? இந்த வாக்குறுதியின் பின்னணியில் சரியான பொருளர்தாரத் திட்டமில்லை. இதே போல் எத்தனையோ கூறலாம்.

கடந்த கால செயற்பாடுகளை வைத்துப்பார்க்கும் போது சந்திரிகா வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என எதிர்பார்க்க முடியாது.

**கடந்த கால செயற்பாடுகள் என நீங்கள் எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?**

சிங்கள பௌத்தத்தைப் பற்றியும், படைவீரர்களின் நலனைப் பற்றியும், துட்டகைமுனு விகார மகாதேவி காட்சியைப் பற்றியும் கூறி ஒரு பக்கத்தில் ஒரு பிரிவினரை திருப்திப்படுத்த முயற்சிக்கின்றவர், மறுபக்கம் இன்னொரு பாஷை பேசுகிறார்.

ஆனால் யார் பிரபாகரனோடு சென்று பேச்சுவார்த்தை நடத்தினாலும் நாங்கள் ஆதரிக்கிறோம். சந்திரிகா தெற்கில் நடத்தும் அரசியல் வேறு. வடக்கில் நடத்தும் அரசியல் வேறு. இதை மக்கள் புரிந்து கொள்ள இன்னும் சிலகாலமாகும்.

சந்திரிகா இன்று வடகிழக்கு எல்லைகளை மாற்றியமைப்பது தொடர்பாக எல்லாம் கூறுகிறார். இந்நிலைப்பாட்டில் அவர் அன்று இருக்கவில்லை. அன்று 'இலங்கை மக்கள் கட்சி'யின் தலைவி என்ற வகையில் மாகாணசபை முறையையும் கூட எதிர்த்திருந்தார் சந்திரிகா. அன்று 'ஐக்கிய சோஷலிச முன்னணி' அமைக்கப்பட்ட போது அதில் கொம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, வாசுதேவ ஆகியோர் மாகாணசபைமுறைக்கு உடன்பட்ட போதும் சந்திரிகா எதிர்த்தார். எனவே இன்றைய அவரது இம்முயற்சிகள் அரசியலை நடத்துவதற்கான கருவியாகவே இனப்பிரச்சியை பயன்படுத்தும் நோக்கிலேயே ஒழிய, தமிழ் மக்களின் பிரச்சினையை ஆழமாக பார்த்து சிந்தித்து செயலாற்றும் நோக்கில் அல்ல. இந்த முகமூடி அரசியல் எதிர்காலத்தில் தெரியவரும்.

**இனப்பிரச்சினையைப்பற்றி ஐ.தே.கவில் உள்ள காமினி - ரணில் ஆகியோர் மத்தியில் இருக்கும் நிலைப்பாடு என்ன?**

இருவரும் ஐ.தே.கவின் கொள்கையையே தங்கள் கொள்கையாக கொண்டிருக்கின்றனர். குறிப்பாக மாகாணசபைகளுக்கு கூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் டி.பி.விஜேதுங்கவிடம் காணப்பட்ட நிலைப்பாடு வேறு. அவரது நிலைப்பாட்டுக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தோம்.

**கடந்த காலங்களில் இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாடு இறுதிவரை மோசமானது என்ற கருத்து பல்வேறு மட்டங்களில் உள்ளது. அந்தவகையில் ரணில், காமினி ஆகியோர் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள் எனக் கூறுகிறீர்களா?**

இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே.க. எவ்வளவோ விடயங்களைச் செய்ய இருந்தது. நான் சந்திரிகாவிடம் கோருகிறேன்; பிரபாகரனுடன் கதைக்க லலித்தின் மனைவி ஸ்ரீமணியையும் கூட்டிச் செல்லுமாறு. ஏனெனில் அன்று தீர்வுக்கான அறிகுறிகள் தென்பட்ட நேரம் பார்த்து பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி அந்த 'புலிகள் பத்தொன்பது பேரையும் உடனே கொழும்பு கொண்டுவருமாறு கூறினார். எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் முக்கிய 19 உறுப்பினர்களும் மேற்படி ஆனைணயினாலேயே சையனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர். இன்று அது ஸ்ரீமணிக்கு ஞாபகமில்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த சம்பவத்தினால் யுத்தம் மீண்டும் பெரிதானது.

பிரபாகரனிடமும் அவ்வாறான பிழைகள் இருந்தது. பிரபாகரன் கூட இடைக்கால நிர்வாகக்குழு ஏற்படுத்தப்படும் போது எல்லோரும் தங்களது இயக்கத்தினராகவே இருக்க வேண்டும் எனக் கூறினார். ஏனைய புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப், ரெலோ, ஈரோஸ் எதையுமே கண்டுகொள்ளவில்லை.

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பிரேமதாச எடுத்துக்கொண்ட முயற்சி அளவு கூட சந்திரிகா இதுவரை செய்யவில்லை. ஜனாதிபதி பிரேமதாசவைப் பற்றி இவர்கள் கூறும் பெரும் குற்றச்சாட்டுதான் அவர் ஆயுதம், சீமெந்து கொடுத்தார் என்பது. வடக்கின் புலித்தலைவர்களை கொழும்பு ஹோட்டலுக்கு கொண்டு வந்து சாப்பாடு கொடுத்தார்கள் என்பது நாளை பிரபாகரன் ஆறுபேரை பேச்சுவார்த்தைக்கென்று அனுப்பி வைத்தால் சந்திரிகா அவர்களை தெமட்டகொட மாட்டுதொழுவத்திலா இருக்கச் செய்வார். நான் உங்களை கதைப்பதற்காக கூப்பிட்டேனாயின் உங்களை

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மஹாகவியின்
# கோடையும் புதியதொரு வீடும் வெறும் காதல் கதைகள் அல்ல

காசிநாதன் சிவபாலன்

மஹாகவியின் நம்பிக்கைச் சாசனங்கள் சந்தம் குறையாமல் சரியாக வந்து விழ மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் நமக்கு அளித்த 'புதியதொரு வீடு' பாநாடகம் கலாநிதி மௌனகுரு நெறியாள்கையில் அர்ச்.சவேரியார் பாடசாலை அரங்கில் செப்.17இல் மாணவர்களுக்கும், செப்.18இல் பெரியோர்களுக்கும் அவைக்காற்றபட்டது. 5-9-71இல் புனித ஜோசப் கல்லூரி மண்டபத்தில் திருமலையில் நாடோடிகள் மேடையேற்றிய இந் நாடகத்தை மீண்டும் திருமலையிலேயே 23 வருடங்களுக்குப்பின் பார்க்கக் கிடைத்தது அதிர்ஷ்டவசமானதே. கிடைத்த அனுபவங்களும் வித்தியாசமானவையே. முன்னைய மேடையேற்றத்தில் ஆடல் பாடல்கள் அத்தனை முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால் ஒளியமைப்பு முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. நடிப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது. தாசீசியசே மறைக்காடராய் நடித்திருந்தார்.

**"மாண்டது போல மயங்கி வீழ்ந்திடில் நாம் மனிதரா? மறுபடி துணிவோம்.**
**வேண்டியவாறு வேண்டிய விளைக்கும் வேட்கையில் விறுடன் முயல்வோம்."**

**"வேருக்குள் உறுதிகொண்ட வேம்புகள் மனிதர்....."**

**"எங்கள் கடலில் எனக்கோர் தொழிலிருக்கும். எங்கள் தரையில் எனக்கோர் துணையிருக்கும்.....!**

**"சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்.**
**சிலவேளை அதைவந்து கடல் கொண்டு போகும்.**
**எறிகின்ற கடல் என்று மனிதர்கள் அஞ்சார்.**
**எதுவந்ததெனின் என்ன அதை வென்று செல்வார்"**

இவையாவும் புதியதொரு வீட்டில் மஹாகவி எத்தகைய இடர்கள், சோதனைகள் வந்த போதும் அவற்றை எதிர்கொண்டு நம்பிக்கையுடன் மனிதன் முன்னேறத்தான் வேண்டும் என்பதை எடுத்துக்கூறும் பாண்மையினைக் காட்டுகிறது.

நாடோடிகளின் கோடை முதல் மேடையேற்றத்தின் வெற்றி தந்த தெம்பால் 31.08.69க்கும் 3.09.69க்குமிடையே நான்கே நாட்களில் புதியதொரு வீடு எழுதப்பட்டது. பின்னர் "அம்பா" பாடல்கள் தாசீசியசின் ஆலோசனையின் பேரில் பிற்சேர்க்கையாக எழுதப்பட்டது. இப்பாடல்கள் அன்னியப்படுத்தல் உத்திக்கு அனுசரணையாக மோடிப்படுத்தப்பட்ட (ஒயிலாக்கப்பட்ட) நாடகமான இப்பா நாடகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்பொழுது சிவகுமாரனும், கோமலும் சரி, அந்தக்காலத்தில் கலாநிதி சிவத்தம்பியும் சரி நாடகக் கதை இறுதி ஆய்வில், ஒரு காதல் கதைதான்- கோடை.

கணவன் இறந்து விட்டான் என நம்பும் ஒரு மீனவப் பெண் அவன் தம்பியை கலியாணம் செய்து கொள்ளும் ஒரு கதை- புதிய தொரு வீடு என மிகச் சுலபமாகக் கூறிவிட்டாலும் எனது கருத்தில் மஹாகவியின் சிக்கலில்லாத சுலபமான கதையமைப்பு (PLOT) காத்திரமான பல விடயங்களைக் கூற மேற்கொண்டுள்ள உத்தியாகவே படுகின்றது.

மஹாகவியின் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு சொல்லும் பலமுறை வாசிக்கப்பட வேண்டியவை. வாசித்துச் சிந்திக்க வேண்டியவை. இதை செய்யாதோர் அவரின் படைப்பின் சாரத்தை இழக்கின்றனர். (Miss the essence of this works) இன்னொரு வகையில் இதைப் பார்ப்பதானால் சிக்கலான கதைகளைக் கொண்டு வந்து சுவைஞரைக் குழப்பாதது காத்திரமான பல விடயங்களைக் கூறும் அன்னியமாக்கல் உத்தியை மேம்படுத்தவே எனலாம். பேர்ட்டோல்ட் பிரெச்ட் (Bertolt Brecht) ஐ மஹாகவி வாசித்தாரோ; அவர் படைப்புக்களைப் பார்த்தாரோ இல்லையோ. அவற்றின் அடிநாதம் எமது கீழைத்தேயத்தவையே என்பதால் அவை மஹாகவியினால் உணரப்பட்டிருத்தல் விளங்கக்கூடியதே. இவ்விடயத்தில் தாசீசியத்தின் தொடர்புப் உதவியிருக்கலாம்.



மஹாகவி 69இலேயே "அரியகுட்டியின் அன்புப் புதல்வன், மாசிலன், எனது மணவினைக் கூற்று..." என்று தொடங்கி எவ்வளவு அழகாகத் தமிழில் ஒரு திருமணத்தினை நடத்திக் காட்டுகின்றார்.

தெலுங்குக் கீர்த்தனையை சென்னை வானொலியில் கேட்டு மன்னவன் "கொன்னையான தமிழாய் கிடக்குது" எனக் கூற மயிலி "இசையோ ஓரளவு இனிக்கிறது ஆயினும் உருகி உருகி பாடுகிறாரே, ஏன் உருகுகிறார், எதற்கு உருகுகிறார்?" எனக் கூறுவதன் மூலம் மஹாகவி தமிழிசை இயக்கத்துக்கேயல்லவா தரமான ஆதரவைத் தருகிறார்.

மின்னல் புயல் மழையென உருவகப்படுத்தி ஆடுவோரும், சிறுநண்டாய் மணல்மீது படம் கீறுவோரும் சிறப்பாய் செய்தனர். பாடல்களைப் பாடுவோரும் நன்றாய்ப் பாடினார். முன்னர் குளுர்த்திப் பாடல் பாடியோரின் குளிர்வான பாடல்கள். வயலின் இசை சில வேளைகளில் மேலெழுந்து பேச்சோசையை அமிழ்த்துகிறது. சில வேளைகளில் பதியப்பட்ட வட நாட்டு இசை ஒலிப்பேழை ஒலி, நாடகத்தின் சூழல் பகைப்புலத்திற்கு பொருத்தமானதாக இல்லை. தென்மாங்கு, மெட்டுகள், புல்லாங்குழல், வீணை, ஒலி இவை பொருத்தமானதோ?

ஒயிலாயமைந்த இந்நாடகம் பகலில் 10.00மணி, 4.00மணிக்கு பாடசாலை மேடையில் நிகழ்த்தப்பட்டது. மின்சாரம் இல்லாத யாழ்ப் பாணத்தில் ஒளியமைப்பின் முக்கியத்துவம் கருத்தில் கொள்ளப்படாதது சரியே எனினும் ஏனைய இடங்களிலும் 'ஒளி' தவிர்க்கப்படல் வேண்டுமா? நிச்சயமாக ஒழுங்கான ஒளியமைப்பு ஒயிலாக்கப்பட்ட இந்நாடகத்துக்கு மெருகு சேர்க்குமென நம்பலாம்.

89 செப்.10இலும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கிலே 'மாயனாக' நடித்த இன்றைய கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கிருபாகரனின் நடிப்பு திருமலை மேடையேற்றத்தில் மிகக் காத்திரமாக அமைந்திருந்தது.



மஹாகவியின் பாத்திரங்களில் ஒரு ஐயர்/சாமியார், ஒரு அயலவர், ஒரு சிறுவன், அவன், அவள் எனப் பலர் வருவர். சிறுவனாக நடிக்கும் சஞ்சீவன் சிறு நண்டாட்டம் துடுக்காய்த் திரிந்து நடித்திருக்கிறார். மையுண்ட நெடுங்கண்ணாத்தை பாத்திரத்தின் தன்மையை வெளிக்கொணர்ந்த பாங்கு (Interpretation) மென்மையாகவும், சிறப்பாகவும் அமைந்திருந்தது. சிலவேளைகளில் பின்வரிசைக்கு குரல் கேட்கவில்லை என்ற குறை தவிர. யாழ்ப்பாணத் தமிழ் மட்டக்களப்பார் வாயில் நுழைந்து வரும் போது தரும் சுகமே அலாதியாய் இருக்கிறது. சிவராணி (மையுண்ட நெடுங் கண்ணாத்தை), கௌரி (மயிலி), விரிவுரையாளர் பாலகுமார் (மாசிலன்), பத்மரஞ்சன் (மறைக்காடர்) யாவரும் சிறப்பாகவே நடித்தனர்.

ஓகன் -சாரங்கன் ஸ்ரீரங்கநாதன், ஒளி/ இசை உதவி-சித்தார்த்தன், தபேலா- குகன், டோல்கி-ரமேஷ், வயலின் - சரஸ்வதி ஆசிரியை, பின்பாட்டு, கதை கூறுவோரில் உதயதாஸ், சீவரத்தினம் சிறப்பாகச் செய்தனர். இவர்களோடு வசந்தரூபி, சாந்தமலர், சியாமளா, அன்பழகன், தயானந்தன், சண்முகநாதன், ஸ்ரான்லி பிரபாகரன், சுதாகரன், சந்திரலிங்கன் எனப் பல மாணவ மாணவிகளும் தம்பங்கினை ஆற்றினர்.

முடிவாக கலாநிதி மௌனகுரு இது போன்ற நாடகங்களை கிழக்கிலங்கையின் பல ஊர்களிலும் தொடர்ந்து பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவர் மூலம் நடாத்தி ஒரு காத்திரமான நாடக அரங்கப் பண்பாட்டை கிழக்கிலங்கையில் வளர்க்க உதவ வேண்டும். தெருவெளி நாடகமும் (Street play) போடப்போவதாக திருமலைக் கடற்கரையில் வைத்துக் கூறினார். அதுவும் நல்ல முயற்சியாகவே அமையும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திறந்த பொருளாதாரக் கொள்கையும்ஜனநாயகப் போராட்டத்தின் சவால்களும் — 3

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

பொது மக்கள் முன்னணி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைப் பிரகடனம் செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது. எட்டுப்பக்கங்கள் கொண்ட இந்தச் சிறிய பிரசுரம் பொருளாதார விருத்திபற்றி அரசாங்கம் கொண்டுள்ள பொதுப்பார்வையைச் சுருக்கமாக விவரித்துள்ளது. பொது மக்கள் முன்னணியின் நோக்கம் சந்தைச் சட்டகத்திற்குள் ஒரு பலமான தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்வதாகும். இதை அடைவதற்குப் பயன்படும் வளர்ச்சி இயந்திரம் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்ட தனியார்துறையாகும். சந்தை நன்றாக அல்லது பூரணமாக இயங்க முடியாத செயற்பாடுகளையும், சமூகத்தின் வறிய மக்களுக்கு உதவும் திட்டங்களையும் அரசு பொறுப்பேற்கும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அம்சங்களைப் பொறுத்தவரை இன்றைய அரசாங்கமும் ஐ.தே.க அரசாங்கமும் அடிப்படையில் ஒரே விதமான கொள்கைகளையே கொண்டுள்ளன. அதாவது ஐ.தே.க ''திறந்த பொருளாதாரம் + ஜனசவிய(வறுமை குறைப்புத்திட்டம்)'' எனும் இணைப்பைக் கொண்டிருந்தால், பொதுமக்கள் முன்னணி ''திறந்த பொருளாதாரம் +சமுர்த்தி(வறுமை குறைப்புத்திட்டம்)'' எனும் இணைப்பை முன்வைக்கிறது.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை பொதுமக்கள் முன்னணி ஐ.தே.கவின் அபிவிருத்தி விரோத நடைமுறைகள், ஊழல்கள் போன்றவற்றையும், வடகிழக்கில் யுத்தத்தை தொடர்வதாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வை தேடாததாலும் ஏற்பட்டுள்ள பாரதுாரமான பொருளாதார ரீதியான இழப்புக்களையும் வெளிப்படுத்தி விமர்சித்து வருகிறது.

அரசுடைமைகளைத் தனியுடைமையாக்கல் எனும் கொள்கைப் போர்வையில், ஐ.தே.க ஆட்சி சமூகத்தின் சொத்துக்களை ஒரு சில கட்சிப்பிரமுகர்களும் அவர்களின் பந்தம் காவிகளும் அபகரித்துள்ளதை, இவர்கள் தேசியப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுதற்கு மாறாக அதற்குக் குந்தகம் விளைவித்ததை இன்றைய ஆட்சியினர் ஆதார பூர்வமாக வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த விமர்சனங்கள் எல்லாவற்றினதும் சாராம்சம் என்னவெனில் ஊழல்களையும், மற்றைய சமூகவிரோதச் செயல்களையும் இல்லாதொழித்து அல்லது பலமாகக் கட்டுப்படுத்தி அத்துடன் தேசிய இனப்பிரச்சினைக்கும் அதையொட்டிய உள்நாட்டு யுத்தத்திற்கும் நியாயமான தீர்வினையும் பெற்றுவிட்டால் திறந்த பொருளாதாரம் துரிதமாக வளர்ச்சி பெறச்சாதகமான சூழ்நிலை உருவாகும் என்பதாகும்.

அத்தைகைய ஒரு சூழ்நிலை இலங்கையின் தேசிய அபிவிருத்தியின் அடிப்படை முன்நிபந்தனைகளுள் அடங்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவைமாத்திரம் போதாது. உண்மையில் இலங்கையின் இன்றைய காலகட்டத்து நிலைமைகளில் ''திறந்த பொருளாதாரம்'' என்பதன் உள்ளடக்கம் என்ன என்பதே இன்னும் தெளிவாக்கப்படாத அடிப்படைக் கேள்வியாக எழுந்து நிற்கிறது. நடைமுறையில் பூரணமாக திறந்த பொருளாதாரமாக ஒரு தேசியப் பொருளாதாரம் இயங்குவதில்லை. ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஒரு தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை அதிகரித்து அதே நேரம் அத்தகைய வளர்ச்சியை சமூகத்தின் ஜனநாயக மயமாக்கலுக்கும் நலவிருத்திக்கும் உதவும் வகையில் எப்படி முகாமைத்துவப்படுத்துவது என்பது இன்னும் தெளிவற்ற ஒரு பெரும் பகுதியாக இருக்கிறது.

இந்த விடயத்தில் அரசு, சந்தைகள், சமூக ஸ்தாபனங்கள் போன்றவற்றின் பங்குகள் பற்றிய விவாதங்கள் இதுவரை அரசாங்கத்திற்குள்ளேயும் இல்லை. வெளியேயும் இல்லை. முன்னைய ஆட்சியின் கொடுமைகளை வெளிப்படுத்துவதிலும், தனித்தனியாகச் சில பிரச்சினைகளைத் தற்காலிகமாக கையாள்வதிலும் (உதாரணமாக விவசாயிகளுக்கு பசளை மானியம் வழங்கல், சமுர்த்தி திட்டத்தில் சேவையாற்ற இளைஞர்களுக்கு வேலைவழங்கல்) காட்டப்படும் ஆர்வத்தின் ஒரு பகுதி கூட இந்த அடிப்படைப் பிரச்சினை மீது இதுவரை காட்டப்படவில்லை என்றேபடுகிறது. அரசாங்கம் இன்னமும் பொதுமயமான பிரகடனங்களுடனேயே திருப்திப்பட்டுக் கொள்வது போல்படுகிறது. அதே நேரம் விவசாயிகளுக்கு பசளை மானியம், தொழிற்சங்கச் சுதந்திரங்கள், அரசாங்கத்தின் பணிப்பில் சில அத்தியாவசியப் பொருட்களின் விலையிறக்கம் போன்றவை நடைமுறையில் பொருளாதாரக் கொள்கை பாடப்புத்தகத்தில் காணப்படும் தூயசந்தை மாதிரியிலிருந்து வேறுபடும் அறிகுறிகளாக அமைகின்றன.

பொருளாதாரம் - ஜனநாயகம் - சமூகநலன் எனும் மூன்றும் பற்றிய ஒருங்கிணைந்த கொள்கைத்திட்டம் அவசியம்தானா? ஏன் இவற்றைச் சுதந்திரமான போக்குகளுக்கூடாக அவற்றின் முரண்பாடுகளின் வெளிப்பாடுகள் தென்படும் போது அரச தலையீடுகளுக்கூடாக கையாளப்படக்கூடாது? அரசாங்கம் இம்மூன்றினைப் பற்றியும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதால் இவை பற்றிய பிரச்சினைகளை நடைமுறையாக அவ்வப்போது கவனித்துக் கொள்ள முடியாதா? இந்தக் கேள்விகளை சமீபத்தில் ஒரு மாலை உரையாடலின் போது கிளப்பினார் எனது நண்பர் ஒருவர். இந்த நிலைப்பாட்டிற்கு சாதகமாக இன்னும் சிலவற்றைச் கூறலாம். உதாரணமாக, ஜனநாயக சுதந்திரங்கள் உள்ள நிலையில் தொழிலாளர்கள் சம்பள உயர்வு மற்றும் நலன்களுக்காகப் போராடலாம். பொதுமக்கள் சமூக நலன்களைக் கோரலாம். அரசியல் கட்சிகள் இவற்றிற்கு ஆதரவு வழங்கும். இவற்றிற்கூடாக சமூகத்தின் வருமானப்பங்கீட்டை சீர்திருத்தும் சந்தர்ப்பங்கள் பிறக்கும். ஒரு சமூக ஜனநாயக முதலாளித்துவ அமைப்பின் பரிணாமத்தை ஊக்குவிக்க இதுவே சரியான வழியென்றும் சிலர் வாதிக்கலாம்.

ஆனால் இதன் மறுபக்கத்தையும் நாம் பார்க்க வேண்டும். சமூக நலன் விருத்தியின் ஒரு அம்சமான வருமானப்பங்கீடு தொழிலாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்குச் சாதகமாக அமைவதற்கு சமூக ஜனநாயக அரசியல் சட்டத்துடன் துரிதமான உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும் அவசியம். இவையிரண்டிலும் அரசின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. மேற்கின் சமூக ஜனநாயக அமைப்புக்களின் விருத்திக்கும் தொடர்ச்சிக்கும் அரச நிறுவனங்கள் இன்றியமையாதவை என்பது வரலாற்று அனுபவம். அதே போன்று 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் கைத்தொழில் மயமாக்கலில் வெற்றி பெற்ற தேசிய பொருளாதாரங்களின் விருத்தியிலும் அரசின் பங்கு மிகமுக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. அரசின் இத்தகைய பங்கு ''அடம்ஸ் ஸிமித்''தும் அவருக்குப் பின்வந்த நவீன பொருளாதார தாராளவாதிகளும் வக்காலத்து வாங்கும் ''ஆகக் குறைந்த பட்ச அரச தலையீடு'' எனும் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்டது. பல மட்டங்களில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளினதும் மக்கள் அமைப்புக்களினதும் பங்குபற்றல் அல்லது ஆலோசனையுடன் இயங்கும் சமூக ஜனநாயக அமைப்பே முதலாளித்துவ உலகின் அதிஉயர் வளர்ச்சி பெற்ற ஜனநாயக அமைப்பெனலாம். நடைமுறையில் இத்தகைய அமைப்பைக் காண்பதரிது.




இத்தகைய அமைப்பொன்று உருவாக்கப்பட பலம் வாய்ந்த தொழிலாளர் மற்றும் மக்கள் அமைப்புக்கள் தேவை. முதலாளிவர்க்கத்துடன் பேரம் பேசி சீர்திருத்தங்களை ஸ்தாபன மயமாக்குவதற்குச் சாதகமான அரசாங்கம் தேவை. இவை மட்டும் போதாது. இத்தகையதொரு சமூக ஜனநாயக அமைப்பின் தொடர்ச்சியான மீள்உற்பத்தியை உத்தரவாதப்படுத்தவல்ல பொருளாதாரப்பலம் வேண்டும். இங்குதான் ஒரு சிக்கலான முரண்பாடு எழுகிறது. பொருளாதாரம் நன்கு செயற்படும் போது சமூக நலன்களை வளர்க்கும் வகையில் உபரியின் ஒரு பகுதியை அரசு வரிகளுக்கூடாக பெற்று பங்கீடு செய்ய முடியும். ஆனால் உலகச் சந்தை நிலைமைகளால், உள்ளார்ந்த தேசிய காரணங்களால் பொருளாதாரம் மந்தமடையும் அல்லது வீழ்ச்சியடையும் போது அரசு பெறக்கூடிய வருமானமும் வீழ்ச்சியடைகிறது. அதேவேளை இந்தக்கட்டத்தில்தான் பலருக்கு சமூக உதவி தேவைப்படுகிறது. குறிப்பாக பொருளாதார நெருக்கடியில் வேலையிழந்தோருக்கு. இத்தகைய நெருக்கடி ஏற்படும் போது மூலதனத்தின் சொந்தக்காரர்கள் சமூக நலன் அமைப்புக்கெதிராக மாறுவதும் உண்மை. பொருளாதார நெருக்கடியின் விளைவாக சமூக நலன்கள் குறைக்கப்படுகின்றது. ஆகவே நிரந்தரமாக சுமுகமாக இயங்கும் சமூக ஜனநாயகத்தை நடைமுறையில் காணமுடியாது.

இத்தகைய சீர்திருத்தப் போக்கில் பெருமளவிலான முன்னேற்றத்தைக் கண்டுள்ள நாடுகளாக ஸ்கண்டிநேவிய நாடுகளையும் நெதர்லாந்தையும் கொள்ளலாம். தனியார் வருமான வரிக்கூடாக சமூகத்தின் வருமானத்தின் ஒரு பகுதியை அரசு திரட்டுவதன் மூலம் சமூக நலசேவைகளை சகல அங்கத்தவர்களுக்கும் வழங்குவதற்கான முதலீட்டை அது பெறுகிறது. இங்கு கவனிக்கப்படவேண்டிய ஒன்று; சமூக நலனுக்குத் தேவையான வளங்களை அரசு தேசிய பொருளாதாரத்திற்கூடாக அதே சமூகத்திடமிருந்தே பெறுகிறது. இத்தகைய சமூக நலன்களின் அளவு ரீதியான, பண்பு ரீதியான மட்டங்கள் தேசிய பொருளாதாரத்தின் பலத்திலும், அரசியல் சக்திகளின் சமன்பாட்டிலும் தங்கியிருக்கின்றன. மூலதனத்தின் அதிகரிக்கப்பட்ட மீள் உற்பத்தியைப் பாதிக்காத வகையில் சமூகத்தின் மொத்த உபரியின் ஒரு பகுதியை சமூக அங்கத்தவர்களின் பலவித நலன்களுக்காகச் செலவிடுவதுடன் உழைப்பாளர்களின், பொது மக்களின் ஸ்தாபனரீதியான சம்மதத்தையும் பெற்று ஆட்சி செய்யும் அமைப்பே நவீன சமூக ஜனநாயகமாகும். இத்தகைய ஒரு அமைப்பின் வெற்றியை நிர்ணயிப்பதில் அதன் பொருளாதார பலம் மிகமுக்கிய பங்கை வகிக்கிறது. அரசியல் முடிவுகளுக்கூடாக அரசின் சமூக நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் இத்தகைய சமூக நலன் அமைப்பு ரீதியான அதே சமூகத்தின் பொருளாதாரத்தில் தங்கியிருக்கிறது. இலங்கை போன்ற பின்தங்கிய பொருளாதாரங்களைக் கொண்ட வறிய நாடுகளின் அரசாங்கங்கள் தமது ''வறுமை குறைப்பு''த் திட்டங்களுக்கான பணத்தேவைகளை வெளிநாட்டு அல்லது சர்வதேச நிறுவனங்களிடமிருந்து ''இலவசமாக'' அல்லது கடனாகவே பெறுகின்றன என்பது இங்கு நினைவு கூரல் தகும்.

இத்தகைய திட்டங்கள் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களுக்கூடாக ஒரு சமூகத்தின் அங்கத்தவர்களின் உரிமைகள் எனும் அடிப்படையில் ஸ்தாபனமயமாக்கப்படும் சமூக நல சேவைகளிடமிருந்து வேறுபட்டவை. அதாவது சமூக ஜனநாயகத்தில் சமூக நலன்கள் பொதுமக்களின் உரிமைகளாக வென்றெடுக்கப்படுகின்றன. (உதாரணமாக, தொழிற்சங்க, மக்கள் போராட்ட செயற்பாடுகளுக்கூடாக) ஆனால் வறுமை ஒழிப்புத்திட்டங்கள் பெரும்பாலும் அமைப்புக்கு வெளிவாரியான தற்காலிக உதவித்திட்டங்களாகவே செயற்படுகின்றன. அத்துடன் இவை ஆளும் கட்சியினால் அரசியல் மயப்படுத்தப்படுகின்றன. இது இத்தகைய திட்டங்களை அமைப்பு ரீதியில் மக்கள் உரிமைகள் அடிப்படையில் ஸ்தாபன மயமாக்க, உள்வாரிப்படுத்தத் தடையாகவும் அமையலாம்.

உதாரணமாக ஐ.தே.க. கொண்டு வந்த ஜனசவியவிற்குப் பதிலாக பொதுமக்கள் முன்னணி சமுர்த்தியைக் கொண்டு வந்துள்ளது. இவ்விரண்டிற்குமிடையே என்ன வித்தியாசம் என மக்கள் வினவிக் கொள்கிறார்கள். உண்மையில் சமுர்த்தி திட்டம் இன்னும் பூரண உள்ளடக்கம் பெறவில்லை. இப்போதுதான் அரச உயர்மட்ட அதிகாரிகள் இதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

**(வரும்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடலின் ச

## போலந்து-ஜேர்

## எல்லையோரம் ந

## பயங்கரம்:

ஒன்பது வருடங்களுக்கு மேலாகப் பிரிந்திருந்த தனது 18 வயது மகனின் வருகைக்காகக் காத்திருந்த ஒரு தந்தையும், பல ஆயிரம் மார்க்குகள் செலவழித்தாலும் பரவாயில்லை இரண்டு வருடங்களின்பின் இப்போதாவது ஒன்றிணைய நேரம் வந்ததே என்கின்ற மகிழ்ச்சியில் ஒரு இளைஞனும், உறவினர்களை எதிர்பார்த்திருந்த இன்னும் பலரும், அவர்கள் போலந்தில் இருந்து ஜேர்மனிக்கு வருவதாகக் குறிப்பிடப்பட்ட திகதி தாண்டியும் வந்துசேரவில்லை அல்லது தொலைபேசியில்கூட தொடர்பு கொள்ளவில்லை என்று கலங்கித் தேடுதலில் இறங்கிய போது, தேடியவர்களுக்குக் கிடைத்ததோ இந்த அதிர்ச்சியான செய்தி. ஒகஸ்ட் 27ம் திகதி அன்று இரவு 22 பேர் கொண்ட குழு ஒன்று போலந்து - ஜேர்மனி எல்லையிலுள்ள நைச **(neisse)** என்னும் நதியைக் கடந்து ஜேர்மனியை அடைய முற்பட்டது. அம்முயற்சியின் போது ஆற்றின் வேகமும், தண்ணீரின் மட்டமும் திடீரென அதிகரித்ததால் சிலர் ஜேர்மன் கரையை பலசிரமங்களுக்கு நீந்தி மத்தியில் வந்தடைய மற்றையோர் ஆற்றோடு அள்ளிச் செல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் போது தப்பி வந்த நாலு தமிழர்களில் இருவர் கிழக்கு ஜேர்மனியிலுள்ள அகதிகள் முகாமில் இருப்பதாக அறிந்த நாம் அங்கு விரைந்தோம். அந்தக் குக்கிராமத்தில் நாங்கள் தேடிவந்த இடத்தை கண்டுபிடிப்பதென்பது மிகவும் சிரமமாகவே இருந்தது. நிறவாதம் உச்சக்கட்டத்தை அடைந்து கிராம மக்களின் உதவியுடனே புதிய நாசிகள் அகதிகள் முகாம்களை எரித்து, பல அகதிகள் கொல்லப்பட்டும், தாக்கப்பட்டும், இன்னமும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்தும் கொண்டிருக்கின்ற கிழக்கு ஜேர்மனியில் நிற்கிறோம் என்று நினைத்தபோது பய உணர்வு மனதில் ஏற்படத்தான் செய்தது. ஜேர்மன் நண்பர் ஒருவர் கூடவே வந்திருந்தது ஓரளவு ஆறுதலாக இருந்தது.

குழுக்குழுவாக வந்துகொண்டிருந்த ஆசிய நாட்டவர்களைக் கண்டதும் அகதிமுகாமிற்கு அண்மையில்தான் நிற்கிறோம் என்ற தெண்பு பிறந்தது. நாசிகள் அண்மையில் அகதிகளைத் தாக்கியதாகவும், எந்தவேளையிலும் தாங்கள் தாக்கப்படலாம் என்றும், தனித்துப் போவது ஆபத்தானது அதனாலேயே குழுக்குழுவாகவே தாங்கள் வெளியே செல்வதென்றும், கூடியளவு பாதுகாப்பு நடவடிக்கையாக தங்களால் இதைமட்டுமே செய்யமுடியுமென்றும் அக்குழுக்களில் வந்தவர்கள் நாம் உரையாடும் பொழுது தெரிவித்தனர்.

நாங்கள் தேடி வந்தவரின் பெயர் சொன்னதும் மெலிந்த, நோய்வாய்ப்பட்டவர் போல் தோற்றமளித்த ஒரு இளைஞனை அழைத்து வந்தனர். ஏற்கனவே பீதிபடர்ந்திருந்த அவர் முகம், காரணம் அறிந்ததும் மேலும் கலவரமடைந்தது. ''நான் இலங்கையில இருந்து தமிழ் முகவரின் உதவியுடன் புறப்பட்டு இரண்டு வருடங்கள் மொஸ்கோவிலும், பின் போலந்திலும் நின்றேன். வார்சோவில் (warschau) நான் பாகிஸ்தான் நாட்டவர்களுடனேயே தங்கியிருந்தேன். சம்பவம் நடந்த ஒகஸ்ட் 27ந் திகதி அன்று இரவு கண்ணாடியோ, யன்னலோ



இல்லாத வான் ஒன்றில் நாங்கள் ஏற்றப்பட்டோம். பின் வெவ்வேறு இடங்களில் வான் நிறுத்தப்பட்டு தமிழர்களும், பாகிஸ்தான், பங்களாதேஷ் நாட்டவர்களும் ஏற்றப்பட்டனர். எங்களுடன் வந்தவர்களில் கிட்டத்தட்ட இரண்டு பெண்கள் உட்பட 12 தமிழர்கள் இருந்தார்கள் என்றே ஊகிக்கின்றேன்.

எங்களை அழைத்து வந்த தமிழ் முகவரின் உதவியாளர்களான பாகிஸ்தானியர்கள் தண்ணீரின் ஆழம் இடுப்புவரையும்தான் என்று கூறியதை நம்பி இறங்கினோம். ஆனால் தண்ணீர் கழுத்திற்கு மேல் வந்து விட்டது. அந்தத் திடீர் அதிர்ச்சியால் நாங்கள் எல்லோரும் தத்தளித்தோம். நான் உட்பட இன்னும் சில தமிழரும் பாகிஸ்தானியர்களும் நீந்திக் கரையை வந்தடைந்தோம். இரண்டு பெண்களும், மற்றையவர்களும் ஆற்றோடு அள்ளுப்பட்டுச் செல்வதை நான் நேரில் பார்த்தேன்.

ஈர உடைகளோடு குளிரில் நடுங்கியவண்ணம் காட்டுப்பாதைகளூடாக நடந்து வந்து வாடகைக்கார் ஒன்றை மறித்த போது, அவன் எங்களை ஏற்றிவந்து பொலிசாரிடம் ஒப்படைத்து விட்டான். விசாரணையின் பின்னர் மீண்டும் போலந்துக்குப் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டோம்.''

இலங்கையில் தாய், இரண்டு சகோதரிகளை யுத்தத்தினால் பறிகொடுத்த இவரின் இன்னுமொரு சகோதரி மருத்துவமனையில். இவ்வளவு கஷ்ரத்திற்கு மத்தியில் உயிர் தப்பி இங்கு வந்து சேர்ந்தால் இங்குள்ள பிரச்சினைகளோ பலமடங்கு அதிகம். ஜேர்மனிக்கு வந்து சேரும் தமிழர்கள் இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? என்று நீண்ட பெருமூச்சோடு எங்களை நோக்கினார்.

இவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு சம்பவத்தில் உயிர்தப்பியவராகிய மற்றவரைச் சந்திக்கப் புறப்பட்டோம்.

மரங்கள் அடர்ந்து படர்ந்திருந்த காட்டுப்பகுதிக்கு வந்து சேர்ந்தோம். சில வேளை இடம்மாறி வந்து விட்டோமோ என்கின்ற எண்ணம் எந்தவொரு கணமும் எங்களுள் எழவில்லை? கிட்லரின் பாசிச ஆட்சியில் யூதர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களைப் போன்று (Concentration camp) இன்றைய ஜேர்மனியில் அகதிகள் முகாம் அமைக்கப்பட்டிருப்பது ஒன்றும் ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல.

அது ஒரு பழைய இராணுவ முகாம். நாலாபுறமும் காடு. கிராம எல்லைப்புறத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் ஓர் ஒதுக்குப்புறத்தில் இருந்தது. அங்கிருந்த அகதிகள் உணவுப் பொருட்கள் வாங்கவோ, அல்லது தொலைபேசியில் கதைக்க வேண்டுமென்றாலோ அந்தக் கிராமத்திற்குத்தான் செல்ல வேண்டும். 50 தமிழ் அகதிகளுக்கும் ஒரு கட்டிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அறைக்கதவைத் தட்டி உள்ளே சென்றபோது அவர்கள் இரவு உணவை உண்டு கொண்டிருந்தனர். மதிய , இரவு உணவாக ஆளுக்கு இரண்டு துண்டு பாணும், இரண்டு வூஸ்றும், கோப்பியும் தருகிறார்கள். மிக அரிதாகவே சோறு தருகிறார்கள். இந்த உணவு ஒரு போதும் எங்கள் வயிற்றுப்பசியை அடக்குவதில்லை. மேலதிகமாக நாங்கள் ஏதாவது வாங்கி உண்ண விரும்பினால் 6 கிலோ மீற்றர் நடக்க வேண்டும் என்று அங்கிருந்த அகதி ஒருவர் கூறினார்.

அறையில் யன்னற் கண்ணாடிகள் உடைந்திருப்பதை அவதானித்த நாம் அதற்கான காரணத்தைக் கேட்ட போது தாங்கள் இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அங்கு கொண்டு வரப்பட்டதாகவும், வரும்பொழுது அவை உடைந்திருந்ததாகவும் கூறினார். முன்னர் நாசிகள் இந்த அகதிகள் முகாமைத் தாக்கியிருக்கலாம் என்றே நாங்கள் எண்ணிக் கொண்டோம். 27ம் திகதி நடந்த சம்பவம் பற்றிக்



கபத்திரா

கேட்ட போது தப்பிவந்த இளைஞர் பின்வருமாறு விரிவாகக் கூறினார்.

''கொழும்பில் உள்ள தமிழ் முகவருக்கு காசு கட்டிவிட்டு 18 மாதங்கள் மொஸ்கோவில் நின்றேன். தமிழ் முகவர்களுக்கு கீழே வேலை செய்கிற பாகிஸ்தானியர்கள்தான் எங்களை மொஸ்கோவில் இருந்து போலந்தில் உள்ள ஒரு கிராமத்திற்கு அழைத்து வந்தார்கள்.

27ம் திகதியன்று ஆற்றிற்குக் கிட்ட வந்ததும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த வேகத்தைப் பார்த்ததும் எங்களுக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. தண்ணீரின் ஆழம் இடுப்பளவுதான். எல்லோரும் ஒருத்தரை ஒருத்தர் கையைப்பிடித்துக் கொண்டு இறங்குங்கோ என்று அவர்கள் கட்டளையிட்டனர். சிலர் காற்சட்டை, ஜக்கற்றுகளைக் கழற்றிப் போட்டார்கள். கைகளைப் பிடித்துக் கொண்டு இறங்கினோம். முதலில் இடுப்புவரை இருந்த தண்ணீர் பின் கழுத்துக்கும் மேலாக வந்துவிட்டது. தண்ணீரின் பாய்ச்சலும் வேகமாக இருந்தது. அத்துடன் தண்ணீர் கால்களை இழுக்கவும் தொடங்கிவிட்டது. எல்லோரும் பதட்டத்தில் கைகளை விட்டுவிட்டுக் குளறத் தொடங்கினார்கள். இரண்டு தமிழ்ப் பெண்களும் ''ஐயோ அம்மா காப்பாத்துங்கோ'' என்று கத்தினார்கள். நான் நீந்த முற்பட்டேன். இரண்டு மூன்று பாகிஸ்தான்காரர்கள் நீந்தத் தெரியாமல் தங்களைக் காப்பாற்றச் சொல்லி தங்களுடைய பாஷையில் கத்திக் கொண்டு என்னைப் பிடித்த வண்ணம் தத்தளித்தார்கள். நான் தண்ணீருக்குள் அமுங்கி எழுந்து ஒரு மாதிரி அவர்களிடமிருந்து விடு

பட்டு நீந்திக் கரை
தங்களைக் கேட்
லைப் பொலிச
அடித்துப் பார்த்து
வைத்தார்கள். க
விழுந் படுத்தி
வாகக் கண்ணை
தேன். கறுப்புத்
ருக்குள் தாளுறது
தூரத்தே தண்ணீ
செல்லப்பட்டுக்
போலந்து எல்ல
பார்த்துக் கொண்
அவர்களைக் கா
எந்த முயற்சியும்

மேறகூறிய தகவ
கொண்ட நாம்
அகதிகளுக்கு உ
நிறுவனம் ஒன்று
தலை ஆரம்பித்
ஜேர்மன் எல்லை
காரிகள், குற்றத்
ஸார், போலந்திலு
கான ஐக்கிய
(UNHCR) ஆகியவ
கொண்டு விசாரி
ரும் இச்சம்பவம்
தகவல்கள் தர
அல்லது தெரியா
னர். இறுதியில் ெ
தியளவில் போ
கிராமத்தில் ெ
செற்றா லுபுஸ்கா
ska) என்கின்ற
வெளிவந்த சிறு
வியாக இருந்தது
நைச நதியில் கடற்
ளில் 4 ஆசியர்கள்
டவர்களின் உடல்
கப்பட்டதாகவும்,
போலந்திலிருந்து

## ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருவோரின் நிலைமை

ஜேர்மன் ஜனநாயக சமஷ்டிக் குடியரசின் அரசியல் யாப்புச் சட்டத்தில் கூறப்படுவதாவது ஒருவர் அரசினாலோ, அல்லது அந்நாட்டின் நிர்வாகங்களினாலோ அரசியல், இன, மொழி, மத, நிற ரீதியாக ஒடுக்கப்பட்டால் அவருக்கு ஜேர்மன் அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். இச்சட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோர உரிமையுடையவர்களென நாம் கருதுவதால் மேலதிக காரணங்களை இங்கு ஆய்வு செய்யாமல் ஓர் அரசியல் அகதி எதிர் நோக்கின்ற பிரச்சினைகளை மட்டுமே எடுத்துக்கூற விரும்புகின்றோம்.

ஜேர்மனிக்கு அரசியல் தஞ்சம் கோர வருபவர்கள் தமது தாய்நாட்டிலிருந்து புறப்பட்டு ஜேர்மனியை வந்தடையமுன்னர் மூன்றாவது நாடொன்றில் 24 மணித்தியாலங்களுக்கு மேல் கழித்திருந்தது உறுதி செய்யப்பட்டால் அவர்கள் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோர அனுமதியற்றவர்கள் எனக்கூறி அம்மூன்றாம் நாட்டிற்கு திருப்பியனுப்பப்படுவர். போர் நடைபெறாத, ஜனநாயக நாடுகள் யாவும் இம்மூன்றாம் நாட்டின் வரைவிலக்கணத்தில் அடங்கும்.

ஓர் அகதி ஜேர்மன் எல்லையை வந்து சேரும் போது எல்லைப்பாதுகாப்பு அதிகாரிகளிடம் தாம் அரசியல் தஞ்சம் கோரவிரும்புவதாகத் தெரிவித்தும் அவர்களினால் நேர்முக விசாரணைக்கு உட்படுத்துப்பட்டு இவ்விசாரணையில் அதிகாரிகள் திருப்தியடையாத பட்சத்தில் அந்த அகதியின் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு உடனடியாகத் திருப்பியனுப்பப்படுவார். அரசியல் தஞ்சம் ஏற்கப்படுவோர் ஜேர்மனிக்குள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படுவர். அங்கே இவரது புகைப்படம், கைவிரல் அடையாளங்கள், ஆவணங்கள் என்பன பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட சில தினங்களில் வேறு இடத்திலுள்ள அதிகமுகாமிற்கு மாற்றப்படுவார்.

இவ்விடத்திலேயே இவ்வகதி தனது வாழ்நாளை கழிக்க முடியும். அகதிகள் முகாமில் வாழ்க்கை நிலை மிக மோசமாக உள்ளது. உணவுகள் ஐரோப்பிய முறையில் தயாரிக்கப்பட்டு மூன்று வேளைகளிலும் வழங்கப்படுவதுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் உணவு எடுக்கத் தவறுவோர் உணவின்றி தண்டிக்கப்படுவர். இம்மூன்று வேளை உணவுடன் கிட்டத்தட்ட 50 DM பணமே இவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்றது. அத்துடன் முகாமில் சிறிய அறைக்குள் பலர் வசிக்கத் திணிக்கப்படுவதுடன் பல நாட்டவருடனும் வாழ வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. ஜேர்மன் மொழியை ஏற்கனவே தெரிந்திராத இவர்களுக்கு இந்நாட்டு அதிகாரிகளுடன் அல்லது அவசர தேவைகளான வைத்தியசாலை, பாடசாலை போன்ற இடங்களில் பேசிக் கொள்வதற்குக் கூட மொழி பெயர்ப்பாளர்கள் மிக அரிதாகவே ஒழுங்கு செய்யப்படுகின்றனர். ஜேர்மன் மொழி படிப்பதற்குக் கூட இவர்களுக்கு வசதியளிக்கப்படுவதில்லை. ஐந்து வருடங்கள் வரை வேலை செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட காலத்திற்கு, இவர்கள் தங்கியிருக்கும் நகர எல்லையைக் கடந்து செல்வதற்கு பொலிஸாரிடம் அனுமதி பெற வேண்டும். இவை எல்லாவற்றையும் விட ஜேர்மனி வருகின்ற புதிய அகதிகள் கிழக்கு ஜேர்மனியின் ஒதுக்குப்புறங்களிலுள்ள அகதி முகாம்களுக்கே அனுப்பப்படுகின்றனர்.

நிறவெறி உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இப்பகுதிகளில் புதிய நாசிகளால் தாக்கப்படுவதற்கு இலகுவாகவே இவ் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில அகதி முகாம்களில் உத்தியோகப்பற்றற்ற சட்டம் அமுலிலிருப்பது போன்ற சூழ்நிலை உள்ளது. இப்படியான நிலைமைகளே புதிதாக வருகின்ற அகதிகளுக்கு வருடக்கணக்காக நீடிக்கிறது. எனவே ஐரோப்பாவை நோக்கி வருகின்ற அகதிகள் அந்நாட்டில் உள்ள நிலைமைகள் பற்றி தாம் அறிந்திருப்பதோடு இப்படியான சூழ்நிலையில் வாழ்க்கையை நடத்திக் கொள்ள தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையும் அவசியமாகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ...க்கரை போனோரே!

## ...ன் ...ந்த எட்டு தமிழர்கள் மரணம்



**ஜேர்மனியிலிருந்து எமது விசேட நிருபர்**

சென்றடைய முற்பட்டபோதே இச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் எனவும், கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் ஒன்று பெண் என்றும் அச் செய்தியில் எழுதப்பட்டிருந்தது. கசெட்ற லுபுஸ்கா (cassetta lubuska) பத்திரிகைக் காரியாலத்தினூடாக இச் செய்தியை எழுதிய பத்திரிகையாளருடன் தொடர்பு கொண்ட பொழுது அவர் சம்பவம் பற்றி மேலதிக செய்தியைப் பெறுவதற்காக எம்மை போலந்து குற்றத்தடுப்புப்பிரிவின் உயர் அதிகாரிகளுடன் தொடர்புபடுத்தினார். செப். மாதம் 1ம் திகதியிலிருந்து 5ம் திகதி வரையில் ஆறுபேருடைய சடலங்களை ஆற்றிலிருந்து மீட்டெடுத்ததாகவும், அதில் இரு பெண்களும் அடங்குவர் எனவும், சடலங்கள் ஆறு ஏழு நாட்களுக்கு மேல் தண்ணீருக்குள் இருந்ததாலும் சடலங்களை அடையாளங் காண்பதற்கான மேலதிக தகவல்கள் தமக்குக் கிடைக்காததாலும், சடலங்களைப் புகைப்படங்கள் எடுத்த பின்பு அவர்களுடைய ஆவணங்களையும், அணிந்திருந்த உடைகளையும் பாதுகாப்பாக வைத்துக்



பவா?.

கொண்டு உடல்களை அடக்கம் செய்து விட்டதாகவும் அப்பிரிவின் பொறுப்பதிகாரியான கென்றிக்குறோமிக் (Henryg Gromiek) தெரிவித்தார். இவர் மேலும் தெரிவிக்கையில் வழமையாக தாம் ஒன்று அல்லது இரண்டு சடலங்களைத்தான் கண்டெடுப்பதாகவும், ஆறு சடலங்களை குறுகிய கால இடைவெளியில் கண்டெடுத்து இதுவே முதற்தடவையெனவும் ஆச்சரியத்துடன் கூறினார். போலந்து அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்ட புகைப்படங்கள், ஆவணங்களின் உதவியுடன் இதுவரையில் .4 பேரே உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மிகுதி 4 பேரும் இறந்திருக்கலாம் என்றே ஊகிக்கப்படுகின்றது.

அடையாளம் காணப்பட்டவர்கள்

1. கந்தசாமி சுதர்சன், 15.09.76 புளியங்கூடல்.
2. சுபத்திரா செல்லையா 01.10.66 அளவெட்டி வடக்கு
3. இராசையா அருணகிரி 15.10.65 வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணி.
4. மோசஸ் அன்ரோனி அருமைராஜன் 17.04.64 டேவிட்றோட், யாழ்ப்பாணம்

அடையாளம் காணப்படாதவர்கள்

1. கணபதிப்பிள்ளை லம்போதரன்(நாதன்) 16.12.64 மீசாலை தெற்கு மீசாலை
2. பத்மநாதன் தேவகுமார்(யூட்) தெல்லிப்பழை
3. ஜெயரட்ணம் அலோசியஸ் ஜெயசிங்கம் (அலோசியஸ்) 10.03.73, சங்கானை
4. சத்தியரதி (வவா)?

**14.09.94 அன்று போலந்தில் உள்ள "லுப்ஸ்கோ" (LUBSKO) கிராமத்தில் பணிபுரியும் குற்றத்தடுப்புப் பிரிவின் கமிசனரும், ஆறு தமிழர்களின் மரணம் சம்பந்தமாக ஆராயந்து வரும் குழுவின் தலைவருமான திரு.டொடிக்கியை (DODICKI) சந்தித்து சரிநிகருக்காக எடுத்த பேட்டி:**



கந்தசாமி சுதர்சன்

## "இந்த வருடத்தில் இரண்டாவது சம்பவம் இது!"

**நீங்கள் எங்கே, எப்போது இறந்த உடல்களைக் கண்டெடுத்தீர்கள்?**

இறந்தவர்களின் உடல்கள் சசீக்கி (ZASIEKI) என்னும் இடத்திலுள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வடிகால்களில் (அங்கு வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களால்) வந்து ஒதுங்கிய போது கண்டுபிடிக்கப்பட்டன. புரட்டாதி மாதம் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை இரு பெண்களின் சடலம் உட்பட ஆறு சடலங்களைக் கண்டெடுத்துள்ளோம்.

**இப்படியான சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதுண்டா?**

இந்த வருடத்தில் நிகழ்ந்த இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

**இச்சடலங்களை அடையாளங் காண்பதில் நீங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் எவை?**

இறந்தவர்களில் அனேகமானோர் எந்தவிதமான ஆவணங்களும் வைத்திருக்கவில்லை. இதனால் இவர்களை அடையாளம் காணுதல் என்பது சுலபமானதல்ல. தாம் ஜேர்மன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டால் அடையாளம் காணப்பட்டுவிடுவோம் என்பதாலும் இவர்கள் எந்த ஆவணங்களையும் எடுத்து வருவதில்லை.

**சம்பவத்தன்று என்ன நடந்திருக்கலாமென நம்புகின்றீர்கள்?**

அன்று இரவு ஆறுபேர் ஆற்றைக் கடக்க முற்பட்டுள்ளனர். இரவு மழைபெய்திருந்ததால் தண்ணீரின் ஆழம் அதிகமாக இருந்ததுடன் வேகமும் அதிகமாக இருந்துள்ளது. இவர்கள் நீந்த முற்பட்ட பொழுது அள்ளிக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்.

**இச் சம்பவத்திற்கு சாட்சிகள் உண்டா?**

இல்லை, எப்போது எங்கே நடந்ததென்பது எதுவும் எங்களுக்குத் தெரியாது.

**இச்சம்பவத்தில் தப்பியோரின் கூற்றுப்படி போலந்து எல்லைப்புற அதிகாரிகள் பார்த்துக் கொண்டிருந்ததாக கூறுகின்றனரே?**

இல்லை. இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**நீங்கள் போலந்து அல்லது ஜேர்மன் எல்லைப்புற அதிகாரிகளை இதுபற்றி கேட்டீர்களா?**

சசீக்கி (ZASICKI) எல்லைப்புற அதிகாரிகள் சம்பவதினத்தன்று தங்களது பகுதியில் எதுவும் நடைபெறவில்லை எனக் கூறியுள்ளனர். ஜேர்மன் எல்லைப்புற அதிகாரிகள் எமக்கு பெயர், விபரங்கள் அடங்கிய விபரக் கோவை ஒன்றைக் கொடுத்துள்ளனர். ஆனால் அவர்களுக்கும் இந்தக் குழுவினருக்கும் தொடர்பு உண்டா என ஆராய்ந்து வருகிறோம்.

**ஓகஸ்ட் மாத இறுதிப்பகுதியில் எல்லையைக் கடக்க முற்பட்ட போது கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் என்பவற்றை ஜேர்மன் எல்லைப்புற அதிகாரிகள் உங்களுக்குத் தந்துள்ளனர் என்பதா அதன் அர்த்தம்?**

ஆம், இவர்களில் சிலரை மீண்டும் எல்லை கடக்கும் போது போலந்து எல்லைப்புறப்பாதுகாப்பு அதிகாரிகளும் கைது செய்துள்ளனர்.

**இம்மரணங்கள் தொடர்பாக பொலிஸார் ஏதும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனரா?**

முதலில் மரணத்திற்கான காரணம் ஆராயப்பட்டது. தண்ணீரில் மூழ்கியே மரணமானார்கள் என உறுதியானதும் பின்னர் ஆட்களை அடையாளம் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அடையாளம் காணப்பட்டால், அவர்களுடைய நாட்டு தூதுவராலயங்களுக்கு இதுபற்றி அறிவிக்கப்படும்.

**மரணமானவர்களின் உடல்கள் எங்கே?**

அவர்கள் சாறே (ZARY) என்னும் இடத்திலுள்ள அரச மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்

**ஆட்களை அடையாளம் காணமுன் ஏன் அடக்கம் செய்தீர்கள்?**

நீண்ட நாட்கள் பிரேதங்களைப் பாதுகாத்து வைக்கும் தொழில் நுட்பசாதனங்கள் எம்மிடம் இல்லை. அத்துடன் உடல்கள் 7 நாட்களுக்கு மேல் தண்ணீருக்குள் இருந்ததால் அவற்றை அடையாளம் காண்பது என்பது முடியாத காரியம். அப்படியிருந்தும் இதர அடையாளங்கள், அவர்கள் அணிந்திருந்த உடை போன்ற அனைத்து தடயங்களையும் பாதுகாத்துள்ளோம்.

### தமிழ் முகவர்களும், மனிதாபிமானமும்

காலங்காலமாகத் தமிழ் பேசும் மக்கள் சிங்கள பேரினவாத அரசுகளினால் அரசியல், பொருளாதார இராணுவ நெருக்கடிகளுக்கு உள்ளடக்கப்பட்டு வந்தமையாலும், தமிழ் விடுதலை இயக்கங்களின் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளாலும் விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் ஒருபகுதியினர் தமது பங்களிப்பைச் செலுத்தாது விட்டமையாலும், ஏராளமான தமிழ் பேசும் மக்கள் இலங்கையை விட்டு வெளியேறி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வந்து தஞ்சமடைந்தனர்.

ஜனநாயகத்தினதும், மனிதாபிமானத்தினதும் காவலர்களென்று தம்மைக் கூறிக்கொள்ளும் மே.ஐரோப்பியநாடுகள் தமது , சட்டக் கோர்வைகளில் அரசியல் தஞ்சம் அளிக்கும் சட்டங்களை உள்ளடக்கிய போதிலும் அகதிகள் இந்நாடுகளை வந்தடைய முடியாமல் தமது எல்லைகளை மூடிக் கொண்டிருப்பதுடன், காலத்துக்காலம் புதிய சட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வருகின்றன.

இச்சூழலில் மே.ஐரோப்பிய நாடுகளை நோக்கிப் புறப்படும் தமிழர்களுக்கு முகவர்களின் தேவையென்பது மிக அவசியமாகிறது. இதனை முகவர்கள் தமக்குச் சாதகமாகப் பாவித்து வருகின்றனர். சொத்துக்களை, உடமைகளை விற்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் இங்கு வந்து சேரும் தமிழர்கள் முகவர்களைப் பற்றிக் கூறும் தகவல்கள் அதிர்ச்சி தருபவையாக இருக்கின்றன. பெரும் தொகையான பணத்தை தமிழ் முகவர்களிடம் (பறி) கொடுத்துவிட்டு இலங்கையிலிருந்து வெளியேறுபவர்கள் நீண்டநாட்கள் கிழக்கு ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளில் தமது வாழ்க்கையை சிறு அறைகளுக்குள்ளேயே கழிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஆபிரிக்க நாடுகளில் உணவு, காலநிலை போன்ற சூழ்நிலைகளால் அங்கு நீண்ட காலம் தங்கியிருந்த தமிழர்கள் மரணமடைந்த சம்பவங்களும் உண்டு. இந்த அகதிகளிடம் இருந்து முன்னரேயே அனைத்து ஆவணங்களை

→ 15

www.tamilarangam.net



# மலையக சமுக அரசியல் கலாச்சார அமைப்புகள்-11

1970ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இடது சாரிக் கூட்டு முன்னணியை பகிரங்கமாக இளைஞர் முன்னணி ஆதரித்தது. பிரச்சாரத்தில் ஈடுபட்டது. மலையகத்தின் பிரதான நகரங்களில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்களில், முன்னணியின் பிரதான தலைவரான இரா.சிவலிங்கம் பிரதான பேச்சாளராகப் பங்கெடுத்தார். இச் சந்தர்ப்பத்தில் மலையக இளைஞர் முன்னணியைச் சேர்ந்த பல இளைஞர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நுவரெலியாவின் சந்தித்து கலந்துரையாடி மலையக மக்கள் பிரச்சினைகளை எடுத்துரைத்தனர். இத்தேர்தலில் வெற்றியீட்டிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில், இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைத்தது.

ணர்ச்சி பெறுவார்கள் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்த முன்னணி, கல்விப்பணியை ஒரு சமூகப்பணியாகக் கருதி அதற்கு முன்னுரிமை வழங்கியது.

மலையகத்திற்கான இச்சமூகப்பணியை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த முதல் அமைப்பு இம் முன்னணியேயாகும். இதன் பயனாக 1971ம் ஆண்டில் 11 பட்டதாரி இளைஞர்களுக்கு ஒரே நேரத்தில் ஆசிரியர் பதவிகளும், அதனை அடுத்து 64 பேருக்கு ஒரே முறையில் த்ராதர மற்ற ஆசிரியர் பதவிகளும் கொடுக்க வைத்து பெரிய சாதனையை நிலைநாட்டியது. இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 75 பேருக்கு ஒரே முறையில் ஆசிரியர் பதவி கொடுத்து கல்வித் துறையில் ஒரு மாற்றத்தை ஏற்ப

எதிர்க்கட்சியாக 1970ம் ஆண்டில் மிகவும் பலவீனமான நிலையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி இப் பெரதுத் தேர்தலில் பலமான எதிர்ச் சக்தி இல்லாத நிலையில் பெரும் நம்பிக்கையுடன் தேர்தலில் போட்டியிட்டது. இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்துவத்தைப் பெற்ற மலையக சமூகத்திற்கான பிரதிநிதித்துவம் 1972ம் ஆண்டு அரசியல் திட்டத்தினால் இல்லாமல் ஆக்கப்பட்டது. ஆகையினால் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றே பாராளுமன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. நுவரெலியாத் தொகுதியில் எஸ். தொண்டமானும், கொழும்புத் தொகுதியில் எஸ்.செல்லச்சாமியும் இ.தொ.காவின் சார்பிலும், ஜனாப் ஏ.அஸீஸ் ஜனநாயகத் தொழிலா

## டெவன் தோட்டக் காணிகளை சுவீகரித்து திட்டமிட்ட குடியேற்றத்தை ஆரம்பித்தது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

புதிய அரசாங்கம் பதவி ஏற்றதும் மக்கள் பல எதிர்பார்ப்புகளுடன், மலையக இளைஞர் முன்னணியின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினர். அரசின் ஆதரவு இந்த இயக்கத்திற்கு இருந்த போதிலும், சமூக நலன்களுக்குத் தேவையான பெரிய சாதனைகளைச் சாதிக்க அதனால் முடியவில்லை. இந்த அமைப்பினை ஓர் இளைஞர் அமைப்பாக அரசாங்கம் கருதியதே தவிர, ஒரு மக்கள் சக்தியாக ஏற்றுக் கொள்ளவில்லை.

கொழும்பில் தொழில்புரியும் இளைஞர்கள் மலையக மக்களின் முன்னேற்றத்திற்கு தங்களின் பங்களிப்பைச் செய்ய இவ் அமைப்பின் ஊடாக முன்வந்தனர். எனவே கொழும்பில் முன்னணிக் கிளை ஒன்றை அமைத்தனர். திருவாளர்கள் வி.விக்கிரமசிங்க, எஸ்.அம்பையா போன்றோர் முன்னின்று கொழும்புக்கிளையை மிகவும் வெற்றிகரமாக நடத்திச் சென்றனர். இவர்களின் சுறுசுறுப்பான செயல்பாட்டினால் கொழும்பையே தலைமைச் செயலகமாகக் கொண்டு முன்னணி இயங்கியது.

முன்னணி அரசுடன் தொடர்பு கொண்டு பலகாரியங்களைச் சாதிக்க முயன்றது, அன்றைய அரசின் நியமன எம்.பியாக இருந்த ஜனாப் ஏ.அஸீஸ், முன்னணியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அவரின் மூலம் சிலசாதனைகளைச் சாதிக்க முடிந்தது. கல்வி அமைச்சராகப் பதவி வகித்த அல்ஹாஜ் பதியுதீன் மொஹமட் அவர்களுக்கு மலையக மக்கள் சார்பாக வரவேற்புக் கொடுத்து மலையகத்தின் கல்விநிலையையும் அதன் சீர்கேட்டினையும் எடுத்து விளக்கி, மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. கல்வியினால் தான் மலையக மக்கள் விழிப்புடுத்த முன்னணி முன்வந்தது. இதன் பின்தான் அரசாங்கம் மலையகக் கல்வியில் தன் கடைக் கண் பார்வையைத் திருப்பியது. இந் நியமனங்கள் தான், மலையகக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டன. இப்புதிய நியமனத்தைப் பெற்றவர்கள் தான், பிற்காலத்தில் அதிபர்களாக, கல்வி அதிகாரிகளாக பதவி உயர்வு பெற்று மலையகக் கல்வியை உயர்த்த முயற்சித்தனர்.

எம்.சுப்பிரமணியத்தை ஆசிரியராகக் கொண்டு 'முன்னணி' என்ற பத்திரிகை அமைப்பின் சார்பாக வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை மலையகப் பிரச்சினைகள், அரசியற் கருத்துக்கள் பலதையும் தாங்கி சிறப்பாக வெளிவந்தது. ''பிறைசூடி'' என்ற பெயரில் இரா.சிவலிங்கம் அவர்கள்தான் அரசியல் கருத்துக்களை எழுதி வந்தார். இவரின் கட்டுரைகள் பலரையும் சிந்திக்கத் தூண்டியது.

### வி.ரி.தர்மலிங்கம்

இந்த அமைப்பினை மக்கள் சக்தியாக மாற்ற இதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன் முதல் கட்டமாக ''தொழிற்சங்கம்'' ஒன்றினை அமைக்க வேண்டும் என்பதை 1975ம் ஆண்டு எஸ்.கிருஷ்ணனும் வி.ரி. தர்மலிங்கமும் வலியுறுத்தினர். அது செயற்குழு மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டும், நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது.

இடதுசாரிக் கூட்டணியில் பிளவு ஏற்பட்டது. எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசாங்கத்திலிருந்து விலகியதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனியாக ஆட்சி செய்தது. 1977ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இக்கட்சிகள் தனித்தே போட்டியிட்டன.

ளர் காங்கிரஸ் சார்பிலும் போட்டியிட்டனர். ஸ்ரீ.ல.சு.கட்சியின் சார்பாக அனுரபண்டார நாயக்கா நுவரெலியாத் தொகுதியில் போட்டியிட்டார். பல அங்கத்தவர் தொகுதியான நுவரெலியா மலையக இளைஞர் முன்னணி தலைவர் இரா.சிவலிங்கம் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட முன் வந்தார்.

இரா.சிவலிங்கம் அரசாங்க உத்தியோகத்தை இராஜினிமா செய்துவிட்டு, தேர்தல் குழுவை அமைத்து, தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆரம்ப வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த பொழுது மலையகமே எதிர்பார்க்காத ஒரு எழுச்சிப் போராட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோட்டங்களில் காணிகளைச் சுவீகரித்து பெரும்பான்மை இனத்திற்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கும் கைங்கரியத்தை ஆரம்பித்தது. இத்தேர்தலில் திரு அனுரா பண்டாரநாயக்காவின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கு முகமாக அரசாங்கம் தலவாக்கொல்லைப் பிரதேசத்திலுள்ள 'டெவன்' தோட்டத்தில் காணிகளைச் சுவீகரித்து திட்டமிட்ட குடியேற்றத்தைச் செய்ய ஆரம்பித்தது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பணியில் அரசாங்க உத்தயோகத்தர்கள் ஈடுபட்ட பொழுதே அந்த எதிர்பாராத எழுச்சிப் போராட்டம் வெடித்தது. அப்பிரதேச மக்கள் ஒன்று திரண்டனர். காணிகளை அளக்கவிடாமல் தடுத்துப் போராட்டம் செய்தனர். இப்போராட்டத்தை முறியடித்து, திட்டத்தை நிறைவேற்றும் அரசின் ஆணையை மேற்கொண்டு காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்ற நிலை உருவாகின்ற அளவிற்கு இப்போராட்டம் எழுந்து விட்டது.

## மலையகத்தின் இரு கவிதைகள்

### கனவுகளும் பூனைகளும்

ஒரு நாளிரவில்
பூனைகளின் கனவுகளிலெல்லாம்
துவக்குகள் வந்து வெடித்தன.
மிரண்டெழுந்த பூனைகள்
தெருவுக்கு வந்து
புரண்டழுதன.

சில பூனைகள்
கிணறுகளைத்தேடி
ஓடிக் குதித்தன.
சில பூனைகள்
மரத்தில்
மண்டையை மோதிக்கொண்டன.

சில பூனைகள்
தங்கள் குட்டிகளை
தாங்களே தின்று
மென்று விழுங்கின.

இன்னும் சில பூனைகள்
தங்களுடலை
தாங்களே பிராண்டிக் கொண்டன.

அன்றிரவு
தூங்காமலிருந்த பூனைகளுக்கு
கனவு வரவுமில்லை,
துவக்கு வெடிக்கவுமில்லை.

அவை
சிதறுண்டோடும் பூனைகளைக் கண்டு
முன்னங்கால்களால்
வாயைப் பொத்தியபடி
விழுந்து விழுந்து சிரித்தன.

பால்கார சின்னாச்சிக் கிழவியின்
கடுவன் பூனை
கோடிப் பரணிலிருந்து குதித்து
தெருவுக்கு வந்தது.
மீசையை முறுக்கியது.
உரத்த குரலில் கனைத்தது.

எல்லாம் பூனைகளும்
அப்படி அப்படியே
அடங்கிப்போயின.

கடுவன்
மீண்டும் பரணேறியது
வெண்ணையும், நெய்யுமாய்
உருட்டி
விழுங்கிய கொழுப்புடன்

### அவளது மூச்சும், எனது பிராணனும்

சிக்குண்டது பாடல்
சிதறலுக்குள்.

வெறி முறிந்து,
நிதானம் மீண்டு
குரல்தூக்கியழுதது பிராணன்.


உருகி,
அருவியாய்
சலசலத்தோடிய பனியில்
உயிர்பெற்று ஊர்ந்தது
மீண்டுமவள் மூச்சு


அருவியின் கரை நீளம்
நடந்து துணையாயென் பிராணன்.
துணையாய்
துணையாய் மட்டும்.
ஒட்டைத்தடிகளின் நாசிக்குழிகளில்
புகுந்து புறப்பட்டு
காற்றில்
விதைத்தது பாடலை
அவளது மூச்சு

பிராணன்.
எனது பிராணன்.
மயங்கி,
தள்ளாடித் தள்ளாடி
நிதானம் தொலைத்ததோர்
வெறியனைப்போல்
தொடர்ந்து பாடலின் பின்னால்
ஒரு தடவையேனும்
புணர்ந்து மீள

நடந்த பாடல் - பனி
படர்ந்த மலைமேல்
படுத்தது மல்லாந்து
களையாறி
நடக்க மீண்டும்

பிராணன்
கவிந்ததன் மேல்.
சிதறி,
சில்லவல்லமாகி,
உருகியுதிர்ந்தது பனிப்பாறை
பள்ளத்தை மேவி.





www.tamilarangam.net



# தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும்

## கருத்தரங்கு குறித்த சில அபிப்பிராயக் குறிப்புகள்

**தேவ அபிரா**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 15.10.94 தொடக்கம் 17.10.94 வரை விஜயராம மாவத்தையில் உள்ள பொறியியலாளர் நிறுவனத்தில் நடாத்திய தமிழ் அரங்கியல் தொடர்பான கருத்தரங்கின் மீதான குறிப்புரையே இது. இக்கருத்தரங்கின் தொனிப்பொருள் **தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும்** என்பதாகும். இக்கருத்தரங்கின் சிறப்பம்சம் இந்திய தமிழ் நாடக அரங்கச் செயலாளிகள் ஐவர் கலந்த கொண்டமை ஆகும். இவர்களுடன் இலங்கையின் நாடக அரங்கச் செயலாளிகளும் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் அரங்கவியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மூன்று நாட்களும் காலை, மாலை என மொத்தம் ஆறு அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தொடக்க நாளன்றின் காலை அமர்வும் இறுதி நாளின் மாலை அமர்வும் கருத்தரங்கொன்றின் வழமையான பல்லவிகளுடன் போக, இடையில் அரங்கவியலின் பாடம், நடிப்பு, காட்டிகள் (Visuals),இசை, நெறியாள்கை என அமர்வுகளுக்கான தலைப்புக்கள் பிரிக்கப்பட்டு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

நாடகத்தில் பாடம்(Text) தொடர்பாக **'வெளி'நாடக சஞ்சிகையின் ஆசிரியரான திரு.ரங்கராஜன் அவர்களும்**, நடிப்பு தொடர்பாக **கலாநிதி சி.மௌனகுரு** அவர்களும், காட்டிகள் அல்லது காண்பியங்கள் தொடர்பாக **பாண்டிச்சேரி பல்கலைக்கழக நாடக விரிவுரையாளர் திரு.ராஜு** அவர்களும், இசை தொடர்பாக **கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை** அவர்களும், நெறியாள்கை தொடர்பாக **பத்திரிகையாளரும் நாடக விமர்சகருமான திருமதி.ரா.பிரசன்னா** அவர்களும் தத்தமது கட்டுரைகளை வாசித்தனர். நடிப்புத்தொடர்பான அமர்வின் போது **இந்தியத் தமிழ், வீதி நாடக இயக்குனரான கூத்துப்பட்டறை ந.முத்துசாமி** அவர்களும் அனேகமான அமர்வுகளின் போது **இந்திய தமிழ் நாடக அரங்கப்பழமான தஞ்சாவூர் பல்கலைக்கழக நாடகத்துறைத் தலைவர் பேராசிரியர் இராமானுஜம் அவர்களும், பேராசிரியர் கா.சிவத்தம்பி** அவர்களும் கருத்துரைகளை வழங்கினர்.

இங்கு படிக்கப்பட்ட கட்டுரைகள் பற்றியும் அவற்றின் மீது இடம் பெற்ற கருத்துரைகள் பற்றியும் பின்னர் தொடர்ந்த விவாதங்கள் பற்றியும் விமர்சித்து விரித்துரைத்தல் இச்சிறுபகிர்விற் சாத்தியம் இல்லை. ஆயினும் சாரமாக, இக்கருத்தரங்கின் தொனிப்பொருளான, மரபும் மாற்றங்களும் என்பது அனேகமான அமர்வுகளில் ஆழமாக வெளிப்படவில்லை என்பதைக் குறிப்பிடலாம்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றியோர் பின்வரும் வகையினராக இருந்தனர் என கலாநிதி மௌனகுரு குறிப்பிட்டார்.

1. அரங்கம் பற்றிய அறிவும் தேடலும் உடையோர்.
2. அரங்கம் பற்றிய வரன்முறையான அறிவற்ற ஆனால் தொழில் முறை அரங்கக் கலைஞர்கள்.
3. அரங்கத்துடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத கலைஞர்களும், ஏனையோரும்

இதன் காரணமாக கருத்தரங்கின் விடயத்தினை (Subject)விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் தோன்றின. பேசுவோர் கைக்கொண்ட மொழிநடையும் விடயத்தின் கனதியும் சற்று அதிகமாகவிருந்த பொழுதெலாம் முணுமுணுத்தல், தூங்கி வழிதல் என்பன அவதானிக்கப்பட்டன. ஆனால் சுவாரசியமானது, தூங்கிவழிந்தவர்களில் பலர் பார்வையாளர் நேரத்தில் 'பேச' விழுந்தடித்து ஓடியதுதான். நெறியாள்கை தொடர்பாக திருமதி பிரசன்னா அவர்கள் வாசித்த கட்டுரை புரியவில்லை என்பது வெளிப்பட்ட விமர்சனமாக அமைந்தது. எந்தவொன்றையும் கூர்மையாக அவதானிக்கும் விமர்சன ஆளுமை திருமதி பிரசன்னா அவர்களுடையது. இதன் வழி அவர்களின் கட்டுரை, அதன் கட்டமைப்பு, மொழிநடை என்பவற்றில் இறுக்கமானதாகவும், நம்பகத்தன்மைமிக்கதாகவும் இருந்தது.

ஆனால் அவர் வாழைப்பழத்தை உரித்து மென்று தருவது போல் தரவில்லை.

உண்மையிலும் நாங்கள் எந்தவொன்றையும் 'புரியவில்லை' என கூச்சலிடுவதை விடவும் புரிந்து கொள்ள முனைவதுதான் ஆரோக்கியமானது.

இவ்விடயம் சம்பந்தமான பதிலில் 'எனது கட்டுரையின் தோல்வி என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது எனினும் அதில் உங்களது தோல்வியும் அடங்கியுள்ளது' எனப் பிரசன்னா குறிப்பிட்டார்.

கருத்தரங்கின் இரண்டாம் நாள் **திரு.சிறீகணேசன் (வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர்)** அவர்கள் **யாழ்திருமறைக்கலாமன்றத்தின்** நாடக அரங்கச் செயற்பாடுகள் குறித்த விமர்சனத்தை முன்வைத்தார். இவரது விமர்சனத் தொனி விமர்சிக்கப்படுபவர்களை எதிராளிகளாக ஆக்கியமை ஓர் குறைபாடு. இது தொடர்பாக பதிலளித்த திரு.காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் சிறீகணேசனின் கருத்துக்களை மிக வன்மையாக மறுதலித்தார். இவரது மறுதலிப்பின் தொனி, தான் **'ஆசிரியர்'** திரு.சிறீகணேசன் தனது **'மாணவர்'**என்றவாறு அமைந்திருந்தது. நமது சமூக அமைப்பு மனிதர்களின் முனைப்புக்கள் திறன்கள் போன்றவற்றை இவ்வாறு தான் அழித்துவிடுகிறது. பெற்றோர் - பிள்ளைகள் உறவு ஆசிரியர் - மாணவர் உறவு அதிகாரி - ஊழியர் உறவு என யாவும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட தளத்தில் நிகழ்வதாக இவர்கள் கருதுவதின் விளைவுதான், இங்கே ஜனநாயகத்தைப் ப்டைப்பாளிகள் தேடிக்கொண்டிருப்பது.

திருமறைக்கலாமன்றத்தின் அரங்கச் செயற்பாடுகள் குறித்த பார்வை இவ்வாறு இருக்கலாம் என நம்புகின்றேன். இவர்களின் அரங்கச் செயற்பாடுகளை, மதம் தொடர்பானவை என்றும், தமிழ் பண்பாட்டின் பழைய கருவூலங்களைப் பேணுதல் தொடர்பானவை என்றும் இரு வகையாகப் பார்க்கலாம். எந்தவொரு கிறிஸ்தவ நிறுவனத்திற்கும் இருக்கக் கூடிய ஸ்தாபனக் கட்டமைப்பும் பொருள் வளமும் காரணமாக தம்து மதச்செயற்பாடுகளை விரித்துக் கொள்ள அரங்கத்தையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வரங்கம் தொழில் முறை நடிகர்களாலான கச்சிதமான தயாரிப்பாக அமைகிறது. பெருங் காட்சிப்பண்பும் கவர்ச்சிகரமான ஒளி ஒலி அமைப்பும் இவ்வரங்கத்தின் பிரிக்கமுடியாத பண்புகளாகும். **(சமய, மத பேணுகை ஓர் ஜனநாயக உரிமையாகும்)** இரண்டாவது பண்பாட்டுப் பேணுகை. இப்பேணுகை உண்மையிலும் ஐம் பெரும் காப்பியங்களின் நாடக இயல்புள்ள காட்சிகளை அரங்கத்தில் அளிக்கை செய்ய முனைவதையே குறியீடு செய்கிறது. ஆயினும் அம்முயற்சி மூன்றாம் தரமான சினிமாத்தனம் மிக்க அரங்கொன்றைத் தந்ததையே அவதானிக்க முடிந்தது. சீவகன் தனது காமக் கிழத்திகளுடன் மேடையில் ஆடிப்பாட.... பார்வையாளர்கள் விசிலடிக்க... பண்பாட்டுப் பேணுகையின் அவலத்தைக் காண்க. இவ்விடத்தில் மகாபாரதத்தை விளங்கிக் கொண்ட **ஜேர்மனியக் கலைஞன் பீற்றர் புறூக்கை** நினைவு கூருவோமாக.

ஆ க மக்கள் தமது பிரச்சனைகளை தாமே உணராதபடி அவர்களின் கவனத்தைப் திருப்புவதிலும் நேரத்தை சுயசிந்தனையற்ற பொழுது போக்காக மாற்றுவதிலும் திருமறைக்கலாமன்றம் உணர்ந்தோ உணராமலோ கவனம் செலுத்தி வருகிறது. பிலிப்பைன்ஸ், நிக்கரகூவா போன்ற இடங்களில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் விரிந்த பார்வையுடன் செயல் புரிவதை இங்கு நினைவு கூருவது தவிர்க்க முடியாதது.

இக்கருத்தரங்கில் அரங்கம் பற்றி நிகழ்ந்த உரையாடல்களில் மேற்கிளம்பாதுவிட்ட அரங்குகள் சிலவற்றை குறிப்பிடுவதும் தேவையாகிறது.

1. விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுப்பிரிவினரால் கையாளப்படும் பிரச்சார அரங்கு.
2. பல்கலைக்கழகம், நாடக அரங்கக் கல்லூரி, புலிகள் இவை மூன்றுடனும் நேரடியாகச் சம்பந்தப்படாத யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நாடக முயற்சிகள்.
3. அரங்காடிகள் எனும் அமைப்பின் மூலமும் மொறட்டுவ பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் மூலமும் மேற்கொள்ளப்படும் அரங்க முயற்சிகள்.
4. மலையக மக்களின் மரபுவழி வந்த நாடகங்கள் தவிர்ந்த, முயற்சிகள்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் அரங்குகள் குறிப்பாக வீதிநாடகங்களும் கூத்து வடிவங்களுக்குள் புகுத்தப்பட்ட அவர்களது அரசியல் கருத்துக்கள் அடங்கிய நாடகங்களும் மிகபடரந்த அளவில் வீதிகள் தோறும் அளிக்கை செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அவர்களது அரசியலால் அவ்வரங்கம் உள்ளடக்க ரீதியாகவோ வடிவ ரீதியாகவோ எவ்வித செழுமையையும் அடையவில்லை. அரங்க வெளியையும், அரங்க மொழியையும் நடிகன் எனும் மூலகத்தையும் அரங்கச் செயலாளிகளின் அரசியல் தெளிவையும் சுயாதீனத்தையும் ஆத்மார்த்தமாக விளங்கிக் கொண்ட, மக்களின் ஆத்மாவையும் உணர்ந்து கொண்ட, படைப்பாளிகளினால்தான் போராட்டத்திற்கான அரங்கு உருவாக்கப்பட முடியும். மக்களை 'வாருங்கள்' என அறை கூவுதல் மட்டும் அரங்கின் பணியாக இருக்க முடியாது.

இரண்டாவது வகையினரில் **திரு. பாலசிங்கம் மற்றும் 'சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்' குழுவினர்கள்** முக்கியமானவர்கள். இவர்களின் அரங்க முயற்சிகளும் தரமான அரங்க முயற்சிகளாக விமர்சகர்களால் கணிக்கப்படவில்லை. இரு காரணங்களினால் அவை அவ்வாறு கணிக்கப்படாது போயிருக்கலாம்.


1. உண்மையிலும் நாடகம் எனும் ஊடகத்தின் பண்புகளை சிறப்பான முறையில் அவை கொண்டிருந்திருக்காமை.
2. அந்நாடகங்கள் குறிப்பாக கூலி விவசாய - விவசாய வர்க்கத்தினிடம் இருந்து முகிழ்த்தமையால் நாடகம் தொடர்பான வரன்முறையான அறிவுடைய விமர்சகர்களின் அழகியல் கோட்பாடுகளுடன் ஒத்துப் போகாமை

மூன்றாவது வகையினரில் **திரு.விஜித்சிங்** போன்றோரின் முயற்சிகள் **(வெய்யிலில் நனைந்திட)** குறிப்பிடக் கூடியவை போலத் தோன்றுகின்றன. இவர்கள் படச்சட்ட மேடையை அதற்கேயுரிய ஒழுங்குவிதிகளுடன் பின்பற்றாமல் பார்வையாளர்களிடையேயும் நாடக வெளியை (Theatre space) உருவாக்குகிறார்கள் உதாரணம்: கொள்கரி. **திரு ரவி** அவர்கள் நாடக அரங்கக் கல்லூரி பல்கலைக் கழகம் என்பவற்றின் தொடர்ச்சியின் வழி படச்சட்ட மேடைக்குள் உள்ளடங்கிய செம்மையான நாடக ஆக்கத்திற்கு முக்கியமளித்துச் செயற்படுகின்றார்.

மலையக மக்களின் நாடக முயற்சிகளும் நாடகம் எனும் கலைவடிவத்தினை செம்மையாக புரிந்து கொண்டவையாக இல்லை என்பது விமர்சகர்களின் கருத்து.

மேற்கூறிய நான்கு வகையான அரங்குகளும் கடுமையான தேடல்களின்பின் நமது நாடக நதியின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க கிளைகளாக மேற்கிளம்பக்கூடும்.

வேறு எந்த அரச அதிகாரிகளை விடவும் பரந்த சிந்தனையும், அறிவுப்புலமும் உடைய திரு.கே.சண்முகலிங்கம் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்) அவர்களின் இம்முயற்சி அரங்கச் செயலாளிகளின் அனுபவ விருத்திக்கும் இந்திய இலங்கை அரங்கச் செயலாளிகளின் கலாசார இடை ஊடாட்டத்திற்கும் நல்லதொரு தளத்தை தந்தது என்பதை மனமார எவரும் ஒப்புக்கொள்ளார்கள் ஆயினும் யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுரை படிப்பதற்கு என வரவழைக்கப்பட்ட **யாழ் பல்கலைக்கழக நாடக விரிவுரையாளராக இருந்த திரு. ஜெயசங்கர்** அவர்களின் கூத்துப் பற்றிய கட்டுரையை றோனியோப் பிரதி செய்தாவது வெளியிட்டிருக்கலாம் என்னும் ஆதங்கத்துடன் இக்குறிப்புரை முடிகிறது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் ஒன்று

(போட்டிக்கென வந்த கதைகளுள் பிரசுரத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது.)



-நட்சத்திரன் செவ்விந்தியன்

முடிந்து போன பழைய சம்பவங்களை நினைவு படுத்துவதாக 'தமிழ் ஒன்று' புத்தகம் ஒன்று அகப்பட்டது. மேலிருந்து எலியோ பூனையோ தட்டி விழுந்திருக்க வேண்டும். புத்தகத்தை எடுக்கக் குனிந்த போது குந்திக் கொண்டிருந்தே பார்க்க பழைய நினைவுகளின் ஏக்கம் அமுக்கிவிட்டது. தாத்தா கட்டின குத்திக்கட்டல், அட்டையை இம்மிகூட நகரவிடாமல் வைத்திருக்கிறது. தூசி படிந்த அட்டையைத் துரத்திக் கொண்டு முகம் விரிந்த பாமாவின் முகமும் வெட்டி ஒட்டினமாதிரி சிவப்பு நீலப் பூக்களும் இலைகளும் காலத்தில் உரஞ்சுப்பட்டுத் தெரிந்தது.

தாத்தா ஈசிச்செயரிலிருந்து படித்துக் கொண்டிருக்கிறார். அண்ணா குனிந்து கொண்டு தாத்தாவை ஏதோ அரிச்சுக் கொண்டிருக்கிறான். ''பொறுமோனை வாறன்' என்று சொல்லிக் கொண்டு சத்தம் போட்டுப் பாட்டுமாதிரி படிக்கிறதைப் போலிருக்கிறது. பின் கதவு திறந்திருக்கிறது. ஹோல் மேசையில் தயாண்ணாவா இருக்கிறார்? வீட்டில் வந்து மேசையில் இருந்ததாக ஞாபகமில்லை. அப்பா ஆத்தா மாமாவா? ஆரோ வேட்டியோடும் சேட்டோடும் நிற்கினம். பருமனிலும் முகத்திலும் அவரைப்பார்க்க அப்பாவாகத் தெரியவில்லை. சுவர்க்கரையில் அம்மம்மா சாய்ந்திருந்து நீத்துப்பெட்டி இழைச்சுக் கொண்டிருக்கிறா. நான் பிறக்கிறத்துக்கு முதலே செத்துப் போன அம்மம்மா- படத்திலும் முகம் தெளிவில்லை. அம்மா தங்கச்சிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கிறா. பக்கத்தில் நிலாக்கா முழங்கால் மடித்துக் கையூண்டி இருக்கிறா. அவவின்ரை மார்பிலே கறுத்தப்பேனையால் முனைகளில் இறுக்கின வட்டங்கள் யாரோ போட்டிருக்கினம். மற்ற மூலையில் நாயைக் குப்புறப்படுத்தி நான் ஏதோ செய்கிறேன். சின்னண்ணவாக நான் மாறிப்போனது பற்றிக் கொஞ்சம் சந்தோஷம். பிறகு நாயின் கப்பாத்துப் பண்ணுகிற இடத்திலும் பேனைக்கிறுக்கல் வன்மமாக இருக்கிறது.

வரப்போகிற பக்கங்களில் பார்த்தால் நிலாக்கா பெரியம்மா வீட்டை இருக்கிறாவா? மேசையிலிருக்கிறவர் ஆத்தாவா? தயாண்ணாவா? நாய் இல்லாத வீட்டில் அலுப்புக்கொரு நாய். பின்னால் அம்மம்மா செத்துப் போனது தவிர பெரியம்மாவின் அம்மம்மா பெரியம்மா வீட்டைதான். இது எங்கட வீடா பெரியம்மா வீடா என்றும் எல்லாம் குழப்பமாக இருக்கிறது.

அப்பா! அப்பா! பக்கங்களில் அப்பா சைக்கிளுடன் இருக்கிறார். கீழே உற்றுப் பார்த்தால் ஒட்டை வந்து ஒட்டினதுகளுக்குச் சாமான்களும், கார் பற்றரிச் கவரில் தண்ணியும் தெரியும். முன்பெல்லாம் அப்பாவின் முகத்துடனேயே பக்கம் கரைந்து விடும். உண்மையாகவே செத்துப்போன அப்பாவைப் போலவே படத்திலும் அப்பா கைப்பம்மால் காற்றடிச்சுக் கொண்டிருக்கிறது பாவமாயிருக்கிறது. மீசை தாடியெல்லாம் வழிந்து மென் சிவப்பானது அப்பாவின் சோகமுகம்.

நீலம் கறுப்புப் பக்கங்களில் நானும் அண்ணாவும் விளையாடப் போனோம். நாங்கள் வளர்க்காத நாய், பின்னால் துரத்திய பெரியம்மா வீட்டுக் கடுவன் நாய் நினைவுக்கு வருகிறது. பாமா வீட்டு முன்றலில் ''பாமா பாமா ஓடி வா'' சொன்னோம் பூமரங்களுக்குள் மண் கிளறிக் கொண்டிருந்த பாமாவின் முதுகும் பிருஷ்டமும் அழகாக இருக்கிறது. நிசார் வீட்டு நிழல் மரத்துக்குப் பின்னால் நிசார் நடந்து வந்தான். அண்ணாவுக்கு பாலா பெயர் வந்தது. அது பாலனுக்கு 'ஆ' போட்டுக் கூப்பிடுகிறதா அல்லது மைத்திரி பாலா, சுமணபாலா இந்தியா தியோ? எல்லோரும் பந்து விளையாடினோம். என்னிடம் வந்த பந்துகளை வொலி போல், புட்போல் எல்லாம் கலந்து விளையாடினேன். பாமாவை இப்போது நினைவில் இருக்கிறது. ஏனெனில் அவள் இப்போதும் இருக்கிறாள். நிசார் பிறத்தியான். கறுப்பு வெள்ளைகளாக நாங்கள் படத்தில் இருந்தோம். மரங்களும் கறுப்பாக இருக்க வானமும் கறுப்பாய் இருக்க மேலும் பக்கங்கள் போயின.

மாமா எனச் சொல்லப்பட்டவர் நஷனல் போட்டிருந்ததனாலும் அப்பாவை விடக் கிழண்டி இருந்ததாலும் நம்பமுடியவில்லை. அவர் எனது கைகளைப் பிடித்துத் தூக்கவும் அண்ணா அறிமுகம் செய்து வைக்கிறான் போலும். மாமா தந்த ஒரு போதும் தொடாத கொக்குப்பட்டத்தைத் தொடமுனைவதாய்.... 'பட்டம் விடுவோம் பட்டம் விடுவோம பாலா ஓடி வா பாடிப் பாடிப் பட்டம் விடுவோம் பாலா ஓடி வா.'

ஒரு கடப்புக்கட்டல் உச்சியிலிருந்து அண்ணா பட்டம் விட்டான். பாமா முழங்கையில் கடப்பைக் கொழுவி சார்ந்திருக்கிறார். நான் இரண்டு கைகளையும் உயர்த்தியிருக்கிறேன். பின்னால் தொய்யலில் கறள் முள்ளுக் கப்பியுடன் இனந்தெரியாத மரங்கள். நிசார் வெய்யிலுக்காக நெற்றியில் கை வைத்திருந்தான். மேலைத் தொங்கலில் பனையுச்சிகளெல்லாம் அநாதையாய் நிற்கின்றன. இருந்தாற் போல் கொக்குப் பட்டம் அறுத்துக் கொண்டு போகிறது. அண்ணாவின் பெரிய கத்தலில் நிசார் தான் ஓடினான். பிறத்தியான். பாவம். மரண ஓட்டம். முள்ளுகள் கிழிக்க முள்ளுக்கம்பிக்குள் விழுந்து போனது நோகுமே.

தூரத்தில் எங்கள் வீடு அரண்மனையைப் போல் இருக்கிறது. அறுத்துக் கொண்டு போன பட்டத்தை நிசார் முழுதாய் மீட்டபாடில்லை. உருக்குலைந்து மீட்ட பட்டத்துக்கு நான் முறிவுகள் கட்டி கட்டி முச்சை போடுகிறேன். வீட்டை போய்த் தேத்தண்ணி குடிச்சு முடிந்ததும் அம்மா அதில் பிடைச்சுக் கொண்டிருந்தா. பிறகு கீச்சு மாச்சுத் தம்பலம் விளையாடினதும் நிசாரின் சோகமான பக்கங்கள் வந்து விட்டன. மோசமாக விளையாடின ஒரு நாள் அன்ரா அழ அழ அடித்து வாசிக்கப்பண்ணினா. பக்கமும் அதுவா, நிசாரின் மிக முரட்டுத்தனமான அணில் துரத்தலும் அதுவாகிறது. பாவம் நிசார் பிறத்தியான். சுடுதண்ணி குடிச்ச நாயைப் போல் முள்ளுக் கட்டைகளெல்லாம் குத்தி நொருங்க பனைமரமெல்லாம் பாய்ந்து மரண ஓட்டம் ''ஓடிவிட்டது பாலா அணில் ஓடிவிட்டது'' ஏமாந்த நிசாரின் களைப்பான முகமும் சாப்பிடும் போதும் தண்ணி அடிக்கும் போதும் அன்றிரவு வந்து வேளைக்கே நித்திரையாகிப் போனேன்.

மஞ்சள் பக்கங்களில் நேரமாகிவிட்டது. கிடுகு வேலிப்பக்கத்தில் பாலா காற்சட்டைப் பொக்கற்றுள் கைவைத்துக் கொண்டும், பாமா கும்பஸ் பெட்டைகளைப் போல இடுப்பில் கைவைத்தும் கதைத்தாள். பிரிவுத் துயருக்கான ஏற்பாடுகளுடன் முடிந்துபோக நான் முன்னரே நாயைச் சூக்காட்டிக் கொண்டு போய்விட்டேன். அதே பக்கங்களில் நானும் அண்ணாவும் இருக்க முகம் கழுவ அம்மா கூப்பிட்டா. முகம் கழுவப் போகும் போது நான் தம்பி குமாராகப் போய்விட்டேன்.

கணிசமானவை துயராய் போகிற இரவுகளில் (அது கூட அப்பா கதைகளால் தான் அப்படியாகிறது) அப்பா வந்தார். அப்பாவின் முகத்தை விட அப்பா சொல்லுகிற இரவுக்கதைகள் சோகம் கூட. ஒருக்கால் இப்படிச் சொல்லித் தான் அப்பா சவரம் செய்யச் செய்ய சோகம் வழிந்து கொண்டிருக்கிறதோ? உணவு கிடைக்காத காடெங்கும், இயலாத நொண்டி நரி உலாத்துகிறது. காடு மேடு கல்லு முள்ளு எல்லாம் நாள் முழுக்க உலாத்தின நரி திராட்சை மரத்தில் (அப்பா அடிக்கடி திராட்சை வாங்கி வருகிறதும்) இறுதியில் தான் அடைகிறது. எட்டு ஒன்பது தடவை தொங்கித் தொங்கியும் கிடைக்காது போக தனது வீரியத்தை மறைப்பதற்கோ என்னவோ 'சீ உந்தப் பழம் புளிக்கும்' என்று பட்டினியில் படுக்கிறது. இல்லாது போனால் ராஜா கதை. ராஜா வேட்டைக்குப் போய் நெடுநேரம் இரை கிடைக்காமல் குளத்தங்கரைத் தோப்பில் வில்லம்போடு ஒளிந்திருக்கிறார். மூன்றாம் ஜாமத்துக்கு முன்னர் தான் சாப்பிட்டு விட்டு குடத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் போக விக்கல் எடுக்கின்றது. சாம்ஜவரோதயனின் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மரண விக்கல் எடுக்கின்றது. இருளில் சாம்ஜவரோதாயன் குடத்தோடு குளத்தங்கரைக்கு விரைந்துபோக புலியோ, மானோ என்று ஆயிற்றா. ஆயிற்று! மன்னரின் அம்பில் சாம்ஜவரோதயன் செத்துப் போனான். குருட்டுப் பெற்றோர் விக்கிச் செத்துப் போகிறார்கள். கொடிய சாபமென்றார் அப்பா. அப்பா எல்லா நாட்களும் இதுகளைத் தான் சொன்னாலும் அலுப்புத்தட்டாமல் சோகரசனை ஒன்று இருந்தது.

ராவைக்கு அப்பாவுக்கு நான் கதைகள் சொல்கிறதும் உண்டு. மஞ்சள் பக்கம் சுவரில் விளக்குத் தொங்க இந்தப் பக்கங்களில் அப்பா தானல்லாமலும் சபாரத்தினம் மாமா அல்லாமலும் இடைப்பட்டுத் தான் போனார். கீழ் மூலையில் பகலின் நிகழ்வுகள் (ஸ்லோ மோஷனில்) போகிறது. கொக்குப் பட்டம், பாயும் அணில், சுடுதண்ணி குடிச்ச நாயாய் நிசார், பிரிந்து போதல், முகம் கழுவுதல் பிறகு நீங்கள் (அப்பா) வந்தீங்கள். காதில் கைவைத்து தலையேந்தி அப்பா கேட்கிறார். எதுகாலும் அப்பாவுக்கு இன்று சந்தோஷம் நடந்து போனதோ?

மஞ்சள் பக்கங்களில் முற்றத்து நிலவில் பாட்டி பூக்கோக்கிறாவாக்கும். தாத்தா பல்லுக்குள் ஏதேனும் அடைப்பு இத்தியாதி. வெங்காயத் தோட்ட வேலை, மாடு துரத்திப் பிடிக்கிறது, ஏதும் உழைவெடுக்கிறதாய் பகலில் நிகழ்ந்தது காரணமாயிருக்கலாம். அப்பாவின் சோகங்களில் சிறிதும் தாத்தாவைப் பாதித்திருக்குமென்றில்லை. கிடுகு வேலிப் புறப்பக்கமும், கிளுவை மரங்களும் சிறிது மண்ணிறமாக ஓரங்களிலும்.

முற்றத்தில் மல்லிகை நிற்கிறது
மல்லிகையில் அழகான பல பூக்கற்
மல்லிகை அருகில் பாட்டி இருக்கிறார்
பாட்டி மல்லிகைப் பூக்கட்டுகிறார்.

பாட்டி அருகில் தாத்தா இருக்கிறார்
பாட்டி நல்ல பாட்டுப் பாடுங்கள்
தாத்தா எங்களுக்குக் கதை சொல்லுங்கள்.

தனிப்பக்கத்தில் பாட்டியின் நிலாப்பாட்டு கையாலாகாத சோமாலியக் குடிமகனின் மூன்று பட்டினிக் குழந்தைகளாய் நாங்கள் இருப்பதாயும் கரிய மரமொன்றில் மல்லிகைக் கொடி படர்வதாயும் கரியமரம் நிலவில்தான் சந்திரனில் முடிகிறதாயும் கிடுகுவேலியும் நிகழ்வும்.

பாதித்தூக்கத்தில் தாத்தாவின் கதை கேட்கிறேன். பாதி இழப்பும் தொடர்பில்லாமலும் வந்து போகிறது. பெயர் மறந்துபோன ஈ ஒன்று எங்கணும் தன் பெயர் கேட்கிறதாக்கும். ஏதேதோ சாப்பாடுகளும் 'வாங்கிச் சாப்பிடுகின்றது. குதிரை தன் பெயர் தெரிந்தோ பெயர் சொல்லிக் கொடுக்கிறது.

நித்திரைக்குப் போனபோது மூன்று விரிச்சு வைச்ச பாய்களும் அம்மாவும் புகைபிடிச்ச சிம்னியும். அம்மா என்னவோ எல்லாம் கொஞ்சமாகச் சொல்லுகிறா. ஆராரிரோ பாடினபோது தூங்கிப் போயினமோ.

அம்மா வந்து தலையாட்டி அப்பன், குஞ்சு, ராஜ் எல்லாம் சொல்லி எழுப்பினது. மூன்று யன்னல்களுக்கூடாக பெயர் தெரியா மரத்தில் நிற்கும் ஒருகோடி குஞ்சிக் குலவும் காக்காக்கள், உதய காலத்துச் சூரியின் வாலுயரும் குருவிச் சோடி முதல்நாள் வாழ்வில் பள்ளிக்குப் போன, அன்றைய் விடியது விரும்பாத நாள் நினைவுக்கு வந்துபோனது.

வைக்கோற்பட்டையின் உச்சியில் நின்று சேவலொன்று கூவுகிறது. மேலேயுள்ள வேம்போ, நுணாவோ என்று தெரியாத மரத்தில் குஞ்சிக்குலவும் காக்காக்கள். இன்னும் சரியாக விடியாத பிரபஞ்ச ரகசியமான நேரம். சேவல் கூவுகிறதாக இந்தக் கவிதை.

பொழுது விடிந்தது. பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி பொலியதைப் பாராய்
பொன்னே நீ எழுந்தோடி வாராய்
காகங்கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப் பாராய்
கண்ணே நீ எழுந்தோடிவாராய்.

விடிந்து தான் போனது. ஒரு கேற் அது துப்பரவாக எங்கள் கேற்றுடன் ஒத்துப் போகவில்லை. அதை நான் மறந்து போகலாம். ஆனால் இந்த உள்பக்கக் கிடுகுவேலி இருக்கின்றது. அது சதாகாலமும் அப்பாவின் ஊர்க்காலக் கிடுகுவேலிகளை நினைவூட்டி வதைக்க ஆரம்பித்துவிடும். கிளுவைக் கிடுகு வேலி, வேலியோரங்களில் பட்டிமரங்கள் மரத்தோடேயே ஒட்டி நிற்கும். சிமியா இலைமரம். ஒரு நாள் நாக பாம்பு வந்து இந்த சிமியா இலைமரத்தோடு நின்றுதான் படம் எடுத்தது. நிலவில் குளிரும் பகலில் சூடும் தருகின்ற பாலைவனத்து வெண்மணல் கீழேயிருக்கின்ற வரிகள் என் சோகக் கவிதைகளாகப் படுகின்றன?

சூரியன் உதித்து மேலே வருகின்றது.
முற்றத்துச் செடிகளில் பூக்கள் பூக்கின்றன.
தேனி பூக்களில் தேன் குடிக்க வருகின்றது.

மற்றைய பக்கங்களில் காலையில் அப்பா தோட்டத்துக்குப் போய் வருகிறார். அவர் காய்கறிகள் கொண்டு வருகிறார். அக்கா பூக்கள் எடுத்து வருகின்றார். பாட்டி பால் கொண்டு வ[illegible]கிறார். திறந்த கேற்றில் அப்பா மண்வெட்டியோடும் காய்கறிகளோடும் சற்று சந்தோஷத்தோடு வருவது சவரம் செய்தது சற்று முன்னர் தான் என்பதாலா?

மீண்டும் பூரணமான பிரிவுத்துயருக்கான ஏற்பாடுகள் ஆயிற்று. வழமையைவிட இன்றைக்கேன் குளிக்காமல் முகம் கழுவதோடு பள்ளிக்குப் போகிறோம்? எல்லாவற்றையும் மறந்துவிடலாம். ஆனால் எங்கள் குடும்பத்தில் புதிதாக முளைத்த இந்தச் சின்னண்ணா (அது நான் தானோ) புத்தகத்தின் நான் பள்ளிக்குப் போகாமல் (சிறுவன் ஆனபடியால்) நின்றது சந்தோஷமாயிற்று. என்னைப் பொறுத்தவரையில் பிரிவுத் துயர் சற்று முன்னரேயே வாட்டிற்று அது சற்று முன்னர் சவரம் செய்த அப்பாவின் முகங்களோடேயே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியும் முஸ்லீம் மாணவர்களும்

சரிநிகரில் வெளிவந்த கிழக்குப் பல்கலைக்கழகம் தேய்கிறது என்ற கட்டுரை பார்த்தேன். இப்பல்கலைக்கழகம் தொடர்பாக எனது கருத்துகளையும் கூற விரும்புகிறேன். கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் ஆரம்பகாலத்திலிருந்தே பல்வேறு அரசியற் சுயலாபங்களுக்கு இரையாகியுள்ளது. முன்னாள் ஐ.தே.க. அரசாங்கத்தில் கல்குடாத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த தேவநாயகம் தனது அரசியல் லாபத்துக்காகப் பேருக்கு இப்பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்தார். தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் தலைவர்களாகவும் உயர் அதிகாரிகளாகவும் இருந்தவர்கள் யாவரும் இந்நிறுவனத்தின் வளர்ச்சி குறித்த தீர்க்கதரிசனம் அற்றவர்களாகவும், பிரதேசத்தின் பிரத்தியேக தேவைகள் பற்றியோ இப்பிரதேசத்தில் வாழும் பல்வேறு இனங்களின் உறவின் அரசியல் நிலை பற்றியோ தெளிவற்றவர்களாகவும் இருந்தனர். பல்கலைக்கழகத்தை சரியானபடி வழி நடத்துவதற்கு இது தடையாக அமைந்தது.

தற்போதுள்ள உபவேந்தர் திரு.சந்தானம் கூட பல்கலைக்கழகம் முன்னேற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தாலும், ஆர்வத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் வழிவகைகள் தெரியாதிருக்கிறார்.

இதற்கிடையில் பல்வேறு பிரதேச வ்ாதங்களும் இப்பல்கலைக்கழகத்துள் முட்டி மோதுகின்றன. யாழ்ப்பாண மேலாதிக்கவாதம், கிழக்குப் பிராந்திய வாதம், இஸ்லாமிய அடிப்படை வாதம் ஆகிய வெவ்வேறு குறுகிய வட்டங்கள் செயற்படுகின்றன. இதே சமயம் பரந்த மனப்பான்மையுடன் கிழக்கிலங்கையின் உயர் கல்விப்பீடத்தை அதற்கு உரியதாக இருக்க வேண்டிய செழுமையுடன் கல்விச் செயற்பீடமாக்க சில விரிவுரையாளர்களும் மாணவர்களும் முயல்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை எனினும் பல்கலைக்கழகத்துள்ளும் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் இந்நிறுவனம் பற்றி நிலைகொண்டுள்ள குறுகிய நோக்கினால் இந்த நல்லெண்ணச் சக்திகளின் செயல்வேகம் தடைப்படுவது மாத்திரமல்ல; அவை நம்பிக்கையிழந்தும் விரக்தியுற்றும் போகின்றன.

தற்போது இன்னோர் முக்கிய பிரச்சினை எழுந்துள்ளது. 90ஆம் ஆண்டில் இரண்டாம் ஈழப்போரினால் இப்பிரதேசத்தில் இடம் பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற முஸ்லீம் விரிவுரையாளர்களும் மாணவர்களும் இவ்வருடமே இங்கு திரும்பி வந்தனர். இவர்களில் 99% ஆனோர் மட்டுநகரில் இயங்கிவரும் கலை, வர்த்தக/ முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்தவர்கள்.

இன்று மட்டு நகரில் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் முன்பு போல் அதிக பயமின்றி வாழும் சூழலிலேயே இப்பீடத்துக்குரிய முஸ்லீம் மாணவர்கள் திரும்பி வந்துள்ளனர். இதன் காரணத்தினால் புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர் அனுமதியில் கணிசமான அளவு முஸ்லீம் மாணவர்களையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கலை, வர்த்தக பீடங்களுக்கு அனுமதித்தது. அனுமதிக்கப்படும் மாணவர் தொகையைப் பொறுத்தே பல்கலைக்கழகத்துக்கான நிதி ஒதுக்கீடும் தீர்மானிக்கப்படும். இவ்வகையில் இம்முறை மாணவர் தொகை உயர்ந்தமை நல்ல அறிகுறியாகத் தென்பட்டது.

இந்நிலையில் மட்டு நகரில் இயங்கும் இவ்விரு பீடங்களையும் எதிர்வரும் கல்வியாண்டு தொடக்கம் வந்தாறு மூலைக்கு மாற்றுவது என பல்கலைக்கழகக் கவுன்சிலும், நிர்வாகமும் மூன்று வாரங்களுக்கு முன் முடிவு எடுத்துள்ளன.

விரிவுரையாளர்கள் கிழக்கிலங்கையின் அரசியற் சூழல், முஸ்லீம் சமூக மாணவர்களின் பாதுகாப்பு, 90ஆம் ஆண்டு கசப்பான சம்பவங்களின் வடு முற்றிலும் ஆறாத நிலையில் வந்தாறு மூலைக்குப் போவதில் அவர்கள் காட்டும் தயக்கம் போன்றவற்றை மனதிற்கொண்டு சில விரிவுரையாளர்களும் மாணவர்களும் பீடங்களின் இடமாற்றம் நிதானமாகத் திட்டமிட வேண்டியது என்று அபிப்பிராயப்பட்ட போதிலும் அது புறக்கணிக்கப்பட்டது. முஸ்லீம் மக்களுக்குத் தமிழ்க் கிராமத்தில் எந்தப் பிரச்சினையோ, பயமோ இருக்க வேண்டிய தேவை இல்லை என நிர்வாகமும் மாணவர்களிலும் விரிவுரையாளர்களிலும் கணிசமான தமிழர்களும் கூறுகின்றனர். சிறுபான்மை முஸ்லீம் மாணவர்கள் பற்றிய இத்தகைய அலட்சியமும் தாம் எடுக்கும் முடிவுகளுக்கு அவர்கள் இணங்கி நடக்க வேண்டும் என்ற எண்ணமும் தமிழ்ப் பெருந்தேசியவாதத்தின் ஒரு பிரதிபலிப்பாகும். கடந்த ஒரு வருடகாலமாக பல்கலைக்கழக மட்டத்தில் இரு சமூகத்தாரிடையேயும் ஏற்பட்டு வந்த நல்லுறவு பெருந்தேசியவாதிகள் சிலரது குறுகிய அரசியற் கண்ணோட்டத்தால் பாதிக்கப்படுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இந்தக் கண்ணோட்டத்தைத் தூண்டும் வகையில், குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் முஸ்லீம்கள் பல்கலைக்கழகத்தை தமது பகுதிகளுக்குக் கொண்டு செல்ல முயல்கின்றனர் எனப் பொய்ப்பிரச்சாரம் ஒன்றையும் கட்டவிழ்த்துள்ளார். அவரது உள்நோக்கம் புரியாத மாணவர்கள் இதற்குப் பலியாகி நாம் தமிழ்ப் பிரதேசமான வந்தாறு மூலைக்குப் போவோம் என்கின்றனர்.

சமீபகாலமாக சுமூகமாக இயங்கி வந்த பல்கலைக்கழகம் ஆழ்ந்த அரசியல் தரிசனமின்மை, சுயநல நோக்கு, குறுகிய பெருந்தேசியவாதம் போன்றவற்றால் மீண்டும் குழப்பமடையப் போகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை மனதிற்கொண்டு சிந்தித்துச். செயற்பட வேண்டும்.


**க.றொபட்**

---

# 19வது இலக்கியச் சந்திப்பு: துடைப்பானின் குறிப்புகள் குறித்து சுகனின் எதிர்வினைகள்

உலகத்தில் மிகவும் துரதிர்ஷ்டமானது ய்ாதெனில் துடைப்பான் அகதியாய் வருவதற்கு முன்பே இலக்கியச் சந்திப்பு தொடங்கி விட்டதுதான். தராசு - படிகளுடன் வருபவர்களைப் பற்றி இலக்கிய ஆர்வலர்கள் அவ்வளவு அக்கறைப்படுவதில்லை இங்கு. அதன் ஜீவாத்மாவே அதில் இடம்பெறும் திறந்த கருத்துப் பரிமாறலும், வந்திருக்கும் ''முட்டாள்களை'' அறிவுலகத்திற்கு அழைத்துச் செல்ல இறைஞானிகள் என்று யாரும் இல்லாதிருப்பதும் தான். 19 இலக்கியச் சந்திப்பிலும் கலந்து கொண்ட பராமாஸ்ரருக்கே அடுத்த இலக்கியச் சந்திப்பு நடக்குமா என்பது தெரியாது.

ஒருவர் புதிதாக ஓர் சந்திப்பில் கலந்து கொள்கிறார். சந்திப்பு முடிந்ததும் அவர் இலக்கியச் சந்திப்பிற்கு எதிரானவராக மாறி விடுகிறார். தொடர்ந்து இலக்கியச் சந்திப்பிற்கு அவ் எதிர் மனப்பான்மையோடு வருகிறார் அல்லது வராமல் விட்டு அல்லது மக்களிடம் அம்பலப்படுத்துவதாகவோ சொல்கிறார். (அவரது மக்களைக் காண திருப்பியும் அவர் இங்குதான் வரவேண்டியிருக்கிறது.) இது ஆச்சரியமான தொன்றல்ல. ஆச்சரியமான தென்னவெனில் நடக்கின்ற ஒவ்வொரு விடயங்கள் குறித்தும் அப்படி மாறிவிடுபவர் எந்த குறைந்தபட்ச அறிதலையும் வைத்திருப்பதில்லை. ஒரு விடயம் குறித்த அவரது அறியாமையைப் பற்றி அவரைத் தவிர வேறுயாரும் அறிந்து கொள்வதற்கும் அவர் விடுவதில்லை. இதையெல்லாம் சகித்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. பேசப்படுகின்ற விடயங்கள் குறித்து குறைந்தபட்சமாவது கிரகிக்க வேண்டுமென்ற வேட்கையிருந்திருப்பின் துடைப்பான் இப்படி




தாறுமாறாக குழப்பியிருக்க வேண்டியதில்லை.

கைலாசபதியை நுஃமான் அவர் ஒரு ஆய்வாளரேயன்றி விமர்சகரல்ல என்ற சாரப்படி பேசப்போக புகழ் பாடியதாக அசோக் விளங்கி வைத்திருப்பதற்கு யார் என்ன செய்ய முடியும். ''கைலாசபதியின் பலவீனமே அவரது முன்னுரைகள் தான், இதை நான் அவருக்கு எழுதினேன்'' என்று நுஃமான் சொன்னதும் ''அம்முன்னுரைகளின் பெரும்பாலானவை சர்வமங்களம் (கைலாசபதியின் மனைவி) எழுதியது என்று ஒரு கதை உலாவுகிறது'' என்று ஆதவன் சொன்னபோது ''சீ... அவரை அப்படி மட்டம் தட்ட வேண்டியதில்லை'' என்று சிவசேகரமும் ஒரு சுவாரஸ்யமான கருத்துப் பரிமாறலை நடாத்தியபோது துடைப்பான் பின் கதிரையில் இருந்து பெண்களின் கூந்தல் அழகையா ரசித்துக் கொண்டிருந்தார்.

ஓசையில் துடைப்பான் ஆனவர் (பாரிஸ் இல சந்திப்பு) நாடகம் பற்றிய விவாதத்தில் பாலேந்திராவிடம் மொழி பெயர்ப்பு நாடகங்கள் பற்றி, ''முழுவதும் மொழி பெயர்ப்பு நாடகங்களே செய்கிறீர்கள், பிரச்சினையிலிருந்து திசை திருப்புவதற்காகத்தானே?'' என்று கேட்ட போது நாம் அதிர்ச்சியடைந்து விட்டோம். ஆனால் துடைப்பானோ இம்முறை ''மொழி பெயர்ப்புகள் அவசியமற்றவை என்று சிவசேகரம் பேசியது சற்று அதிர்ச்சிக்குரியதாக இருந்தது'' என்று எழுதி மீண்டும் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறார். சிவசேகரத்தின் பேச்சின் தொடக்கமே மொழி பெயர்ப்புகளின் போதாமை பற்றியதாக இருந்தது.

''எமது இலக்கிய உலகம் பொய்மைகளின் கூடாரமாகவே இன்னும் திகழ்கிறது. உண்மையான விமர்சனப் பாங்கு எவரிடமும் அற்று வறட்சி கொண்டு காணப்படுகிறது. இது ஒரு துர்ப்பாக்கிய நிலை. இனி வரும் இலக்கிய உலகம் திருந்த வேண்டும்'' எனும் பொன்மொழிகள் போக மாட்டேன் என்று, வந்த வேகத்தில் திருப்பி துடைப்பானிடமே போய் ஒட்டிக் கொள்வதை காணமுடிகிறது.

நிதானமான வாசிப்பும் அவதானமும் உடனடியாக இல்லாது போய் விடினும் காலக் கிரமத்திலாவது துடைப்பானுக்கு ஏற்பட வேண்டுவோமாக. சில விடயங்களைக் கேட்டுக் கொண்டு போக மட்டுமே லாயக்கான தகுதியோடு சிலர் இருப்பதில்லையா? ''தகுதி காண் பரீட்சைகள்'' யாருக்குச் செய்வது என்று விவஸ்தை கெட்டு அலைகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பலாத்காரத்தின் பயனால் உருப்பெற்ற சிறுபான்மை! உதவும் கரங்களின்றி உருக்குலையும் கிழக்கு ரிமோர்!!

அணிசேரா நாடுகளின் பத்தாவது உச்சிமாநாடு 1992இல் இந்தோனேசியாவில் நடைபெற்றது. இந்த் மாநாட்டுக் காலத்தில் பல்வேறு மனித உரிமைகள் அமைப்புகள் இந்தோனேசியா மீது பிரச்சாரப் போரைத் தொடுத்தன. கடந்த மாதம் தென்கிழக்காசியப் பொருளாதாரப் பேச்சிற்காக அமெரிக்க ஜனாதிபதியும் அவரது வெளியுறவு அமைச்சரும் இந்தோனேசியா வந்திருந்தனர். இவ்வேளையில் கிழக்கு ரிமோர் மாணவர்கள் சிலர் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினுள் சுவரேறிக் குதித்து வெளியேற மறுத்து விட்டனர். அவர்களது கோரிக்கை அமெரிக்க ஜனாதிபதியும் அமைச்சரும் தங்களைச் சந்திக்க வேண்டும் என்பது. இங்ஙனம் கோரிக்கை விடுத்தவர்களை ஒன்றுஞ் செய்ய வேண்டாமென்று வெளியுறவு அமைச்சர் உவாரன் கிறிஸ்தோபர் இந்தோனேசியா அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். மேற்கொண்டு எதுவும் நடந்ததாக இது வரை தகவலில்லை.

கிழக்கு ரிமோரில் என்ன பிரச்சினை? ஏனிந்த மாணவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர் என்று நண்பனொருவன் ஆர்வத்தோடு தொடுத்த வினாவினால் தான், சிறுபான்மையினர் பற்றி எழுதி வந்த இந்தத் தொடரில் இம்முறை கிழக்கு ரிமோரை உள்ளடக்க வேண்டியேற்பட்டது. நாங்கள் ஏற்கனவே பார்த்த சிறுபான்மையினரது விடுதலைப் போராட்டங்கள், அவற்றின் வெற்றி தோல்வியென்பதிலிருந்து கிழக்கு ரிமோர் முற்றாக வேறுபட்டது. ஆனாலும் இதனையும் சிறுபான்மையினர் என்ற வகுப்புக்குள் கொண்டு வந்துதான் ரிமோரியரின் பிரச்சினைகளை ஆராய வேண்டியுள்ளது.

தனிப்பட்ட முறையில் எனது கருத்தில் கிழக்கு ரிமோர் பிரச்சினை சிறுபான்மையினர் பிரச்சினை அல்ல என்பதையும் இது ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தம், குடியேற்றவாதத்தின் புதிய முகத்தை எதிர்த்து நடாத்தும் போராட்டம், ரிமோரியர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்பதையும் முன்கூட்டியே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் என் போன்றவர்களது கருத்து இன்னும் 'கடதாசிப் பெறுமதி'யாகவே இருப்பதால் தான் சிறுபான்மையினர் என்ற நடைமுறை வகுப்பில் கிழக்கு ரிமோரியரை உள்ளடக்கி விளக்கலாம் என நினைக்கிறேன்.

## யார் இவர்கள்? ஏனிந்தப் போராட்டம்?

இதற்கு விடை காண்பதாயின் இந்தோனேசியாவின் வரலாற்றையுஞ் சற்றுத் திரும்பிப் பார்த்தல் வேண்டும். இன்றைய இந்தோனேசியாவின் நீளம் சுமார் 3200 மைல். அதாவது இலண்டனுக்கும் நியூயோர்க்குக்கும் இடையிலான தூரத்துக்குச் சமனாகும். வடக்குத் தெற்கான அகலம் சுமார் 1200 மைல். இன்றைய சனத்தொகை 19 கோடியே 12 இலட்சமாகும். சனத்தொகையில் உலகில் ஐந்தாவது இடம். உலகிலுள்ள முஸ்லீம்களில் 10%வீதமானோர் இங்குதான் உள்ளனர். 13,700 தீவுகளை உள்ளடக்கிய நாடாக இது விளங்குகிறது. இவற்றுள் யாவா, சுமாத்திரா என்ற இரண்டுமே மிகப் பெரியவை. நாட்டின் 60% மக்கள் யாவாத் தீவில் வசிக்கின்றனர். இங்குதான் தலைநகர் ஜகார்த்தாவும் அமைந்துள்ளது.

இந்த நாட்டின் வரலாற்றில் உலக வரலாறும் பின்னிக் கிடப்பதை அறியலாம். இந்திய, சீனக் கலாசாரப் பரம்பலும் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் பாரம்பரியமும் இரண்டறக் கலந்த நாடு இதுவாகும். கப்பலோட்டிய தமிழர்கள் கால்பதித்த நாடாகவும் இதனை அறிகிறோம். சிறிய தீவான பாலியில் இந்துக்கள் இன்றும் செறிவாக உள்ளனர். 14ம்



நூற்றாண்டில் இங்கு இஸ்லாம் வந்தது. போர்த்துக்கேயரால் கிறிஸ்தவம் கொண்டு வரப்பட்டது. இது 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தது. ஆனாலும் அரசியல், பொருளாதார மாற்றங்களை உட்புகுத்தியவர்கள் டச்சுக்காரர்களே. 17ஆம் நூற்றாண்டில் ஜகார்த்தாவில் அவர்களுடைய கிழக்கிந்தியக் கம்பனிகள் தலைமை அலுவலகம் அமைந்திருந்தது. இது பட்டேவிய நகர் என்று அன்று அழைக்கப்பட்டது.

நெதர்லாந்து 19ஆம் நூற்றாண்டில் அடைந்த துரித வளர்ச்சியும் சுபீட்சமும் இன்தோனேசியா விலிருந்து உறிஞ்சப்பட்ட 'சத்துக்கள்' கொண்டு முன்னெடுக்கப்பட்டவையே. இதனால் 1824 -30 இலும் 1894 - 99 இலும் யாவாவில் மோசமான கிளர்ச்சிகள் அந்நிய ஆட்சிக்கு எதிராக வெடித்திருந்தன. தமது ஆட்சியாளர்களை இவர்கள் அடியோடு வெறுத்தனர். இதனால் தான் யப்பானியர் மிகச் சுலபமாக இந்நாட்டை 1941 டிசம்பரில் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். தங்களுக்கு விடுதலை வாங்கித் தந்தவர்கள் யப்பானியர்கள் என மக்கள் அப்பாவித்தனமாகக் கருதியிருந்தனர். யுத்தம் முடிந்த கையோடு 1945 ஒகஸ்ட் 17 இல் இந்தோனேசியா சுதந்திரப் பிரகடனஞ் செய்தது. ஆனால் டச்சுக்காரர் இதனை ஏற்காமல் கொடிய அடக்குமுறைகளைக் கையாண்டனர். இதனால் தேசியவாதிகளிடையே ஹீரோக்கள் உருவாகினர். இவர்களின் தலைவர்தான் சுகர்னோ. வழக்கமான 'பிரிந்து ஆளும்' சூழ்ச்சியை டச்சுக்காரர் கையாண்டனர். தீவுக் கூட்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இதில் டச்சுக்காரர் தோல்வியடைந்தது மட்டுமன்றி உலக அபிப்பிராயத்தில் கண்டனத்தையும் பெற்றனர். 'மார்சல் பிளான்' என்பதன் கீழ் அமெரிக்கா வழங்கிய நிதியுதவி முழுவதுமே யுத்தத்தில் செலவழிக்கப்பட்டது. இதனால் அமெரிக்கா ஆட்சேபந் தெரிவித்தது. அதே வேளை அவுஸ்திரேலியாவிலிருந்து தொழிற்கட்சி அரசாங்கம் தேசியவாதிகளைப் பலமாக ஆதரித்தது. 1949 டிசம்பர் 27இல் டச்சுக்காரர் தோல்வியை ஒப்புக் கொண்டு இறைமையை இந்தோனேசியாக் குடியரசிடம் ஒப்படைத்தனர். ஆனால் 'மேற்கு இரியன்' என்ற பகுதியை அவர்கள் ஒப்படைக்கவில்லை. நாட்டின் தேசியக் கட்சியை 1927 இல் ஸ்தாபித்திருந்த சுகர்னோ முதலாவது ஜனாதிபதியானார்.

இப்பிரதேசத்தில் போர்த்துக்கேய - டச்சு மோதல்களினால் பிளவுபட்ட பிரதேசங்களில் ஒன்று ரிமோர் தீவாகும். இதன் மேற்குப் பகுதியை 1859இல் டச்சுக்காரர் கைப்பற்றினர். கிழக்குப்பகுதி 1520இலிருந்து போர்த்துக்கேயர் வசமே தொடர்ந்து இருந்து வந்தது. கிழக்கு ரிமோரின் நிலப்பரப்பு இந்தோனேசியா நாட்டின் (இன்றுள்ளபடி) 4% மட்டுமே என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். ரிமோர் தீவு மக்கள் கிழக்கிலும் மேற்கிலும் சரி போர்த்துக்கேய, டச்சு ஆட்சியாளர்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களாக இல்லை. மேற்கு ரிமோரின் சனத்தொகை சுமார் 9 இலட்சம். கிழக்கு ரிமோரின் மக்கள் தொகை அண்ணளவாக 7 இலட்சம். 19ஆயிரம் ச.கி.மீ.பரப்பளவைக் கொண்டது கிழக்கு ரிமோர். போர்த்துக்கேயர் இதனைக் கைப்பற்றும்வரை இது சுதந்திரமாக விளங்கிய நாடாகும்.



சிசைரோ

கிழக்கு ரிமோர் மத்திய பகுதியில் நிறைந்த மலைகளையும் அடர்ந்த காடுகளையும் கொண்டது. இங்கு விளையும் வெண் சந்தன மரங்கள் ஐரோப்பிய நாடுகளில் கூடுதலாக விலைபோயின. அதற்கு முன்பு சீன வர்த்தகர்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இன்று ரிமோரிய மக்களிடையே மலே, அரபு, சீன, ஆபிரிக்க இனத்தவர்களின் கலப்பைக் காணமுடிகிறது. ஆனால் இந்த மக்கள் ரிமோரிய மொழியையும் கலாசாரத்தையும் பக்குவமாகப் பேணி வருகிறார்கள்.

## கிழக்கு ரிமோர் மீதான ஆக்கிரமிப்பு

1974 ஏப்ரலில் இராணுவச்சதி மூலம் போர்த்துக்கேய ஆட்சியை கவிழ்த்தது. சர்வாதிகாரி மார்செல்லோ கெயிற்றனோவின் ஆட்சிக்கு இராணுவம் முடிவு கட்டியது. குடியேற்றநாடுகள் விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியிருந்த தசாப்தம் இது. போர்த்துக்கல் தன்னை விட 20 மடங்கு பெரிய நிலப்பகுதியைத் தனது குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்தது. இவற்றைக் ''கட்டிக் காத்தல்'' என்பது பெரிய பிரச்சினையாக இருந்தது. வியட்நாமில் அமெரிக்கா செலவிட்ட பணத்தைவிடக் கூடுதலாகப் போர்த்துக்கல் தனது குடியேற்ற நாடுகளுடனான போரில் செலவிட்டு வந்தது. எனவே புதிய இராணுவ அரசாங்கம் இந்த ''வீண் செலவைக்'' கட்டுப்படுத்த முடிவு செய்து சுதந்திரத்துக்கான சைகையைக் காட்டியது. புரட்சி செய்து வந்த ஆபிரிக்க குடியேற்றநாடுகள் மனமாற வென்று சுதந்திரக் கொடி நாட்டின. ஆனால் கிழக்கு ரிமோர் அந்தளவுக்கு அரசியல் 'பக்குவம்' பெற்றதாக இருந்திருக்கவில்லை என்பதால் போர்த்துக்கல் இந்தத் தீவை முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்திருக்கவில்லை.

ஆயினும் இக்காலப்பகுதியில் கிழக்கு ரிமோரில் மூன்று கட்சிகள் உருவாகின. UDT என்ற கட்சி ஏதோ ஒருவகை உறவில் போர்த்துக்கல்லூடனான உறவை நீடிக்க வேண்டும் என்ற கொள்கையை மூன்வைத்தது. APODETI என்ற கட்சி நாட்டை இந்தோனேசியாவுடன் இணைக்க வேண்டும் என்று வாதாடியது. ஆனால் சுதந்திரக் கிழக்கு ரிமோரின் புரட்சிகர முன்னணி FRETILIN என்பதே நாட்டைச் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்த முனைந்தது. இக்கட்சிக்கே மக்களின் ஏகோபித்த ஆதரவிருந்தது. மற்ற இருகட்சிகளும் தமது விசுவாசத்தை வெளியார் பால் கொண்டிருந்தமை வெளிப்படை. 1974 செப்டெம்பரில் FRETILIN உதயமானது. ஆபிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்ட வீரர்களது சிந்தினைகளால் உந்தப்பட்ட இளைஞர்கள் அதேவழியில் சுதந்திரம் பெற இக்கட்சியில் இணைந்தனர். ஆனால் கம்யூனிஸம் என்றாலே பதறித்துடிக்கும் இந்தோனேசியா இக்கட்சியை கம்யூனிஸ்டுகளின் பாசறை என்று வர்ணித்த்து.

1949 இலிருந்து 1966 வரை ஜனாதிபதியாக இருந்த சுகர்னோ மார்க்ஸிஸம், தேசியவாதம், இஸ்லாம், பாவா வழக்காறுகள் என்பவை கலந்த கோட்பாடுகளை முன்வைத்து வந்தார். அணிசேரா நாடுகளின் ஐக்கிய தலைவர் என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்டதால் ஐ.நா.வில் அவருக்கு நிறையச் செல்வாக்கிருந்தது. எண்ணெய் வளம், கனிப்பொருட் செறிவு, பணங்குவிக்கும் (சந்தனக்) காடுகள் என்பவற்றால் இந்தோனேசியா மீது எப்போதும் 'ஒரு கண்ணாக' இருந்த மேற்குலகுக்கு சுகர்னோ இடைஞ்சலாகவே இருந்தார். அவரைத் தனிமைப்படுத்தவும் முடியவில்லை. போகப் போக அவருக்கு நண்பர்கள் அதிகரித்தபடி இருந்தனர். இப்படியே போனால் தென்கிழக்காசியாவில் ஏன் அவுஸ்ரேலியா வரை சோஷலிச சித்தாந்தம் கொடி போட முற்படலாம் என்ற நியாயமான அச்சம் மேற்குலகின் மனத்தை வருத்தியது. மேற்குலக பத்திரிகைகள் சுகர்னோவின் 'காமலீலைகள்' பற்றி எழுதுவதிலேயே அதிகப் பக்கங்களைச் செலவிட்டுவந்தனர். இந்தப் பிரச்சாரப் பின்னணியோடு 1965 ஒக்டோபர் 1ம் திகதியன்று இராணுவம் திடீர் புரட்சி செய்தது. இராணுவ அதிகாரிகள் ஆறுபேர் தமக்கு கீழ் உள்ளவர்களால் கொல்லப்பட்டனர்.

இது கம்யூனிஸ்டுகளின் வேலை என்று கூறப்பட்டவுடன் இராணுவம் அட்டகாசத்தில் இறங்கியது. ஆசியாவிலேயே மிகப் பழைய கம்யூனிஸ்ட் கட்சியான PKI யின் தலைவர்கள் யாவரையும் கொன்றொழித்தது இராணுவம். நாடு இரகணமாயிற்று. ஆகக்குறைந்தது ஒரு லட்சம் - ஆகக்கூடியது பத்து லட்சம் மக்கள் பலியாகிப் போனதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. இப்புரட்சியில் சுகர்னோ சம்பந்தப்பட்டாரா? கம்யூனிஸ்ட் கட்சியின் PKI இன்பங்கு என்ன என்பதற்கு இன்று வரை முடிவான பதில் இல்லை. ஏனில் இப்புரட்சியின் பின் சுகர்னோவின் செல்வாக்கு மங்கத் தொடங்கி

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிரபாகரன்...

நான் மிகவும் உயர்வாகவே கவனிக்க வேண்டும். நீங்கள் எனது எதிராளியாகக் கூட இருக்கலாம். யுத்த சூழ்நிலையில் அவர்களை பேச்சுவார்த்தைக்கு ஹெலிகொப்டரில் கொண்டு வராமல் எப்படிக் கூட்டிவருவது.

ஆனால் அப்படியெல்லாம் கூறியவர்கள் ஏன் இன்று மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டும், மின்சாரம் கொடுக்க வேண்டும். வடக்கில் மின்சாரத்தை துண்டிக்குமாறு சத்தமிட்டவர் சிறிமா பண்டாரநாயக்க. அவர் இன்று பொ.ஐ.மு.வின் தலைவர் ஏன் இன்று மௌனம் சாதிக்கிறார்? எல்.ரி.ரி.ஈக்கு பிரபாகரன் தலைவர், பொ.ஐ.முவுக்கு சிறிமா தலைவர். சந்திரிகாவா தலைவர்? இல்லையே! '' மின்சாரம், தண்ணீர், மண்ணெண்ணெய் எதுவும் வடக்கிற்கும் கொடுக்காதீர்கள். அவர்களை அப்படித்தான் சரணடையச் செய்யலாம்'' எனக் கூறிய சிறிமா இன்று எங்கே? நான் சவால் விடுகிறேன். அப்படித் தான் கூறவில்லை என சிறிமா கூறட்டும் பார்ப்போம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வரை இந்த முகமூடி அரசியல் தொடரும். பின்னர் பார்க்கலாம்; சந்திரிகாவா, பிரபாகரனா முட்டாள் என்று. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் அவர் தனது தகப்பனின் பாஷையில் கதைப்பார். தமிழ் மக்கள் அவ்வளவு முட்டாள்களாவார்களா என்பது எனக்குத் தெரியாது.

சிங்களவர் என்றால் பாண் கொடுத்தால் சாப்பிடுவார்கள். பாண் கிடைத்தால் அவர்களது பிரச்சினை தீர்ந்தது. தமிழ் மக்கள் அப்படியல்ல.''சிங்களயா மோடயா. பாண் கன்ட யோதயா'' (சிங்களவர் மூடர்கள் பாண் தின்னும் அசுரர்கள்). இப்போது பாண் நன்றாக சாப்பிடுகிறவர்கள். ஆனால் தமிழ் மக்கள் பாண் சாப்பிடுகிறார்கள் இல்லை. அவர்கள் தங்களது ரொட்டி தோசை, வடை சாப்பிட்டாலும் என்ன செய்ய வேண்டு மென்பது தெரியும். ஆனால் இங்கு பாண் கேஸ் ஒன்று உள்ளது. ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன்.

ஒரு தடவை நான், விஜே குமாரதுங்க ஆகியோர் எம்.ஜி.ராமச்சந்திரனை சந்திக்க சென்றிருந்தோம் எங்களோடு வரமுடியாது எனச் சந்திரிகா கூறியிருந்தார். எம்.ஜி.ராமச்சந்திரன் சந்திரிகாவை வரவேற்க வைத்திருந்த மாலையை எனக்கு போட்டு வரவேற்றார். எங்களுக்கு அவர் இரு வடைகள் வீதம் இருவருக்கும் கொடுத்து உபசரித்தார். நான் கூறினேன் விஜேகுமாரதுங்கவுக்கு ''இதோ சிறந்த மனிதர். நல்ல தேசிய உணர்வுடையவர்' என்று எங்களைச் சந்திக்க எம்.ஜி. ஆர் வந்திருந்தால் நாங்கள் அவருக்கு பட்டர் கேக், ரோல்ஸ், பெட்றீஸ், சான்விச்சஸ், கேக், கட்லட் எல்லாம் கொடுத்திருப்போம். ஆனால் ராமச்சந்திரன், 'இதோ பார் நாங்கள் யார் என்பதை' எனக் காட்டினார்.

மெட்ராசில் அலைந்து பாண் தேட முடியாது. பாண் தேடினால் யாராவது நோயாளிக்காகவா என்று கேட்கின்றனர். மெட்ராஸ்காரருக்கு தோசை, பரோட்டா, இட்லி எல்லாம் இருக்கிறது சாப்பிட, எங்களுடைய சனத்துக்கு பாண் இல்லாமல் முடியாது. எனக்கு இந்தியாவில் ஒரு நபர் கூறினார். 'ஐசே, உங்கட நாட்டுக்கு குண்டு போட தேவையில்லை. அமெரிக்காவிலிருந்து வரும் இரண்டு கோதுமை மா கப்பலைக் கொண்டு வந்து ஒருவார் நிறுத்தினால் சரணடைந்து விடுவீர்கள்' என்று. ஏனெனில் பாண் சாப்பிடாமல் இருக்க ஏலாது. ஆனால் தமிழ் மக்களை அப்படி பாண் கொடுத்து ஏமாற்ற முடியாது என்பதை சந்திரிகா உணர வேண்டும். தமிழ் மக்களுக்கு குறிப்பிட்ட பிரச்சினைகள் உண்டு. முக்கிய தேவைகள் உண்டு. அதனை இனவாதரீதியில் பார்க்க முடியாது. பிரபாகரன் பயங்கரவாதி என்பதை இங்கு மாத்தறையிலுள்ள மக்களா கூற வேண்டும். அவர் பயங்கரவாதியா இல்லையா என்பதை அவரது மக்கள் கூறட்டும்.

இன்று வடகிழக்கில் 48,000 பேர் தங்கள் வாழ்விடத்தை இழந்து உள்ளனர். பிரபாகரனின் பிரதான கோரிக்கைகளில் ஒன்று அவர்களை 'மீளக் குடியமர்த்துவது' அம் மக்களின் இருப்பிடங்களில் இன்று இராணுவ முகாம்கள். சந்திரிகா இராணுவ முகாம்களை அகற்ற விருப்பப்படுவரா? பின்னர் அவரால் எப்படி மீள குடியமர்த்த முடியும். ஆம், அங்குதான் சந்திரிகாவின் இன்னொரு முகமூடி உள்ளது. எனவேதான் தமிழ் மக்களால் பூரண நம்பிக்கை கொள்ள முடிவதில்லை.

சந்திரிகாவை நம்பும் தமிழர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இருப்பது பான்ஸ் பிளேஸ், ரொஸ்மீட் பிளேஸ், கோர்டன் பிளேஸ் போன்ற கொழும்பு -7 பகுதிகளில். அவர்கள், அந்த பனைமரத்தின் கீழ் இருந்து கிணறுகளில் நீரிறைத்து குளித்து வாழ்ந்தவர்கள் அல்ல. இவர்கள் சந்திரிகாவின் ஆட்கள். இவர்கள், அங்கு தமிழ் மக்கள் செத்துக் கொண்டிருந்த போது இங்கிலாந்து சென்று அகதி நிவாரண அமைப்பு வேலைகள் செய்து கொண்டு மாதம் ஆயிரக்கணக்கான டொலர்களை சம்பாதித்துக் கொள்பவர்கள். பெரும் ஹோட்டல்களில் அகதிப் பணத்தை சுதியாக செலவழித்து விட்டு 'சிறு அறிக்கை' சமர்ப்பிக்கும் கூட்டம் இவர்கள். அங்கு அம் மனிதன் விடியும் வரை துப்பாக்கியை வைத்துக் கொண்டு கண்விழித்துக் கொண்டிருக்கிறான்; தனது மக்களையும், தேசத்தையும் காப்பதற்காக. ஆனால், இங்கு இவர்கள் இப்படி... இவர்களிடமா தமிழ் மக்கள் ஏமாறப் போகிறார்கள்?

நேர்காணல்-
என். சரவணன்

## தேசியவாதம்...

ரிமைகளை விசேட சலுகைகளைக் கோருகின்றது.

இந்த அர்த்தத்தில் விடயங்கள் புரிந்து கொள்ளப்படாத போது, இனங்களிடையே ஐக்கியம் பற்றிய முயற்சிகள் ஒரு போதும் சாத்தியமாகப் போவதில்லை.

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தனது சுயாதீனத்தைப் பேணவும் உள்ள உரிமையை அங்கீகரிப்பதில்தான் இங்குள்ள இனங்களிடையே ஒற்றுமை சாத்தியம்.

'சிங்கள இனத்தின் நலன்கள் பாதிப்புறா வண்ணம் மற்றைய இனங்கள் பாதுகாக்கப்பட உத்தரவாதம் வழங்கப்படும்' என்ற புதிய ஜனாதிபதியின் பேச்சும் கூட இந்தப் புரிதலில் இருந்து எழுவதாக தெரியவில்லை. ஒரு இனத்தின் நலன் இன்னொரு இனத்தின் நியாயமான நலனுடன் முரண்பட வேண்டிய அவசியம் இல்லாமலே இனங்களின் நலன்கள் பாதுகாக்கப்படலாம். இதற்கு உலக நாடுகளில் நிறைய உதாரணங்கள் உண்டு. இதைப் புரிந்து கொள்ளாமல் அல்லது புரிந்து கொள்ள விரும்பாமல் இவ்வாறு பேசுவது சிங்கள இனவாதத்தின் பிடியிலிருந்து விடுபடாத தன்மையையே காட்டுகிறது!

'எப்படியோ, இந்த விடயத்தில் சரிநிகர் மிகவும் தெளிவாகவே இருக்கிறது. அது தமிழ் தேசியவாதத்தின் நியாயத்தன்மையை வலியுறுத்துகின்றது. தமிழ் இனவாதத்தை கடுமையாக விமர்சிக்கிறது. தேசிய வாதத்தை இனவாதமாக புரிந்து கொண்டு பேசினால் சரிநிகரை விளங்கிக் கொள்ள முடியாது' என்ற உண்மையை நாம் பின்னர் சிங்கள நண்பருக்கு தெரிவித்தோம்.

70பதுகளுக்கு பிந்திய தமிழ் மொழிப் பாவனையில் எவ்விடத்திலும் 'தேசியம்' என்ற சொல் தமிழ் தேசிய இனத்தின் குரலை மட்டும் குறிப்பதாகவே அன்றி இலங்கையர் தேசியத்தை குறிப்பதாக பயன்படுத்தப்படவில்லை.

ஆனால் சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ இப்பத மாற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. இதற்கு தமிழ் தேசிய இனப்போராட்டம் ஒரு பிரதான காரணம். இம்மொழிகளில் Nationalism , ஜாதிக்கவாதய என்ற சொற்கள் இலங்கையர் தேசியத்தையே குறிக்கின்றன. இதனால் தமிழ் தேசியவாதத்தை குறிக்க இவர்களால் இச்சொற்களை பயன்படுத்த முடியாது. அப்படி பயன்படுத்தினால் அது மேற்கூறிய விபரீத விளைவுகளையே தரும். அவ்வாறே சிங்கள இனவாதத்தையும் Sinhala Nationalism என்று குறிக்கிறார்கள். இதுவும் தவறான புரிதலுக்கு இட்டுச் செல்லும், Sinhala Racism அல்லது Communalism என்ற சொற்கள் கூடப் பொருத்தப்பாடாக அமையலாம். சிங்களத்தில் குறிப்பிடப்படும் 'ஜாதிவாதய' (இனவாதம்) என்ற சொல் தமிழ் தேசியவாதத்தை குறிக்கப் பயன்படுத்தப்படுவது மிகவும் தவறானது. அவ்வாறே 'ஜாதிக்கவாதய' என்ற சொல்லும் கூட ஆபத்தான அபிப்பிராயத்தை ஏற்படுத்துகிறது.

எனவே தேசியவாதம், இனவாதம் என்பன சமகாலத்தில் இங்கு தமிழ் ஆங்கில, சிங்கள மொழிகளில் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது பற்றி ஆழமான ஒரு ஆய்வும் சரியான பதங்களை பொறுப்புடன் பாவிக்கும் பண்பை வளர்ப்பதும் இன ஐக்கிய முயற்சிகட்கு மிக அடிப்படையான ஒரு விடயமாகும்.

இது தொடர்பான வாசகர்களது அபிப்பிராயங்களை கோருகிறோம்.

## கிழக்கு ரிமோர்...

யது. தன்னை ஆயுட்காலத் தலைவராக வர்ணித்தார் அவர். ஆனால் இராணுவம் அவரை 1966இல் பதவி நீக்கியது. 1970இல் அவர் காலமான போது மக்கள் அவரை முற்றாக மறந்து விட்டார்கள் என்றே பலரும் கருதினர். ஆனால் இன்று அவர் தேசியத் தலைவராகப் போற்றப்பட்டு வருகிறார்.

சுகர்னோவின் இடத்திற்கு வந்த சுகாடோ மனித உரிமைமீறல் என்ற சித்தாந்தத்தின் மீது பதவியைப் பிடித்தவர். கம்யூனிஸ்டுகள் என்று நாமம் சூட்டுவதும் அவர்களைச் சித்திரவதை செய்வதுமே இந்த ஆட்சியாளரின் பிரதான இலக்கு. மேற்கு நாடுகளில் இருந்து வேண்டியதைப் பெறுவதற்காக கம்யூனிஸ்ட் ஒழிப்பின் கதாநாயகனாக தன்னைக் காட்டிக் கொண்டார். உச்சி குளிர்ந்து போன மேற்கு நாடுகள் ஓடோடியும் வந்து கடைவிரித்தன. பல்தேசியக் கம்பனிகளுக்கு அவசியமான மலிவான கூலி என்பது இங்கே மிகத் தாராளமாகக் கிடைத்தது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலிருந்து வந்தோர் ஆட்சியாளருக்கு ஆலோசகர் ஆயினர். இராணுவம் அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் தலையிட்டது. ஏகப்பட்ட சுதந்திரம் அவர்களுக்கு. ஆயுதப்படை பன்மடங்காகப் பெருகியது. இராணுவத் தளபதிகள் போர்முனைக்குப் பதிலாக கம்பனிகளின் தலைவர்களாவதில் போட்டியிட்டனர். லஞ்ச, ஊழல், ஒழுக்கச் சீர்கேடுகளை எவருமே தட்டிக் கேட்க முடியாது. அமெரிக்க, கனேடிய, அவுஸ்ரேலிய கம்பனிகளின் வேட்டைக் காடாக இந்தத் தீவுக்கூட்டம் மாறப்பட்டது.

ஜனாதிபதியிடம் நிறைவேற்றுத் துறை அதிகாரம் இருக்கின்றது. 1000 உறுப்பினர்கள் கொண்ட 'மக்கள் ஆலோசனைச் சபை'யினால் இவர் தெரியப்படுவார். இதில் பெரும்பான்மையோரை ஜனாதிபதியே நியமிக்க வழிவகையுண்டு. இதனால் தான் சுகார்ட்டோ 1993 மார்ச்சில், ஆறாவது தடவையாகவும் ஏகமனதாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நல்ல வேளையாக இப்படியொரு அரசியலமைப்பை எமக்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனா அறிமுகமாக்காமல் விட்டுவிட்டார். இலங்கையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நியமிக்கப் போகிறதல்லவா. இந்தோனேசியாவில் சுகார்ட்டோ கூட இப்படியொரு ஆணைக்குழுவை கடந்த ஆண்டு யூனில் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வரும்)

## கடலின் அக்கரை...

யும் (சடவுச்சீட்டு, பணம் போன்றவை) முகவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். தாம் இந்நாடுகளில் எவ்வளவு காலம் தங்கநேரிடும், எப்போது, எவ்வழியால் தாம் விரும்பிய நாடுகளிற்குச் சென்றடையலாம் போன்றவை தொடர்பான விடயங்களெல்லாம் முகவர்களால் தெரிவிக்கப்படுவதில்லை. அப்படி யாராவது கேட்டு விட்டால் அவர்கள் பல வகைகளில் முகவர்களால் தண்டிக்கப்படுகிறார்கள்.

இச் சம்பவங்களின் போது பெரும் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் பெண்களே! முகவர்களினாலும், அவர்களினது சகாக்களினாலும் இப்பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதுடன் அச் சம்பவங்கள் பற்றி வெளியில் தெரிவிக்கக்கூடாது எனவும் எச்சரிக்கப்படுகின்றனர்.

தமிழ் முகவர்களின் மற்றுமொரு புத்திசாலித்தனமான வேலை, பல தமிழர்களை இலங்கையிலிருந்து அழைத்து வந்து இடைவழியில் (பாங்கொங், கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்கா) விட்டு விட்டு மேலதிக பணம் தந்தால் மட்டுமே பயணத்தைத் தொடர முடியுமென கூறிவிடுகின்றனர்.

மேற்கூறிய சம்பவங்களிற்கு இலங்கையிலுள்ள முகவர்களும், வெளிநாடுகளிலுள்ள முகவர்களும் பொறுப்பாளிகளாவார்.

ஒகஸ்ட் 28ம் திகதி அன்று நடந்த சம்பவத்திற்கும் அவர்களை அனுப்பி வைத்த முகவர்களே பொறுப்பாளிகளாவர். ''தண்ணீரைக் கண்டதும் பயமாகத்தான் இருந்தது. ஆனால் மறுப்புத் தெரிவித்திருந்தால் பலவந்தமாக எ' களை இறக்கியிருப்பார்கள். அப் படி முன்பு மறுத்த பலர் தாக்கப்பட்டதாக நாம் அறிந்தோம்.'' என தப்பி வந்தவர்களில் ஒருவர் எமது உரையாடலின் போது தெரிவித்தார். இச்சம்பவத்தில் முகவர்களாகச் செயற்பட்டவர்களில் மொஸ்கோவில் சுரேஸ் என்பவரும், போலந்தில் ராஜா என அழைக்கப்படும் சிவசாமி அருந்தவராஜா என்பவரும் முக்கியமானவர்களாவார்கள். பலர் ஆற்றறைக் கடக்கும் போது ஆற்றோடு அள்ளிச் செல்லப்பட்டார்கள் என்ற செய்தி தெரியவந்தும் இவர்கள் அதுபற்றி அவர்களினது உறவினர்களுக்குத் தெரிவிக்கவில்லை. மாறாக உறவினர்கள் இவர்களோடு தொடர்பு கொண்ட போது இச்சம்பவம் பற்றித் தெரிவிக்காமல் ''அவர்கள் அகதி முகாமில் தங்கியிருப்பார்கள், உங்களுடன் விரைவில் தொடர்பு கொள்வார்கள்'' எனவும் பொய் கூறியிருந்தனர். மே.ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை வந்தடைய முன்னரே சில அகதிகள் தம் உயிர்களை இழந்து விடுகின்றனர். இவற்றிற்கு மேற்கூறிய நாடுகளின் சட்ட நிபுணர்களும், அரச அதிகாரிகளுமே பொறுப்பேற்க வேண்டிய போதிலும் ஒகஸ்ட் 28ந் திகதி அன்று நடந்த சம்பவமானது முகவர்களின் அசட்டைத்தனத்திலும் அவதானமின்மையினாலுமே ஏற்பட்டுள்ளது.

www.tamilarangam.net

# தேர்தல் மோசடிகள்: அதே பழைய கதை!

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவை வெற்றியீட்டச் செய்வதற்காக திட்டமிட்ட வகையிலான முறையீனங்கள் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தேர்தலில் வெற்றி பெறப்போவது சந்திரிகாவே என்ற அபிப்பிராயம் நிலவிய போதும் தேர்தல் குழறுபடிகள் மற்றும் வன்முறைகள் ஆங்காங்கே நடைபெற்றுள்ளன. இவற்றில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் ஐ.தே.கவினரே என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாற்று அபிவிருத்திக்கான நிலையம் (CDA) சுதந்திரமும் நியாயமுமான தேர்தலுக்கான இயக்கமும் இணைந்து கண்டியில் நடாத்திய தேர்தல் கண்காணிப்பின் போது சேகரித்த தகவல்களில் சிலவற்றை இங்கே தருகிறோம். இக்கண்காணிப்பு நடவடிக்கை பஹத்தரதும்பற, ஹர்ஸ்பத்துவ, உடுநுவர, குண்டகசாலை, கம்பளை ஆகிய தேர்தல் பிரிவுகளுக்குள் செய்யப்பட்டதாகும்.

தாக்குதல்கள், ஆள்மாறாட்டம், பலாத்கார வாக்களிப்பு மற்றும் மிரட்டல்கள் போன்ற அனைத்து முன்னைய ஐ.தே.க. பாணி - நடவடிக்கைகளும் இடம் பெற்றுள்ள என்பதையும், பொலிஸார் பெரும்பாலும் செயலற்று நின்றுள்ளதாகவும் இத்தகவல்கள் கூறுகின்றன. இந்த மூன்று நாட்களுக்குள் குழுவிடம் அநேகமாகக் கிடைத்த பயமுறுத்தல், மிரட்டல் சம்பவங்கள் அனைத்தும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களுக்கு எதிராகவே நோக்கியிருந்து. குழுவிடம் முறைப்பாடாகக் கிடைத்த சம்வங்களில் சில வருமாறு:

ஒக்டோபர் 21ம் திகதி பட்டதாரிகள் சங்கத்தின் பகுதிப் பிரதேசச் சங்கத்தின் தலைவரும் ஐ.தே.கவின்ன் ஆதரவாளருமான ஜே.டபிள்யூ.எம்.பண்டார மடுகலேயில் வைத்து பொ.ஐ.முவின் உள்ளூர் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார். காயங்களுக்காக அவர் வத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நவம்பர் 07ம் திகதி மீண்டும் அவரது வீடு கல் வீச்சுக்குள்ளானது. அப்பகுதியிலிருந்த வெளியேறுமாறு கேட்கப்பட்டார். 08ம் திகதி இவ்வீட்டிலிருந்து தனது உடமைகளை அகற்றி வத்தேகமவுக்கு இடம் பெயர்ந்தார். இத்தாக்குதல் தொடர்பாக பன்வில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸ், சந்தேக நபரான கருணாரத்னவ அழைத்து வந்து எச்சரித்துள்ளது.

ஒக்டோபர் 29ம் திகதி, நவரட்ன எனும் ஐ.தே.கட்சி ஆதரவாளர் ஹுலுகந்த எனுமிடத்தில் தாக்கப்பட்டு அவரது பற்கள் உடைக்கப்பட்டன. அவர் அக்காயங்களுக்காக மடுல்கலே வைத்தியசாலையில் ஏழு நாட்களுக்குச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நவம்பர் 05ம் திகதி இரவு, பொ.ஐ.முவின் ஆதரவாளர்கள் குழு ஒன்று வத்தேகமவிலுள்ள ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. ஐ.தே.கவின் கட்சி அலுவலகத்தில் பிரச்ன்னமாயிருந்த நிமல் பிரியந்த ஜயரத்ன, வசந்த ராஜபக்ச ஆகியோர் தாகீகுதல் காரணமாக ஏற்பட்ட காயங்களை எமக்குக் காட்டினர். நவம்பர் 06ம் திகதி வத்தேகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் இலக்கம் 06.11.1994 -10/107 ஆகும். இச்சம்பவத்தின் போது பல வாகனங்கள் பொ.ஐ.மு. ஆதரவாளர்களினால் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. பொலிஸாரிற்கு கொடுத்த முறைப்பாட்டில் பின்வரும் இலக்கங்கள் கொண்ட வாகனங்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களினால் அடையாளம் காணப்பட்டன. அவர்கள் காட்டிய முறைப்பாட்டின் உறுதி செய்யப்பட்ட பிரதியின் படி, 54/9453, 54/8611, 56/062, 54/8610, 52/5717, 53/6333, 32/3939 ஆகும். ஐ.தே. கட்சி ஆதரவாளர்களினால் அடையாளம் காண்ப்பட்டபடி இறுதி இலக்கமுடைய அரசுக்குச் சொந்தமானதெனக் நம்பப்படும் வாகனம், பஹத்த தும்பற பகுதியில் பொ.ஐ.மு. அபேட்சகருக்குச் சார்பாகப் பிரசாரம் செய்யப் பாவிக்கப்பட்டது.

அவர்கள் இப்பகுதியில் ஐ.தே. கட்சி ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பொறுப்பான பல பிரதானமானவர்களுள் பின்வரும் நபர்களைப் பெயர் குறிப்பிட்டனர்.

சாலிய வீரக்கோன், அபேரத்ன (ஒரு பொலிஸ் கான்டபிள்) உபாநந்த பெனான்டோ, இரு இராணுவப் படையினர்.


கண்டியிலுள்ள ஐ.தே.க. காரியாலயத்தில் அங்கிருந்த ஆதரவாளர்களிடமிருந்து பல முறைப்பாடுகள் பெற்றன. அவர்களது எழுத்து மூல வாக்கு மூலங்கள் விபரங்களுக்காக இணைக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.கவின் பா.உ. அப்துல் காதரின் கம்பளை அலுபலகத்திற்கு நாம் சென்ற போது, அநேகமான ஐ.தே.க. தேர்தல் முகவர்கள் தேர்தலுக்கு முந்திய நாளன்று அச்சுறுத்தப்பட்டதாகவும், எனவே தனது கட்சி இந்நிலையங்களில் தேர்தல் முகவர்களை நியமிக்க முடியாதுள்ளது என அவர் உறுதிப்படுத்தினார்.

நாவலப்பிட்டி அனுருத்த குமார வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு நியமிக்கப்பட்ட இரு ஐ.தே.க. தேர்தல் முகவர்களான டபிள்யூ.சுமணஜோதி நந்தகுமார குரே இருவரும் காலை வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் அவர்களிடமிருந்து நியமனப் படிவங்கள், வாக்காளர் இடாப்புகள் ஆகியன பறிக்கப்பட்டன.

பஹத்த தும்பற தேர்தல் பிரிவிலுள்ள கொஸ்கம வாக்களிப்பு நிலையத்திலிருந்து ஐ.தே.க. தேர்தல் முகவர் 12.15 மணியளவில் பல வாகனங்களில், வாக்குகளை மோசடி செய்யும் நோக்கத்தோடு வந்தவர்களால் தாக்குதலுக்குள்ளானார்.

ஜோன் பொஸ்கோ எனப்படும் இன்னொருவர்; ஐ.தே.கவின் ஆதரவாளரான இவர், ஹத்துகொட வாக்களிப்பு நிலையத்திற்கு அருகே பொ.ஐ.மு.ஆதரவாளர்களினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் புகார் செய்ய பா.உ.வின் அலுவலகத்திற்கு வருகை தந்தார். (அவர் நிலமே, விஜேரத்ன என்ற இருவரை அடையாளம் கண்டுள்ளார்.) கடந்த இரு வாரங்க



**தமிழில்: சி.வினோத்**

ளாக அவர் முகங்கொடுக்கும் அச்சுறுத்தல் காரணமாக அவர் தனது வீட்டிலிருந்து வேறிடத்தில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

தோட்டங்களுக்கு இனந்தெரியாத நபர்கள் சென்று தொழிலாளர்களை வாக்களிக்கச் செல்லக் கூடாதென அச்சுறுத்தியுள்ளனர்.

சில சந்தர்ப்பங்களில், தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்காளர்கள் அட்டைகள் பலவந்தமாகப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்க்கும் போது, எமது உள்ளூர் அவதானிகள் பஹத்த தும்பற தேர்தல் பிரிவின் மடுல்கலே பகுதியிலுள்ள சென்.ஜோன்ஸ் ஹில் எனுமிடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வை உறுதிப்படுத்தியுள்ளனர். இத் தோட்டத்தில், முகமூடியணிந்த ஒரு குழு பி.ப.8.00 மணியளவில் தம்மை ஜே.வீ.பியினர் எனக்கூறியபடி வந்து தோட்டத் தொழிலாளர்களை இரும்புக் கம்பிகளினால் தாக்கிவிட்டுதொழிலாளர்களின் வாக்காளர் அட்டைகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்கள் தொழிலாளர்களை வாக்களிக்கச் செல்ல வேண்டாமெனக் கடுமையாக எச்சரித்தனர். பல தொழிலாளர்கள் காயமடைந்தது டன் கதிரவேலு எனப்படும் தொழிலாளி சிகிச்சைக்காகக் கண்டி பொது வைத்தியசாலையில் னுமதிக்கப்பட்டார். இத்தோட்டம் அப்பகுதியின் பிரபல்யம் வாய்ந்த பொ.ஐ.மு. ஆதரவாளர் (ஒரு முஸ்லீம்) ஒருவருக்கு சொந்தமானதாகும்.

8ம் திகதி நள்ளிரவு சிலர் தவுலகலவிலுள்ள ராஜகிரி தோட்டத்திற்கு (ஐ.தே.கட்சி மாகாணசபை உறுப்பினருக்குச் சொந்தமாவது) சென்று அச்சுறுத்திய சம்பவமொன்று பற்றிய தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களுடைய லயன் (Line Rooms) மீது தாக்குதல் நடத்தியும், சில லயன்களின் யன்னல், கதவுகளை உடைத்தும், வானத்தை நோக்கி) 3 துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தும் தொழிலாளர்களை வாக்களிக்கச் செல்ல வேண்டாமெனவும் எச்சரித்துள்ளனர். அவர்கள் தொழிலாளர்களை வாக்காளர் அட்டைகளை வைத்திருக்குமாறும், தேர்தல் முடிந்த பின் அவற்றைக் காட்ட வேண்டுமெனவும் பயமுறுத்தியுள்ளனர். அச்சம் காரணமாக, இவ் லயன் காம்பிராக்களில் வாழும் எல்லா வாக்காளர்களும் (அண்ணளவாக 125) வாக்களிக்கவில்லை. இத்தோட்டத்தின் உரிமையாளர் இச்சம்பவத்தை உறுதி செய்தார்.

தெல்தொட்ட பகுதியில், பொ.ஐ.மு.ஆதரவரளர் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்க வேண்டாமென அச்சுறுத்தியுள்ளார். சில இடங்களில், பொ.ஐ.மு.ஆதரவாளர்கள் தமிழ் வாக்காளர்கள் புள்ளடியிட்ட வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியினுள் போடும் முன் அவற்றை அவ்வவ் வாக்களிப்பு நிலையங்களிலுள்ள பொ.ஐ.மு. தேர்தல் முகவர்களிடம் காட்டிவிட்டே போடவேண்டுமென அச்சுறுத்தியுள்ளனர். நாரங்ஹேன்ன வாக்களிப்பு நிலையத்தில் சில தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தாம் புள்ளடியிட்ட வாக்குச் சீட்டைக் காட்டினர். இந்த வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட வாக்களிப்பு உத்தியோகத்தர் இந்நடவடிக்கையைக் கண்டவுடன், வாக்காளர்களை, புள்ளடியிட்ட வாக்குச் சீட்டை ஏனையோருக்கு காட்ட வேண்டாமென அறிவுறுத்தல் வழங்கியதால் இந்நிகழ்வு நிறுத்தப்பட்டது.

பொதுவாக பரவலான அச்சுறுத்தலும், மிரட்டுதல்களும் ஐ.தே.கவுக்கு அல்லது ஆற்றல் மிகு ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு எதிராக விடப்பட்டிருந்தது. அவர்களின்தேர்தல் முகவர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாயினர்.

பொ.ஐ.முவின் ஆதரவாளர்கள் சிலர் கெல்லிபோகா, மொராகால, தாவாலாதென, மகாபத்தன போன்ற இடங்களில் இருந்த வாக்குச் சாவடிகளில் ஆள்மாறாட்டம் செய்து, பலாத்காரமாக வாக்காளர் அட்டைகளைப் பறிமுதல் செய்து, வாக்களித்துள்ளனர். இவ் வாக்களிப்பு நிலையங்களில் இருந்த சில பொலிஸார் கவனியாது நின்றனர். சிலர் தடுத்த போது பயமுறுத்தப்பட்டனர். அதைவேளை ஆயுதங்களுடன் வந்த இந்த ஆதரவாளர்கள் கோஷ்டி வாக்களிக்கச் சென்ற தொழிலாளர்களது வாக்காளர் அட்டைகளைப் பறிமுதல் செய்து வாக்களித்தது.

அன்று மாலை வெட்டகம நகரசபையின் பொ.ஐ.மு. உறுப்பினர் தலைமையில் பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் யட்டிராவான வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று ஐ.தே.க. தேர்தல் கண்காணிப்பாளரை வெளியேற்றிவிட்டு, 246வாக்காளர் அட்டைகளைப் பறிமுதல் செய்து பலாத்காரமாக வாக்களித்தனர்.

ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஐ.தே.க பா.உ. அப்துல்காதர் உட்பட பலர் பொலிஸார் நடுநிலைமையாகச் செயற்படவில்லையென்றும், பொ.ஐ.மு. ஆதரவாக செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டினர். மேலும், பன்வில பொலிஸ் நிலையத்தில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் பொலிஸாரினால் இம்சைப்படுத்தப்பட்டதாக ஐ.தே.க. ஆதரவாளர்கள் குற்றுஞ்சாட்டினர்.

## ஆறு மாதத்தில்....

வில்லை எனக் கூறிய ஜனாதிபதி, ஆறு மாதங்களின் பின் அமைச்சரவையில் மாற்றம் செய்யும் பொழுது தான் இதனைக் கருத்திற் கொள்வதாகவும், தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அமுல்படுத்துவதிலும், மலையகத் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளிலும் அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் ஒத்துழைப்பார்கள் எனவும் உறுதியளித்துள்ளாரென்றும் தெரியவருகிறது.

இதேவேளை, அமைச்சர் தொண்டமானது பேரனான ஆறுமுகம் தொண்டமானுக்கு சொந்தமான ரான்ஸ் லங்கா நிறுவனத்திற்கு இனிமேல் டிக்கட் விற்பனைக்காக கடன் 2.5கோடி ரூபா இந்திய பணத்தை திருப்பித் தந்த பின்னரும் கூட, தொடர்ந்து இந்நிறுவனத்தை தனது ஏஜன்டாக வைத்திருப்பதா இல்லையா என்றும் ஏயர் லங்கா நிறுவனம் தீர்மானிக்கவுள்ளதாக இன்னொரு தகவல் கூறுகிறது.

சந்திரசேகரனிற்கு ஜனாதிபதி அளித்துள்ள வாக்குறுதி தொண்டாவின் அமைச்சுப் பதவிக்கு ஆபத்தாக முடியப் போகிறதோ என்னவோ?


## சுதந்திர இலக்கிய விழா 1994

**மூன்றாவது சுதந்திர இலக்கிய விழாவை முன்னிட்டு ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கு விருது வழங்கல். விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்ககப்பட்டுள்ளது.**

1. 01.01.1993இல் இருந்து 31.12.1993 வரையான காலப்பகுதிகளில், கவிதை, சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகிய துறைகளில் வெளியாகிய நூல்களை விழாத் தெரிவுக்குழுவே சேகரித்து சிறந்தவற்றுக்கு விருது வழங்கல்.

குறிப்பு: தவறுகளைத் தவிர்க்குமுகமாக் படைப்பாளிகள் தங்களது படைப்புகள் பற்றிய விபரங்களை அமைப்புக் குழுவிற்குத் தந்துதவுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

2. சிறுகதை, கவிதைத் துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டியொன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு பரிசு வழங்கல்.

**போட்டி முடிவுத்திகதி: 15-12-94**

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் சுயமுகவரியிடப்பட்டு , முத்திரை ஒட்டப்பட்டநீண்ட கடித உறை ஒன்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*அமைப்பு குழு,*
*சுதந்திர இலக்கிய விழா -1994*
*இல.61, பழைய கொட்டாவ வீதி*
*மிரிஹான*
*நுகேகொட*
*தொலைபேசி: 811927*


சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இல.18/2 அலோசாலை கொழும்பு 03. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.
22/11/94

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்